தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்

(TAMIL SHORTHAND BOOK)

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்

(சீனிவாசராவ் முறை)

தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்
(TAMIL SHORT HAND BOOK)

[சீனிவாசராவ் முறை]

எழுதியவர்
ஜி.எஸ்.அனந்தநாராயணன், எம்.ஏ.
துணைச் செயலாளர் - தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
விவாதப் பதிவாளர் (ஓய்வு)

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்
நுட்பப்பயிலக வளாகம், தரமணி, சென்னை–600113

நூல் விவர அட்டவணைக் குறிப்பு

நூலின் பெயர்	:	**தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்**
ஆசிரியர்	:	ஜி.எஸ். அனந்தநாராயணன், எம்.ஏ.
பதிப்புரிமை	:	தமிழ் வளர்ச்சி இயக்கம் எழும்பூர், சென்னை - 600 008
வெளியீட்டாளர்	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை மையத் தொழில்நுட்ப பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600 113 தொலைபேசி : 22542992
வெளியீட்டு எண்	:	451
மொழி	:	தமிழ்
முதற் பதிப்பு	:	1965 (5000 படிகள்)
இரண்டாம் பதிப்பு	:	1977 (5000 படிகள்)
மூன்றாம் பதிப்பு	:	1988 (5000 படிகள்)
நான்காம் பதிப்பு	:	1998 (5000 படிகள்)
ஐந்தாம் பதிப்பு	:	2003 (5000 படிகள்)
ஆறாம் பதிப்பு	:	2010 (6000 படிகள்)
பயன்படுத்தப்பட்டதாள்	:	70 ஜி.எஸ்.எம். (தமிழ்நாடு அரசு மேப்லித்தோ தாள்)
நூலின் அளவு	:	12x17.5 செ.மீ
பக்கங்கள்	:	xvi+248
விலை	:	உரூ.75.00
அச்சிட்டோர்	:	யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் 43/95, மில்லர்ஸ் சாலை, கீழ்பாக்கம் சென்னை - 600 010

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

அணிந்துரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப் பட்டுள்ள சில நூல்கள் பலமுறை பலராலும் விரும்பிப் பெறத்தக்கனவாக உள்ளன. **தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்** அவ்வாறு வேண்டப்படும் நூல்களுள் ஒன்றாகும்.

உயிரெழுத்துகள், மெய்யெழுத்துகள் எவ்விதம் எழுதப்பட வேண்டும்; சிறிய சுழி, பெரிய சுழி, நீண்ட சுழி, ர், ல் கொக்கிகள், ல், வ் கொக்கிகள், சிறப்புச் சுருக்கங்கள் பகுதி 1, 2, 3 எனுமாறு சுருக்கெழுத்தாளர்கள் எளிய முறையில் கற்றுப் பயன் படுத்திக் கொள்ள வழிகாட்டியாக அமையும் இந்த நூல் இன்றைய கணினி உலகிலும் தவிர்க்க இயலாத இடத்தைப் பெறுகிறது.

அலுவலகச் சொற்கள், சட்டமன்றம் தொடர்பான சொற்கள், கிழமைகள், மாதங்கள், சிறப்புப் பெயர்கள், ஆங்கில மொழிச் சொற்கள், வடமொழிச் சொற்கள் எனப் பகுத்துச் சுருக்கெழுத்து எழுதிடும் முறைமையினை இந்நூல் பகுதி பகுதியாகவும் படிப்படியாகவும் முறைமை கையாளப்பட்டும் எழுதப்பட்டுள்ளது.

பயிற்சி எனும் தலைப்பில் முறையே பாடங்கள் வைக்கப் பட்டு, சுருக்கெழுத்து நூலைச் சுருக்கமான காலத்திற்குள் பயின்று பயன்பெறத் தக்க வகையில் இந்த நூல் ஒரு நல்ல பயிற்சி ஏடாக அமைகிறது.

பக்கங்கள் தோறும் பட்டியல்கள் வழியே விவரங்கள் முறையே தரப்பட்டுள்ளன. ஜி.எஸ். அனந்த நாராயணன் அவர்கள் இந்நூலைத் தன் அனுபவத்தைக் கொண்டு எளிய முறையில் எவரும் கற்றறிந்து பயன்கொள்ளுமாறு எழுதியுள்ளார். அவருக்கு எம் பாராட்டுக்கள்.

இந்நூலின் தேவை கருதி ஆறாம் பதிப்பாக இந்நூல் இந் நிறுவனத்தால் தமிழுலகிற்குக் கொணர்வதில் மிகுந்த மகிழ்ச்சியையும் பெருமையையும் கொள்கிறது.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு. இரா. சிவக்குமார் இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்

ஆசிரியர் குறிப்பு

புலவர்கள் பாடல்களைச் சொல்லச் சொல்ல அதே விரைவோடு அவற்றை அப்படியே எழுதி நல்கும் கலையில் கைதேர்ந்தவர்கள் பழங்காலத்திலேயே தமிழகத்தில் இருந்துள்ளனர். இவர்கள் கையாண்ட முறையைத்தான் நாம் இப்போது அறிய முடியவில்லை.

இராவ்சாகிப் ம. சீனிவாசராவ்
(1864 - 1924)

மேலை நாடுகளில் ஆங்கில மொழிக்குச் 'சாமுவேல் டெய்லர்' என்பவர் 1786இல் ஒரு சுருக்கெழுத்து முறையைக் கண்டு பிடித்தார்.

இதனைத் தழுவி 'வில்லியம் ஹார்டிங்ஸ்' என்பவர் 1823இல் ஒரு நூலை வெளியிட்டார். 'சர் அய்சக் பிட்மன்' ஒலி அடிப்படையிலான ஒரு முறையைக் கண்டுபிடித்து 1837இல் வெளியிட்டார். 1882இல் 'ஜே. எம். ஸ்லோவன்' என்பவர் ஒரு முறையை வகுத்துத் தந்தார். 1888இல் 'ஜான் ராபர்ட் க்ரெக்' என்பவர் ஒரு முறையைக் கண்டுபிடித்தார். இப்படிப் பல சுருக்கெழுத்து முறைகள் தோன்றக் காரணம், பணிகள் விரைவாக நடைபெறச் சுருக்கெழுத்தாளர்களின் தேவை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வந்ததுதான்.

ஆங்கிலேய ஆட்சியில் அடிமைப்பட்டிருந்த நம் நாட்டிலும் வேலைவாய்ப்புப் பெறுவதற்கு, ஆங்கிலத்தையும், ஆங்கிலச் சுருக்கெழுத்தையும் கற்றுக் கொள்வது தேவையாயிற்று. இங்கும் பிட்மன், ஸ்லோவன், க்ரெக் முறைகள் பரவின.

எம். சீனிவாசராவ் ஆங்கிலப் பிட்மன் சுருக்கெழுத்தைக் கற்றவர். **London Phonography Society** வழங்கிய **Society's Teacher's Diploma** பட்டயம் பெற்றவர். பிறருக்குச் சுருக்கெழுத்துக் கலையைச் சொல்லிக் கொடுக்கும் பணியிலேயே ஈடுபட்டும் வந்தார்.

அந்தக் காலத்தில் வேலூரில் காவலர்களுக்குப் பயிற்சி கொடுக்க **Provincial Police Training School** என்ற பள்ளி இருந்தது. அதில் பயிற்சி பெறும் உதவி ஆய்வாளர்களுக்கு ஆங்கிலச் சுருக்கெழுத்தைக் கற்றுத் தரும் பகுதிநேரத் தற்காலிக ஆசிரியராகச் சீனிவாசராவை அரசு 1903இல் நியமித்தது. சீனிவாசராவிடம் சுருக்கெழுத்தைக் கற்ற உதவி ஆய்வாளர்கள் தங்கள் தங்கள் காவல் நிலையங்களில் காவல் நிலையப் பணிகளோடு அவர்களது வட்டாரத்தில் நடக்கும் பொதுக் கூட்டங்களுக்கும் சென்று அங்கு ஆங்கிலத்தில் பேசியவர்களின் பேச்சைச் சுருக்கெழுத்தில் எடுத்து அரசுக்கு அனுப்பியும் வந்தார்கள்.

அடுத்த சில ஆண்டுகளிலேயே சுதந்திரப் போராட்ட இயக்கத்தினர் போக்கில் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டது. அவர்கள் வழிநடையாகவே ஊர் ஊராகச் சென்று தெரு முனைகளிலேயே கூட்டங்களை நடத்தினர். மக்கள் பேசும் மொழியிலேயே பேசினர். ஆங்கிலேய அரசுக்கு எதிராகப் பேசும் அரசியல் தலைவர்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கும் நோக்கில், ‘இனி வட்டார மொழியில் பேசுபவர்களின் பேச்சும் அப்படியே சுருக்கெழுத்தில் எடுக்கப்பெற்று அரசுக்கு அனுப்பப்பெற வேண்டும்’ எனத் தில்லி அரசு மாநில நிருவாகத்திற்கு அறிவுறுத்தியது. மேலை நாட்டு ஆங்கிலச் சுருக்கெழுத்து முறைகளைத் தழுவி, நமது இந்திய மொழிகள் அனைத்துக்கும் சுருக்கெழுத்து முறைகள் தோன்ற இதுவே காரணமாக அமைந்தது. வடபுலத்தில் இந்துஸ்தானி, மராத்தி, வங்காளி ஆகிய பல மொழிகளுக்கும் சுருக்கெழுத்து நூல்கள் தொகுக்கப்பட்டன.

வி. கிருஷ்ணமாச்சாரி என்பவர் 1908ஆம் ஆண்டு **Indian Phonography** என்ற நூலை அச்சிட்டு, இந்நூலின் வாயிலாகத் தமிழ், தெலுங்கு, கன்னடம், உருது போன்ற பல மொழிகளுக்கும் சுருக்கெழுத்து எழுதலாம் என அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்தார்.

வேலூர்க் காவலர் பயிற்சிப் பள்ளியில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் எனத் தென்னிந்திய மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட உதவி ஆய்வாளர்கள் சீனிவாசராவிடம் ஆங்கிலச் சுருக்கெழுத்தைக் கற்றுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் துணையுடன் சீனிவாசராவ் 1902இல் வெளியான பிட்மன் இருபதாம் நூற்றாண்டுப் பதிப்பை அடிப்படையாகக் கொண்டு ஒரு தமிழ்ச் சுருக்கெழுத்து நூலைத் தொகுத்தார். அதனைத் தம் செலவிலேயே 1909ஆம் ஆண்டு அச்சிட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்தார்.

இந்த இருவர் நூல்களின் நம்பகத்தன்மையை அரசு ஆய்வு செய்து, 1910ஆம் ஆண்டு 'சீனிவாசராவ் முறைக்கு' ஒப்புதல் அளித்தது. சீனிவாசராவின் பணியை நிலைப்படுத்தியது. சீனிவாசராவ் தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளுக்கும் சுருக்கெழுத்து நூல்களைத் தொகுத்தார். இவற்றை அரசே அச்சிட்டு வெளியிட்டது. சீனிவாசராவ் கட்டுப்பாட்டின் கீழ் Police Shorthand Bureau என்கிற அமைப்பை அரசு 1919இல் உருவாக்கியது. சுருக்கெழுத்துக் கலைக்குச் சீனிவாசராவ் ஆற்றும் பணியைப் பாராட்டி, அவருக்கு 1920இல் 'இராவ் சாகிப்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

1913இல் 'Pitman Centenary' பதிப்பு வெளியாகி இருந்தது. அதையொட்டித் தம் தமிழ்ச் சுருக்கெழுத்து நூலை விரிவாக்கம் செய்து பதிப்பிக்கச் சீனிவாசராவ் முயன்று கொண்டிருந்தார். எதிர்பாராத வகையில் 1924 இல் அவர் இயற்கை எய்தினார். அவர் தயாரித்து வந்த நூலை, Tamil Shorthand Instructor என்ற பெயரில் அரசு 1929ஆம் ஆண்டு வெளியிட்டது.

என்.சுப்பிரமணியம் என்பவர் ஆங்கில ஸ்லோவன் சுருக்கெழுத்து முறையைக் கற்றுத் தேர்ந்தவர். சென்னை மாநகராட்சி மன்றத் தலைமைச் செய்தியாளராக ஓய்வு பெற்றவர். இவர் ஸ்லோவன் முறையைத் தழுவி ஒரு தமிழ்ச் சுருக்கெழுத்து நூலை 1935இல் வெளியிட்டார். இதன் இரண்டாம் பதிப்பினை 'லிப்கோ' பதிப்பகத்தார் 1959 இல் வெளியிட்டனர்.

பி.ஜி. சுப்பிரமணியம் என்பவர் ஆங்கிலப் பிட்மன் முறையைக் கற்றவர். தஞ்சை மாவட்ட நீதிமன்ற சிரஸ்தாராக ஓய்வு பெற்றவர். இவர் ஒரு தமிழ்ச் சுருக்கெழுத்து நூலை வெளியிட்டார். 'தமிழ்ச் சுருக்கெழுத்து தற்போதினி' என்ற பெயரில் இந்நூல் தருமை ஆதீனத்தால் 1939இல் பதிப்பிக்கப்பட்டது.

நான் சீனிவாசராவ் முறையில் தமிழ்ச் சுருக்கெழுத்தைக் கற்று, உயர்வேகத் தேர்வில் தேர்ச்சி பெற்று, சட்டமன்றத் தமிழ்ச் செய்தியாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். எனக்கு 'முறையாகத் தமிழ் கற்க வேண்டும்; Pitman 'New Era' பதிப்பையொட்டித் தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் ஒன்றைத் தொகுத்து வெளியிட வேண்டும் என்கிற பேரவா இருந்தது. இந்த இரண்டுமே நிறைவேற எனக்குத் துணையாக

அமைந்தவர் எனது ஆசிரியப் பெருந்தகை அமரர் கி.வா. ஜகந்நாதன் அவர்கள் தான். இப்பேராசான் வழிகாட்டலுடன்தான் நான் இந்தத் தமிழ்ச் சுருக்கெழுத்து நூலைத் தொகுத்தேன். அதனை அவரே தம் கைப்படத் திருத்தி, ஒழுங்குற அமைத்துக் கொடுத்தார். எனக்கும் முறையாகத் தமிழைக் கற்றுத் தந்து, சென்னைப் பல்கலைக் கழக வித்துவான், பி.லிட்., எம்.ஏ., பட்டதாரியாக உயர்வடையச் செய்தார். சட்டமன்றச் செயலகச் செய்தியாளர்கள் பலரும், குறிப்பாக அமரர் கே.டி. சுந்தரமூர்த்தி, தலைமைச் செய்தியாளராக ஓய்வு பெற்றுள்ள பி. கே. லட்சுமிநாராயணன் ஆகியோரும் இந்தத் தொகுப்புப் பணியில் எனக்குத் தொடர்ந்து உதவி வந்திருக்கிறார்கள். இந்தப் பெருமக்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டவனாவேன்.

இந்நூல் தமிழ்ச் சுருக்கெழுத்துப் பயில்வோருக்குப் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறேன்.

ஜி.எஸ். அனந்தநாராயணன்

'கணயாரம்'
19, அலுவலர் குடியிருப்பு,
இராசாராம் மேத்தா நகர்,
சென்னை - 600 029.

உள்ளடக்கம்

		பக்கம்
	அணிந்துரை	iii
	முன்னுரை	v
	ஆசிரியர்குறிப்பு	vi
அத்தியாயம்		
1.	மெய்யெழுத்துக்கள்	1
2.	உயிரெழுத்துக்கள்	7
3.	இடைப்படும் உயிர்களும் எழுதும் இடமும்	13
4.	மாற்று உருவங்கள் ர / ற ஹ, க்ஷ	18
5.	ஈருயிர்கள்	23
6.	வேற்றுமைகள்	29
7.	சுருக்கம்	33
8.	சிறிய சுழி	38
9.	பெரிய சுழி	45
10.	நீண்ட சுழி	50
11.	ர், ல் கொக்கிகள்	54
12.	குறுக்கிடும் உயிர்களும், கொக்கிகளுக்கு முன் சுழிகளும்	60
13.	த-கொக்கி	65
14.	ன், வ் கொக்கிகள்	68
15.	ள் ழ்-கொக்கி	74
16.	த, வ, ஷ, ள்ள - மாற்று உருவங்கள்	79
17.	ல ஷ மேலும், கீழும்	82
18.	பாதியாக்கும் முறை	86
19.	இரட்டிப்பு முறை	93
20.	எண்களும், பேச்சை எடுக்கும் முறையும்	98
21.	கூட்டு மெய்கள்	108
22.	முன் ஒட்டுகளும் பின் ஒட்டுகளும்	115
23.	வேறுபாட்டுக் குறிகள்	122
24.	சிறப்புச் சுருக்கங்கள் (பகுதி -1)	130
25.	சிறப்புச் சுருக்கங்கள் (பகுதி-2)	139
26.	சிறப்புச் சுருக்கங்கள் (பகுதி-3)	152
27.	வெட்டும் முறை	160
28.	சிறப்புச் சுருக்கங்கள் (பகுதி-4)	173

இணைப்புகள்

1. அரசு நிர்வாகத்தில் அடிக்கடி பயன்படுத்தப்படும் சொற்கள்........................ 183
2. வருவாய்த் துறை சம்பந்தமான சொற்கள்........................ 187
3. நீதிமன்றம் சம்பந்தமான சொற்கள்........................ 188
4. சட்டமன்றம் சம்பந்தமான சொற்கள்........................ 190
5. கிழமைகள்........................ 191
6. மாதங்கள்........................ 191
7. சிறப்புப் பெயர்கள்........................ 192
8. ஆங்கில மொழிச் சொற்கள்........................ 192
9. வடமொழிச் சொற்கள்........................ 193
10. தனிக்குறிச் சொற்கள் மெய்க் குறிகளின் வரிசையில்........................ 194
11. பயிற்சிகளுக்கான குறிவிளக்கம்........................ 197
12. பொருள் குறிப்பு அகராதி........................ 236

தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்

(ஒலிக்குறி)

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

அத்தியாயம்—1

மெய்யெழுத்துக்கள்

எழுத்து: *(1) சொல்லிற்கு முதற் காரணமாக உள்ள ஒலியே எழுத்தெனப்படும். எழுத்திற்கு ஒலி வடிவம், வரி வடிவம் என இருவகை வடிவங்கள் உண்டு. எழுத்துக்கள் பேசப்படும்பொழுது ஒலிவடிவம் பெறும். எழுதப்படும்பொழுது வரிவடிவம் பெறும். பேசப்படும்பொழுது எழுத்துக்கள் பெறும் ஒலி வடிவத்திற்குத் தக்கபடியே சுருக்கெழுத்து அமையும்.*

முதலெழுத்து: *(2) எழுத்துக்கள் முதலெழுத்துக்கள், சார் பெழுத்துக்கள் என இரு வகைப்படும். மற்ற எழுத்துக்கள் உண்டா வதற்குக் காரணமாகவுள்ள எழுத்துக்கள் முதலெழுத்துக்களாம். அவை உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள் என இரு வகைப்படும்.*

மெய்யெழுத்துக்கள்: *(3) க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்ற இப்பதினெட்டும், ஜ், ஷ், ஸ், ஹ், க்ஷ் என்ற வடமொழி எழுத்து ஐந்துமாகச் சேர்ந்து மெய்யெழுத்துக்கள் 23 ஆகும்.*

மெய்க்குறிகள்: *(4) எல்லா மெய்யெழுத்து ஒலிகளுக்கும் (ண், ய், ழ், ள், ஹ், க்ஷ் இவை தவிர) கீழே வரும் படங்களில் உள்ள நேர்கோடு, வளைவு கோடுகளைக் கொண்டே மெய்க்குறிகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இதை மெய்க்குறிகள் அட்டவணையில் காண்க.*



ஜோடி மெய்க்குறிகள்: *(5)* பலகை, கம்பம் என்ற வார்த்தைகளில் வரும் 'ப' என்ற எழுத்தைக் கவனிக்க. வரிவடிவத்தில் இரண்டிற்கும் தமிழில் வேறுபாடு இல்லையென்றாலும், ஒலி வடிவத்தில் 'பலகை' என்பதிலுள்ள 'ப'வுக்கும், 'கம்பம்' என்பதிலுள்ள 'ப'வுக்கும் வேறுபாடு உண்டு. இவ்வேறுபாட்டைக் குறிக்க, எழுதும்போது முன்னது மெல்லவும், பின்னது சற்று அழுத்தியும் எழுதப்படும். அழுத்தி எழுதப்படுகிற மெய்க்குறிக்குரிய எழுத்தின் அடியில் புள்ளி வைத்துக் காட்டப்படும்.

ப, ப̣, ட, ட̣, ச்ச, ஜ,

க, க̣, த, த̣

இவை ஜோடி மெய்க்குறிகள் எனப்படும்.

கொக்கியுள்ள மெய்க்குறிகள்: *(6)* வளைவுகோடு, நேர்கோடு ஆகியவற்றின் ஆரம்பத்தில் சிறிய கொக்கியோ, பெரிய கொக்கியோ சேர்த்துச் சில மெய்க்குறிகளாகக் கொடுக்கப்பட்டிருப்பதைக் கீழே பார்க்க.

ண, ய, க்ஷ, ழ, ள.

இந்த ஐந்தும் கொக்கியுள்ள மெய்க்குறிகள் எனப்படும். ஆனால் ஹ' என்பதற்கு ஆரம்பத்தில் சிறிய சுழி இருப்பதைக் கவனிக்க.

(7) என்ற வட்டத்தின் மேல்புற இடது வளைவு 'ல'. வலது வளைவு 'ர/ற'. கீழ்ப்புற இடது, வலது வளைவுகள் 'ஷ'. 'ஷ' வை அழுத்தி எழுதினால் 'வ' என்று ஆகும்.

(8) 'ல' பெரும்பாலும் எழுதும் வரியிலிருந்து மேல்நோக்கி எழுதப்பட்டாலும், சில சமயம் கீழ் நோக்கியும் எழுதப்படும். அவ்வாறே 'ஷ' எழுதும் வரியை நோக்கி மேலிருந்து கீழ்ப்பக்கமாக எழுதப்பட்டாலும் சில சமயம் மேல் நோக்கியும் எழுதப்படும். அதற்கான விதிகள் பின்பு சொல்லப்படும்.

(9) 'ள்' என்பதோடு 'ள' சேர்ந்து 'ள்ள' என்று வந்தால் அதைக் காட்ட என்று, குதிரை லாடம் போல, இரண்டு விதமாக எழுதப்படும். 'ம்' என்பதோடு 'ப' சேர்ந்து 'ம்ப' என்று வந்தால் அதைக் காட்ட 'ம்' என்பது அழுத்தி ம்ப' என்று எழுதப்படும்.

(10) வ, த, ஷ, ர/ற, ஹ, க்ஷ, ள்ள ஆகியவற்றுக்கு ,இரு

உருவங்கள் கொடுக்கப்பட்டிருப்பதை மெய்க்குறிகள் அட்டவணையில் காண்க. எந்த எந்த உருவத்தை எவ்வெப்போது எழுதுவது என்பதற்கான விதிகள் பின்பு சொல்லப்படும்.

மெய்க்குறிகளின் வகைகள் *(11)* மெய்க்குறிகள் எழுதும் வாகையொட்டிக் கீழ் கோடுகள், மேற்கோடுகள், படுக்கைக் கோடுகள் என மூன்று வகைகளாகப் பிரிக்கப்படும்.

(12) எழுதும் வரியை நோக்கி மேலிருந்து கீழ்ப்பக்கமாக எழுதப்படுவனவெல்லாம் கீழ் கோடுகள்.

ப, பு, ட, டு, ச்ச, ஜ, ஷ, வ,


த, தூ, ச/ஸ, ர/ற, ஹ, க்ஷ.

(13) எழுதும் வரியிலிருந்து மேல்நோக்கி எழுதப்படுவன வெல்லாம் மேற்கோடுகள்.


ல, ர/ற, ய, ள, க்ஷ ஹ.

(14) எழுதும் வரியிலேயே இடமிருந்து வலமாக எழுதப்படுவன வெல்லாம் படுக்கைக் கோடுகள்.


க, கு, ழ, ம, ம்ப, ந/ன,


ஞ, ங, ண, ள்ள.

(15) மெல்லிய கோடுகள் எழுதும் வரியிலிருந்து மேல் நோக்கியோ, எழுதும் வரியை நோக்கிக் கீழ் நோக்கியோ எழுதப்படுவதை மேலே பார்க்க. ஆனால் அழுத்தமான கோடுகள் கீழ்நோக்கியே எழுதப்படுவதன்றி மேல் நோக்கி எழுதப்படுவதில்லை.

மெய்க்குறிகளின் நீளம்: *(16)* $\frac{1}{6}$ அங்குல நீளத்தில் *(4.2 மி.மீ.)*, ஒரே அளவாக மெய்க்குறிகளை எழுதிப் பழக வேண்டும். இந்த அளவைப் பாதியாக்கி எழுதும் முறையும், இரட்டிப்பாக்கி எழுதும் முறையும் பின்பு வரும் ஆதலால் வரையறையாக ஒரே அளவில் இருப்பது அவசியம்.

மெய்க்குறிகளின் பெயர்கள்: *(17)* நன்றாகப் பழக்கமாகும் வரையில், மெய்க்குறிகளை எழுதும்பொழுது அவற்றின் ஒலியையும் வாய்விட்டுச் சொல்லிக்கொண்டே எழுத வேண்டும். அதாவது என்பதை 'ப' என்று சொல்லிக்கொண்டே எழுத வேண்டும்.

மெய்க்குறிகள்—அட்டவணை—1

மெய்யெழுத்து	ஒலி	குறி	எழுதும் வாகு	இவ்வொலிகள் வரும் வார்த்தைகள்	மெய்யெழுத்து	ஒலி	குறி	எழுதும் வாகு	இவ்வொலிகள் வரும் வார்த்தைகள்
ப்	ப			பலகை	ம்	ம			மலை
ப்	ப̣			பம்பாய்	ம்ப	ம்ப			தம்பி
ட்	ட			கட்டு	ந்/ன்	ந/ன			நடி, ஆனி
ட்	ட̣			படம்	ஞ்	ஞ			ஞானம்
ச்	ச்ச			பச்சை	ங்	ங			பாசாங்கு
ஜ்	ஜ			ஜாடி	ண்	ண			பணி
க்	க			கலம்	ல்	ல			லாபம்
க்	க̣			கங்கை	ய்	ய			யானை
ஷ்	ஷ			வேஷம்	ள்	ள			வளம்
வ்	வ			வாக்கு	ள்ள	ள்ள			உள்ளம்
த்	த			தகப்பன்	ர்/ற்	ர/ற			அருவி, ஆறு
ச்/ஸ்	ச/ஸ			பசு, ஸரஸ்வதி	ஹ்	ஹ			ஹாரம்
த்	த̣			அந்தம்	க்ஷ்	க்ஷ			மோக்ஷம்
ழ்	ழ			அழகு					





(18) ச்ச, ர/ற என்ற இரண்டும் ஏறக்குறைய ஒரே மாதிரியாகக் காணப்பட்டாலும் எழுதும் போக்கில் வேறுபாடு உண்டு. அதாவது ச்ச குத்துக் கோட்டிலிருந்து *30* டிகிரி கோணத்தில் என்று கீழ்நோக்கியே எழுதப்படும். படுக்கைக் கோட்டிலிருந்து *30* டிகிரி கோணத்தில் ர/ற (மேல்) என்று மேல் நோக்கியே எழுதப்படும்.

பயிற்சி—1

1. அட்டவணை *1*—ல் கண்ட மெய்க்குறிகளை அடிக்கடி எழுதிப் படிக்க.

2. முதல் வரியில் உள்ளது போல் படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக:



3. கீழ்க்கண்ட படங்களில் என்ன என்ன மெய்க்குறிகள் இருக்கின்றன? அவற்றைத் தனித்தனியாக எழுதிப் பழகுக.

சேர்க்கைக் கோடுகள்: *(19)* கோடுகள் சேர்க்கப்படும் பொழுது கையை எடுக்காமலேயே சேர்த்து எழுதப்படும். அப்படிச் சேர்க்கும் பொழுது முன்கோட்டின் இறுதியும், பின் கோட்டின் தொடக்கமும் இணையும்படி சேர்த்து எழுதப்படுவதைக் கீழே காண்க.

பயிற்சி—2

படித்து, எழுதிப் பார்க்க



(20) ஆனால் ஒரு வளைவு கோட்டு மெய் இரட்டிக்கும் பொழுது வளைவு கோட்டின் சாதாரண அளவு இரண்டு பங்கு நீட்டித்து எழுதப்படும். எ.கா.



பாடச் சுருக்கம்

1. சுருக்கெழுத்து, ஒலி வடிவத்திற்குத் தக்கபடி எழுதப்படும்.

2. மெய்யெழுத்து ஒலிகளுக்கு நேர்கோடு, வளைவு கோடுகளைக் கொண்டே குறிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

3. மெய்க்குறிகள் 34. அவை, கீழ்க் கோடுகள் 17, மேற்கோடுகள் 6, படுக்கைக் கோடுகள் 11 என மூன்று வகைகளாகப் பிரிக்கப்படும்.

4. மெல்லிய கோடுகள் மேல் நோக்கியோ, கீழ்நோக்கியோ எழுதப்படும். ஆனால் அழுந்திய கோடுகள் மேல்நோக்கி எழுதப்படுவதே இல்லை.

5. கோடுகள் $\frac{1}{6}$ அங்குல நீளத்தில் (4.2 மி.மீ.), ஒரே அளவாக எழுதப்படும்.

6. 'ச்ச' எப்பொழுதும் குத்துக் கோட்டிலிருந்து 30 டிகிரி கோணத்தில் கீழ் நோக்கியும், ர/ற (மேல்) படுக்கைக் கோட்டிலிருந்து 30 டிகிரி கோணத்தில் மேல் நோக்கியும் எழுதப்படும்.

7. கோடுகள் சேர்க்கப்படும்பொழுது கையை எடுக்காமல், முன் கோட்டின் இறுதியும் பின் கோட்டின் தொடக்கமும் இணையும்படி சேர்த்து எழுதப்படும்.

8. வளைவு கோட்டு மெய்கள் இரட்டிக்கும்பொழுது, வளைவு கோட்டின் சாதாரண அளவு இரண்டு பங்கு நீட்டித்து எமகப்படும்.

(விதிகள்: 1-20)

அத்தியாயம்—2

உயிரெழுத்துக்கள்

உயிரெழுத்துக்கள்: *(21)* அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு.

(22) உயிரெழுத்துக்கள் குறில், நெடில் என இரு வகைப்படும். குறுகிய ஓசையுடைய அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தெழுத்துக்களும் (குற்றெழுத்து) குறில். நீண்ட ஓசையுடைய ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என்னும் ஐந்தும் (நெட்டெழுத்து) நெடில். ஐ, ஔ இரண்டும் நெடிலானாலும் இரண்டு உயிர்கள் இணைந்த ஈருயிர்கள் ஆதலால் இவை பின்பு வரும்.

உயிர்க்குறிகள். *(23)* குறில் 'அ, எ, இ' மூன்றும் மெல்லிய புள்ளியாலும், 'ஒ, உ' இரண்டும் மெல்லிய குறுங்கோட்டாலும் காட்டப்படும்; நெடில் 'ஆ, ஏ, ஈ' மூன்றும் அழுந்திய புள்ளியாலும், 'ஓ, ஊ' இரண்டும் அழுந்திய குறுங்கோட்டாலும் காட்டப்படும்.

	குறில்		நெடில்	
1.	அ ·		ஆ •	
2.	எ ·	– ஒ	ஏ •	– ஓ
3.	இ ·	– உ	ஈ •	– ஊ

உயிர்க்குறிகளின் இடம். *(24)* உயிர்க்குறிகளைப் போட ஒவ்வொரு கோட்டிற்கும் அருகில் முதல் இடம், இரண்டாம் இடம், மூன்றாம் இடம் என மூன்று இடங்கள் உண்டு. அதனால் அவ்விடங்களில் போடப்படும் உயிர்கள் முதலிடத்து உயிர்கள், இரண்டாமிடத்து உயிர்கள், மூன்றாமிடத்து உயிர்கள் எனக் கூறப்படும். கோடு ஆரம்பமாகும் இடத்திலிருந்து உயிர்க்குறியின் இடங்கள் எண்ணப்படும். அதனால் கீழ்க் கோடானால் மேலிருந்து கீழும், மேற்கோடானால் கீழிருந்து மேலும், படுக்கைக் கோடானால் இடமிருந்து வலமும் எண்ணப்படும்.



உயிர்க்குறிகளின் உபயோகம்: *(25)* மெல்லிய புள்ளியை முதலிடத்தில் போட்டால் அது உயிர் 'அ' என்பதையும், இரண்டாம் இடத்தில் போட்டால் அது உயிர் 'எ' என்பதையும், மூன்றாமிடத்தில் போட்டால் அது உயிர் 'இ' என்பதையும் காட்டும்; அவ்வாறே மெல்லிய குறுங்கோட்டை இரண்டாமிடத்தில் போட்டால் அது உயிர் 'ஒ' என்பதையும், மூன்றாமிடத்தில் போட்டால் அது உயிர் 'உ' என்பதையும் காட்டும்.

(26) உயிர்க்குறிலுக்கு மெல்லிய உயிர்க்குறிகளை எந்த எந்த இடங்களில் போட்டோமோ அந்த அந்த இடங்களில் அழுந்திய உயிர்க்குறிகளைப் போட்டால் அவை அந்த அந்தக் குறிலுக்கு இனமான நெடிலையே காட்டும். எழுதும்போது மெய்க்குறிகளை எழுதிவிட்டே உயிர்க்குறிகள் தனித்துப் போடப்படும். எ.கா.



காவி, கவி, கேடு, கெடு, கோடு, கொடு, பாரி, பரி

பயிற்சி—3

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



பயிற்சி—4

சுருக்கெழுத்தில் எழுதுக

கோணி, க்தி, பேறு, மொழி, கனவு, தணி,

பஞு, மேனி, மேழி, தள்ளி, பரவ, நோவு, நொடி,

கடி, கழனி, வாணி, பாக்கி, பணி, மதி,

பழக, கோடி, கொடி, பாக்கு, மரபு, மெள்ள.

ஆரம்ப உயிர்க்குறிகள். (27) உயிரெழுத்தை ஆரம்பத்தில் கொண்டு பல வார்த்தைகள் வருகின்றன. எ.கா. அடி, ஒடி, இடி. இவற்றைக் காட்ட முன் போலவே மெய்க்குறிகளுக்கு முன் அடி, ஒடி, இடி என்று உயிர்க்குறிகளைப் போட்டுக் காட்டலாம். இருந்தாலும் பின்வரும் கோடுகளுடன் சேர்த்து எழுதி, சுலபமாகப் படிக்கும் வசதியை உத்தேசித்து, ஆரம்பத்தில் மெய்க்குறிகளுக்கு முன்னால் வரும் உயிர்களுக்குப் புள்ளியில்லாத வேறு குறிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

(28) உதாரணமாக அ/ஆ, இ/ஈ, உ/ஊ, எ/ஏ, ஒ/ஓ என்பனவற்றுக்கு இரண்டிரண்டு உருவங்கள் கொடுக்கப்பட்டிருப்பதை ஆரம்ப உயிர்க்குறி அட்டவணையில் பார்க்க. மெய்க்குறிகளோடு சேர்த்து எழுதும்போது இவற்றில் எந்த உருவம் அவற்றோடு வாகாகச் சேர்த்து எழுத வருகிறதோ அந்த உருவம் சேர்த்து எழுதப்படும். இக்குறிகளில், குறில், நெடில், இரண்டிற்கும் வேறுபாடு இல்லை. சந்தர்ப்பத்தைக் கொண்டே அவ் வேறுபாட்டை அறிய வேண்டும். எ.கா.

அடி/ஆடி, அம்பல்/ஆம்பல், அணி/ஆணி.

(29) இந்த ஆரம்ப உயிர்க்குறிகளை எந்த எந்த மெய்க்குறிகளோடு சேர்த்து எழுதுவது வாகில்லாமல் இருக்கிறதோ அங்கெல்லாம் மெய்க்குறிகளுக்கு முன்னால் இயல்பான புள்ளி உயிர்க்குறிகளே போட்டுக் காட்டப்படும். எ.கா.

ஆட்சேபி, ஏற்க, ஊசி.

(30) இந்த வகையில் ஒரு கோட்டுக்கு முன் போடும் உயிர்க்குறிகள் அந்தக் கோட்டுக்குரிய மெய்க்கு முன்னால் படிக்கப் படும். பின்வரும் உயிர்கள் அந்தக் கோட்டுக்குரிய மெய்க்குப் பின்னால் படிக்கப்படும்.

(31) கீழே வரும் அட்டவணையில் ஆரம்ப உயிர்க்குறிகளுக்குரிய புள்ளியில்லாத வேறு குறிகளையும், அவற்றில் எந்த எந்த உருவம் எந்த எந்த மெய்க்குறியோடு சேர்க்க வாகானது என்பதையும் காண்க. மேலும், ஆரம்ப உயிர்க்குறிகளைச் சேர்க்க வாகில்லாத மெய்க்குறிகளுக்குமுன் புள்ளி உயிர்க்குறிகளே போடப்பட்டிருப்பதையும் காண்க.

ஆரம்ப உயிர்க்குறி—அட்டவணை—2

உயிர்	குறி	வாகாகச் சேர்த்து எழுதப்படும் விதம்
அ/ஆ		
இ/ஈ		
உ/ஊ	மேல் / கீழ்	
எ/ஏ		
ஒ/ஓ		

(32) மெய்களுக்குமுன் வரும் உயிர்களுக்கு ஆரம்ப உயிர்க் குறிகளைச் சேர்த்து எழுதுவதையும், மெய்களுக்குப்பின்பு வரும் உயிர்களுக்கு புள்ளி உயிர்க்குறிகளே போடப்படுவதையும் கீழே வரும் பயிற்சியில் காண்க.

பயிற்சி—5

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



ஈற்று உயிர்க்குறிகள்: *(33)* 'ஆ, ஏ, ஓ' ஆகிய மூன்று உயிர்களும் மிக அதிகமாக வார்த்தைகளின் ஈற்றில் வரும்.

வார்த்தைகளின் ஈற்றில் வரும் 'ஆ' என்னும் உயிர், வினாப் பொருளையோ, வியப்புப் பொருளையோ அளிக்கும். 'ஏ' என்னும் உயிர் வினாப் பொருள், சொல்லழுத்தம், எதிர்மறை முதலியவற்றைக் குறிக்கும். 'ஓ' என்னும் உயிர் வினாப் பொருள், ஐயம் முதலியவற்றைப் புலப்படுத்தும். வார்த்தைகளின் ஈற்றில் வரும் 'ஆ, ஏ, ஓ' ஆகிய மூன்று உயிர்களும் வெவ்வேறு குறிகளால் குறிக்கப்படும். இவற்றைக் கீழே காண்க. எ.கா.

ஹரியா, ஹரியே, ஹரியோ.

(34) ஈற்று உயிர்க்குறி 'ஏ' க்குப் பிறகு மற்றும் ஓர் 'ஏ' வந்தால், 'ஏ' கொக்கிக்கு உள்ளேயே வேறொரு கொக்கி போடப்படும்; 'ஓ' வந்தால் சுழித்து விடப்படும். எ.கா.


உள்ள, உள்ளே, உள்ளேயே, உள்ளேயோ.

பயிற்சி—6


கோபுவா, கோபுவே, கோபுவோ, காடா, காடே, காடோ, அழகோ, போகாதோ, போகாதே, உமாவா, காமுவா, உள்ளோ, வழியே, ஆடாதே, பாடாதே.

பயிற்சி—7
சுருக்கெழுத்தில் எழுதுக

ஆசி, அவா, அஞ்சி, அஞ்சலி, அளவோ, இடி,

ஓது, அமானி, அக்கினி, கேட்காதே, ஏழு, ஓடி,

அவதி, அமளி, அச்சாணி, ஆவி, ஊழி, ஆவடி,

ஆன்மா, கவியோ, ஏவி, அவனி, மாடு, மடு, நானோ.

பாடச் சுருக்கம்

1. உயிர்க்குறில் ஐந்தில் மூன்று மெல்லிய புள்ளியாலும், இரண்டு மெல்லிய குறுங்கோட்டாலும், உயிர் நெடில் ஐந்தில் மூன்று அழுந்திய புள்ளியாலும், இரண்டு அழுந்திய குறுங்கோட்டாலும் காட்டப்படும்.

2. உயிர்க்குறிகளைப் போட ஒவ்வொரு கோட்டிற்கும் அருகில் மூன்று இடங்கள் உண்டு.

3. கோடுகள் ஆரம்பமாகும் இடத்திலிருந்து உயிர்க்குறியின் இடங்கள் எண்ணப்படும்.

4. எழுதும்போது கோடுகளை எழுதிவிட்டே உயிர்க்குறிகள் தனித்துப் போடப்படும்.

5. ஆரம்பத்தில் வரும் உயிர்களுக்கும், ஈற்றில் வரும் 'ஆ, ஏ, ஓ' ஆகிய மூன்று உயிர்களுக்கும், புள்ளியல்லாத வேறு குறிகள் கொடுக்கப்படும்.

6. ஆரம்ப உயிர்க்குறிகளில் குறில், நெடில் இரண்டிற்கும் வேறுபாடு இல்லை. சந்தர்ப்பத்தைக் கொண்டே அவ்வேறுபாடு அறியப்படும்.

(விதிகள்: 21 – 34)

அத்தியாயம்—3

இடைப்படும் உயிர்களும், எழுதும் இடமும்

இடைப்படும் உயிர்க்குறிகள்: *(35)* இரண்டு கோடுகளிடையே வரும் முதல் இடத்து, இரண்டாம் இடத்து உயிர்க்குறிகள் முதலில் வரும் கோட்டுக்குப் பின்னால் போடப்படும். எ.கா.


காடு, கேடு, தாழி, தோழி.

ஆனால், மூன்றாம் இடத்து உயிர்க்குறிகள் வந்தால் அவற்றை வாகாகக் குறிக்க, இரண்டாவது கோட்டின் முன்னே மூன்றாம் இடத்தில் போடப்படும். எ.கா.

கூடி, குடி, வீடு, விடு.

(36) இம்முறைப்படி உயிர்க்குறிகள் எப்படி மூன்றாம் இடத்தில் போடப்படுகின்றன என்பதைக் கீழ்க்கண்ட படங்களில் காண்க.

தொடர்ச் சொற்கள்: *(37)* தொடர்ச் சொற்களைப் பொறுத்த வரை, பொதுவாக அவ்வச் சொல்லின் உயிர்க்குறிகள் தனித்தனியே போடப்படும். எ.கா.


அருநெறி, கெடுமதி, அடிநா, ஆட்சிமொழி.

எழுதும் இடம்: *(38)* உயிர்க்குறிகளைப் போடுவதற்கு மூன்று இடங்கள் இருப்பது போலவே, வார்த்தைகளின் குறித் தொடரை எழுதுவதற்கும் மூன்று நிலைகள் உள்ளன. முதல் நிலை எழுதும் வரிக்கு மேல் அமையும். இரண்டாம் நிலை எழுதும் வரியை ஒட்டியது. மூன்றாம் நிலை எழுதும் வரியினூடே அமையும். வார்த்தைகளின்

முதலில் வரும் உயிரொலிதான் குறித்தொடரின் நிலையைச் சரியாக நிர்ணயிக்கிறது.

1. ஒரு வார்த்தையின் முதலில் வரும் உயிரொலி முதல் இடத்ததானால் குறித்தொடர் முதல் நிலையில் எழுதப்படும். எ.கா.

அளி, பாம்பு, பழி, காது.

2. ஒரு வார்த்தையின் முதலில் வரும் உயிரொலி இரண்டாம் இடத்ததானால், குறித்தொடர் இரண்டாம் நிலையில் எழுதப்படும். எ.கா.

ஒளி, போக, கொடி, கேலி,

பொழி, கேவி.

3. ஒரு வார்த்தையின் முதலில் வரும் உயிரொலி மூன்றாம் இடத்ததானால், குறித்தொடர் மூன்றாம் நிலையில் எழுதப்படும். எ.கா.

உளி, உந்து, ஊடல், கூடு.

பிடி, நீறு, தீது, கூலி.

(39) மேலே உள்ள உதாரணங்களிலிருந்து குறித் தொடரின் முதலில் வரும் மேற்கோடோ, கீழ்க்கோடோ தான், எழுதும் நிலையைச் சரியாகக் காட்டுகிறது என்பது தெரியவரும்.

(40) படுக்கைக் கோட்டை வரியினூடே எழுதுவது இயலாது. ஆகையினால் படுக்கைக் கோடுகளை மாத்திரம் கொண்ட குறித்தொடர்கள், அவற்றின் முதலில் வரும் உயிரொலி முதல் இடத்ததானால் முதல் நிலையிலும், இரண்டாம், மூன்றாம் இடத்த தானால் இரண்டாவது நிலையிலுமே எழுதப்படும். எ.கா.

கனி, கூனி, கோழி, கிழி.

பயிற்சி—8

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



தனிக்குறிச் சொற்கள்: *(41)* அடிக்கடி வரக்கூடிய சொற்கள் சுருக்கெழுத்தில் ஒரு தனிப்பட்ட குறியால் காட்டப்படும். எ.கா. அப்பொழுது. இத்தகைய வார்த்தைகளுக்குத் தனிக்குறிச் சொற்கள் என்று பெயர். அவற்றைக் குறிக்கும் சுருக்கெழுத்துக் குறிகளுக்குத் 'தனிக்குறிகள்' என்று பெயர். 'வரிக்கு மேல், வரியை ஒட்டி, வரியினூடே', அப்பொழுது, எப்பொழுது, இப்பொழுது என்று தனிக்குறிகள் மூன்று நிலைகளிலும் எழுதப்படும். இனிமேல் ஒவ்வொரு பயிற்சிக்கும் முன்பு, சில தனிக்குறிச் சொற்கள் கொடுக்கப்படும். அவற்றை நன்றாகப் பலமுறை எழுதி எழுதிப் பழக்கம் செய்துகொள்ள வேண்டும்.

(42) தனிக்குறிச் சொற்களுக்கு ஈற்றில் 'ஆ, ஏ, ஓ' வந்தால் ஈற்று உயிர்க்குறிகள் போடப்படும். *(விதி—33)* எ.கா.

அப்பொழுதா, அப்பொழுதே, அப்பொழுதோ

நிறுத்தக் குறிகள்: *(43)* பேச்சின் நடுவில் வரும் முற்றுப்புள்ளி என்றும், இடை நிறுத்தம் என்றும், கேள்விக்குறி என்றும், ஆச்சரியக் குறி என்றும் காட்டப்படும். கால்புள்ளி (காமா) முதலிய மற்ற நிறுத்தக் குறிகள் அவற்றுக்குரிய உருவத்திலேயே எழுதப்படும். சிறப்புப் பெயர்கள், பிறமொழிச் சொற்கள் ஆகியவற்றுக்கு மட்டும் மற்றவற்றிலிருந்து அவற்றைப் பிரித்துக் காட்டத் தேவையானால் அவற்றின் அடியில் இரு சிறு கோடுகள் போடப்படும்.

தனிக்குறிச் சொற்கள்

அப்பொழுது/போது,
எப்பொழுது/போது,
இப்பொழுது/போது,
அந்த,
எந்த,
இந்த,
ஆச்சரிய/மாய்,
எச்சரிக்கை/யாய்,
உசித/மாய்,
ஐக்கிய/மாய்,
ஆகையால்,
ஆகையினால்,
நமது,
நியாய/மாய்,
அநியாய/மாய்,
அங்கு
எங்கு
இங்கு.

பயிற்சி–9

சுருக்கெழுத்தில் எழுதுக

புலி, வெடி, முந்தி, போல, கிளி, புலி,
பூமி, பிணி, குழி, வெளி, ஒதுக்கீடு, முடி, தினவு,
திணி, தெளிவு, துணிவு, பாலு, கழிவு, இழிவு,
நழுவ, மோகினி, கிலி, வகிக்க, வாளி, நெடி.

பயிற்சி–10

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



பாடச் சுருக்கம்

1. இரண்டு கோடுகளிடையே வரும் முதல் இடத்து, இரண்டாம் இடத்து உயிர்க்குறிகள் முதலில் வரும் கோட்டுக்குப்பின் போடப்படும். மூன்றாம் இடத்து உயிர்க்குறிகள் இரண்டாம் கோட்டின் முன் மூன்றாம் இடத்தில் போடப்படும்.

2. தொடர்ச் சொற்கள் ஒரு குறித்தொடராகவே சேர்த்து எழுதப் பட்டாலும் பொதுவாக அவ்வச் சொல்லின் உயிர்க்குறிகள் தனித்தனியாகவே போடப்படும்.

3. உயிர்க்குறிகளைப் போடுவதற்கு மூன்று இடங்கள் இருப்பது போலவே வார்த்தைகளின் குறித்தொடரை எழுதுவதற்கும் மூன்று நிலைகள் உண்டு.

4. முதல்நிலை என்றால் எழுதும் வரிக்கு மேலும், இரண்டாம் நிலை என்றால் வரியை ஒட்டியும், மூன்றாம் நிலை என்றால் வரியினூடேயும் குறித்தொடர்கள் எழுதப்படும்.

5. வார்த்தைகளின் முதலில் வரும் உயிரொலிதான் குறித்தொடர் களின் நிலையைச் சரியாக நிர்ணயிக்கும்.

6. குறித்தொடரின் முதலில் வரும் மேற்கோடோ கீழ்க்கோடோ தான் எழுதும் நிலையைச் சரியாகக் காட்டும்.

7. ஒரு தனிப்பட்ட குறியால் காட்டப்படும், அடிக்கடி வரக்கூடிய வார்த்தைகளுக்குத் தனிக்குறிச் சொற்கள் என்று பெயர். அவற்றைக் குறிக்கும் சுருக்கெழுத்துக் குறிகளுக்குத் 'தனிக்குறிகள்' என்று பெயர்.

8. முற்றுப்புள்ளி × என்றும், இடைநிறுத்தம் ⌐ என்றும், கேள்விக்குறி ? என்றும், ஆச்சரியக்குறி ! என்றும் காட்டப் படும்.

9. சிறப்புப் பெயர்கள், பிறமொழிச் சொற்கள் ஆகியவற்றை மற்றவற்றிலிருந்து பிரித்துக் காட்ட அவற்றின் அடியில் இரு சிறு கோடுகள் போடப்படும்.

(விதிகள் 35 – 43)

அத்தியாயம்—4

மாற்று உருவங்கள் "ர/ற, ஹ, க்ஷ"

ர/ற, ஹ, க்ஷ ஆகிய மெய்களில் ஒவ்வொன்றுக்கும் மற்றொன்றோடு வாகாகச் சேர்த்து எழுதவும், ஆரம்ப, ஈற்று உயிரொலிகளைக் காட்டவும் மேற்கோடு, கீழ்க்கோடு என முறையே இரண்டு உருவங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மெய்யெழுத்து ர/ற: *(44)* உயிரை முன்னதாகக் கொண்டு ஆரம்பத்தில் ர/ற வந்தால், கீழ்க்கோடு எழுதப்படும். எ.கா.

ஊர், உறுமல், ஆற்காடு.

(45) முடிவில் ர/றவுக்குப் பின் உயிரொலி வந்தால் மேற்கோடும், உயிரொலி இல்லாதபோது கீழ்க்கோடும் எழுதப்படும். எ.கா.

பொரி, போர், நெறி, நேர்.

(46) வாகான சேர்க்கையை உத்தேசித்து 'ம'வுக்கு முன் கீழ்க்கோடு ர/ற எப்பொழுதும் எழுதப்படும். எ.கா.

அரிமா, உருமு, ஒருமித்து, ராமு.

(47) நேர்கோட்டு மேற்கோடுகளுக்குப் பின் ர/ற வந்தால், வாகான சேர்க்கையை உத்தேசித்து, மேற்கோடு எழுதப்படும். எ.கா.

பிறர், ஹரி, உயிர், உளறி.

(48) வாகாக எழுதுவிதே முக்கியமாகையால், ஆரம்ப உயிரொலியைக்கூடக் கவனிக்காமல், 'ச்ச, ச/ஸ, ஜ, ட, த, வ, ள, ய, ழ' போன்றவற்றுக்கு முன் ர/ற வந்தால் மேற்கோடே எழுதப்படும். எ.கா.

எரிச்சல், அரிசி, அராஜக, ஆறடி,

அரிது, அறிவு, அரணி, ஈரேழு.

மெய்யெழுத்து ஹ. *(49)* உயிரொலியை முதலாகக் கொண்டு தனித்து நின்றால் கீழ்க்கோடு எழுதப்படும். எ.கா.

ஆஹா, ஓஹோ.

(50) 'ஹ'வுக்குப் பிறகு, 'க,' ம, ல, (மேல்)' வந்தால், வாகு கருதிக் கீழ்க்கோடு எழுதப்படும். எ.கா.

 ஹாக்கி,  ஹேமலதா,  ஹல்வா.

(51) படுக்கைக் கோடுகளுக்குப் பிறகு 'ஹ' வந்தால் கீழ்க்கோடு எழுதப்படும். எ.கா.

மாஹி.

(52) வாகுடன் எழுதுவதே முக்கியமாகையால் பெரும்பாலும் மேற்கோடு 'ஹ' தான் எழுதப்படும். எ.கா.

பாஹி, ஹானி, ஹர்த்தால்.

ஆய்த எழுத்து. *(53)* ஃ என்று மூன்று புள்ளி வடிவமாக இருப்பது ஆய்த எழுத்து. இது சொல்லின் இடையில் மட்டுமே வரும். இதைக் காட்ட 'ஹ'வுக்குரிய குறி எழுதப்படும். எ.கா.

அஃது, எஃகு.

(54) வடமொழி எழுத்தாகிய 'ஹ' தமிழில் 'க' என்றும், உயிரெழுத்துக்களாகவும் மாறும். வடமொழி 'ஹ' தமிழில் எப்படி மாறி வருகிறதோ, அந்த ஒலிக்கு ஏற்ற குறியே போடப்படும். எ.கா.

 மோகி, அரி.

மெய்யெழுத்து க்ஷ. *(55)* வடமொழி எழுத்தாகிய 'க்ஷ' தமிழில் 'ட்ச' என்று மாறும். க்ஷ'வும், 'ட்ச'வும் பெரும்பாலும் ஒலியில் ஒத்து நிற்பதால் இரண்டுக்கும்  என்ற குறிகள் தாம் எழுதப்படும்.

(56) 'ஹ'வைப் போலவே உயிரொலியை முதலாகக் கொண்டு தனித்து நின்றாலும், 'க, ம, ல (மேல்)'வுக்கு முன் வந்தாலும் கீழ்க்கோடு 'க்ஷ' எழுதப்படும். எ.கா.

 ஆட்சி,  க்ஷமி, லக்ஷ்மி.

(57) வாகுடன் எழுதுவதே முக்கியமாகையால் பெரும்பாலும் மேற்கோடு 'க்ஷ' தான் எழுதப்படும். எ.கா.

காட்சி,  பட்சி, மீனாட்சி.

பயிற்சி—11

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



பயிற்சி—12

சுருக்கெழுத்தில் எழுதுக

பார், பறி, அரிசி. அரசு போராட, இஃது, பிறர், பூரிப்பு, உருக்கு. தழுமி, மோர், நரி, பரிதி, ரேணுகா, கச்சேரி, கார், கரி, மரபு, பாராது, உறுதி, நார், அடலேறு, அஞ்சல்.

தனிக்குறிச் சொற்கள்

ஓர்.
ஒரு,
ஒவ்வோர்/வொரு,
இரு/இருக்க,
அல்ல,
எல்லா,
இல்லை,
தனி/யாய்,



தேதி,
தீவிர/மாய்,
அது,
ஏது,
இது,
அதை,
எதை,
இதை.

பயிற்சி–13

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



பாடச் சுருக்கம்

1. உயிரை முன்னதாகக் கொண்டு ஆரம்பத்தில் 'ர/ற' வந்தால் கீழ்க்கோடு 'ர/ற' எழுதப்படும்.
2. முடிவில் 'ர/ற'வுக்குப் பின் உயிரொலி வந்தால் மேற்கோடு ர/றவும், இல்லாதபோது கீழ்க்கோடு 'ர/ற'வும் எழுதப்படும்.
3. 'ம'வுக்கு முன் கீழ்க்கோடு 'ர/ற' வாகான சேர்க்கையை உத்தேசித்து எழுதப்படும்.
4. நேர்கோட்டு மேற்கோடுகளுக்குப் பின் வாகான சேர்க்கையை உத்தேசித்து, மேற்கோடு 'ர/ற' எழுதப்படும்.
5. ஆரம்பத்தில் உயிரொலி வந்தாலும் கூட வாகான சேர்க்கையை உத்தேசித்து, 'ச்ச, ச/ஸ, ஜ, ட, த, வ, ள, ய, ழ' போன்றவற்றுக்கு முன் மேற்கோடு, 'ர/ற' எழுதப்படும்.
6. உயிரொலியை முதலாகக் கொண்டு தனித்து நின்றாலும், 'க, ம, ல (மேல்)' ஆகியவற்றுக்கு முன் வந்தாலும், படுக்கைக் கோடுகளுக்குப் பிறகு வந்தாலும், கீழ்க்கோடு 'ஹ' எழுதப்படும். மற்றச்

சமயங்களில் மேற்கோடு 'ஹ'தான் பெரும்பாலும் வாகு கருதி எழுதப்படும்.

7. ஆய்த எழுத்தைக் காட்ட 'ஹ' எழுதப்படும்.

8. 'க்ஷ'வும், 'ட்ச'வும் பெரும்பாலும் ஒலியில் ஒத்து இருப்பதால் இரண்டுக்கும் 'க்ஷ'தான் எழுதப்படும்.

9. உயிரொலியை முதலாகக் கொண்டு தனித்து நின்றாலும், 'க, ம, ல (மேல்)'வுக்கு முன் வந்தாலும் கீழ்க்கோடு 'க்ஷ'தான் எழுதப்படும். மற்றச் சமயங்களில் மேற்கோடோ கீழ்க்கோடோ வாகு கருதி எழுதப்படும்.

(விதிகள் 44 – 57)

அத்தியாயம்–5

ஈருயிர்கள்

நெடில் ஐ, ஔ. *(58)* உயிரெழுத்துக்களில் 'ஐ, ஔ' இரண்டும் நெடிலானாலும், இரண்டு உயிரொலிகள் இணைந்த ஈருயிர்களாகும். *(விதிகள் 21, 22)*

அவை கீழ்க்கண்டவாறு எழுதப்படுகின்றன:

ஐ ...... ஔ ......

(59) 'ஐ' என்பதன் குறி முதலிடத்தில் எழுதப்படுகிறது. 'ஔ' என்பதன் குறி மூன்றாமிடத்தில் எழுதப்படுகிறது. எ.கா.

...... பை, ... தை, ... மை, ... கௌரி,

...... மௌனி, ... மௌலி.

(60) சேர்த்து எழுத வாகுள்ள இடங்களில் ஈருயிர்க்குறி 'ஐ' ஆரம்பத்திலோ முடிவிலோ சேர்த்தும் எழுதப்படும். எ.கா.

...... ஐந்து, ... ஐவேஜி, ... காலை,

...... கை, ... பாறை, ... மிகை.

(61) மெய்க்குறிகள் 'ம, ம்ப, ய, ர/ற (மேல்), ஈருயிர்க்குறி 'ஔ' ஆகியவற்றோடு 'ஐ'யைச் சேர்க்கும்போது வாகாக எழுதுவது கருதி அதன் ஒரு பக்கக் கோடு சேர்த்து எழுதப்படும். எ.கா.

...... ஐமுகி, ... ஐம்பால், ... ஐயாறு,

...... ஐரோப்பா, ... ஔவை.

பயிற்சி–14

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக





ஈருயிர்க்குறி. *(62)* பெரும்பான்மையான இடங்களில், அநேக வார்த்தைகளில் முதலாவதாக வரும் ஈருயிர்கள் தனித்தனியே ஒலிக்கப்படும். இவற்றைக் குறிக்க ⌐ ▲ என்ற ஈருயிர்க்குறிகள் கொடுக்கப் பெற்றுள்ளன. இவற்றின் முன்னாலுள்ள உயிரொலி தனித்து வரின் எந்த இடத்தில் எழுதப்படுமோ அந்த இடத்தில் ஈருயிர்க்குறி எழுதப்படும்.

1) ஈருயிர்க்குறி ......⌐...... என்பது. ஆய்/அய் என்பதற்கு முதலிடத்திலும், ஓய்/ஒய் என்பதற்கு இரண்டாமிடத்திலும், ஊய்/உய் என்பதற்கு மூன்றாமிடத்திலும் எழுதப்படுகிறது. எ.கா.

...... காய், ... தாய், ... தோய், ... நோய்,

...... தூய்மை, ... நொய்மை.

2) ஈருயிர்க்குறி ......▲...... என்பது. 'ஏய்/எய்' என்பதற்கு இரண்டாமிடத்திலும், 'ஈய்/இய்' என்பதற்கு மூன்றாமிடத்திலும் எழுதப்படுகிறது. எ.கா.

...... தேய், ... தீய்த்து.

(63) மேலும் ......▲...... என்ற ஈருயிர்க்குறி. *1)* உயிரெழுத்து இ'யோடு சேர்ந்துவரும் உயிரொலியைக் காட்ட வாகுள்ள இடங்களில், உயிர்க்குறி 'இ' புள்ளி போடும் இடத்தில் ......▲...... என்று தனித்து எழுதப்படும். எ.கா.

...... அறியாமை, ... குவியல், ... உரியது.

2) ஆரம்பத்திலோ, முடிவிலோ 'ஆய்' வரும்போது, சேர்த்து எழுதும் வாகு கருதி, சில இடங்களில் ▲ என்ற குறி சேர்த்து எழுதப்படும். எ.கா.

.... ஆய்ந்து, ... ஆய்வு, ... போவாய், ... பாடினாய்.

(64) ஆரம்பத்தில் .... என்ற ஈருயிர்க்குறியை 'ஆய்' என்பதற்குச் சேர்த்து எழுதும்போது குறித்தொடர் முதல் நிலையில் மேலே எழுதப்பட்டிருப்பதைக் காண்க. 'ஏய்' என்பதற்குச் சேர்த்தெழுதும்போது குறித் தொடர் இரண்டாம் நிலையில் எழுதப் படும். எ.கா.

.... ஏய்ப்பு, ... ஏய்த்து.

மூவுயிர்க்குறி. (65) ஈருயிர் ஒலியைத் தொடர்ந்து ஏந்த உயிரொலி வந்தாலும், அதனைக் குறிக்க ஈருயிர்க் குறியோடு ஒரு சிறு கோடு சேர்க்கப்படும். எ.கா.

.... கடையாணி, ... முறையீடு. .... நோயாளி,

.... புரையோடி .... மலையுச்சி, ... உண்மையாக.

(66) 'வை' என்பதைக் காட்ட .... என்ற குறி கொடுக்கப்பட்டிருக்கிறது. இது முதல் இடத்தில் எழுதப்படும். பின்வரும் கோடுகளோடு வாகாகச் சேர்த்து எழுத வசதியுள்ள இடங்களில் ஆரம்பத்தில் சேர்த்தும் எழுதப்படும். எ.கா.

.... வைது, ... வைதாய்.

(67) 'க, ர/ற (மேல்)'வுக்கு முன் 'வை' வந்தால், வாகாக எழுதுவது கருதி, 'வை' என்பதன் ஒரு பக்கக் கோடு மாத்திரம் சேர்த்து எழுதப்படும். எ.கா.

.... வை, ... வைகை, ... வைரி.

வசதியற்ற இடங்களில் எல்லாம் 'வை' என்பதற்கு மெய்க்குறி 'வ' போட்டு ஈருயிர் 'ஐ' தான் எழுதப்படும். எ.கா.

.... கோவை, ... ரவை.

சுருக்கப்பட்ட 'ய' (68) மெய்க்குறி 'ய'வுக்குப் பதிலாக .... என்ற சிறிய அரை வட்டம் ஆரம்பத்திலோ நடுவிலோ வாகுக்கேற்ப

சேர்த்து எழுதப்படும். எ.கா.

...... இயக்க, ... யமுனை, ... யாக்கை, ... ஜெயில்.

பயிற்சி –15

சுருக்கெழுத்தில் எழுதுக

தளவாய், மொய்க்க, பெய்து, குறியீடு, தியாகி, வாய்தா, பொய்கை, வருவாய், அணையாது, உபயோகி, அலையோசை, இடையூறு, படையணி, வெளியீடு, விளையாது, அலைவாய், ஆடையணி, ஆராய்ச்சி, அறிவியல், பீப்பாய், கணவாய், பகையாளி, அழியாது, விழுமிய, நியதி.

தனிக்குறிச் சொற்கள்

...... ஏனென்றால்,
...... என்றால்,
...... இருக்கிறது/கின்றன,
...... ஆயினும்,
...... ஆனபோதிலும்,
...... வரை,
...... என்ற/று,
...... ஏற்கனவே,
...... வை/வைத்த/வைத்து,
...... என்பது,
...... * (ஆ)வது/தாவது,
...... * படி/பட/பட்ட,
...... * (த்) தது,
...... * (க்கத்)தக்க/து.

* இவை தனித்து நிற்கும் வார்த்தைகள் அல்லாவிட்டாலும், வினைச் சொற்களுக்குப் பின் அடிக்கடி வருமாதலால் தனிக்குறிகளாகவே கொடுக்கப்பட்டுள்ளன.

(69) 'கூடாது' என்று வரும்போது, — என்ற குறி அதன் முன்வரும் வார்த்தையின் அடியில் தனித்து எழுதப்படும். எ.கா.

...... எடுக்கக் கூடாது, ... கேட்கக் கூடாது.

(70) 'என்றால்' என்பது தனித்து வந்தால் எழுதும் வரியின்

மேல் 'என்றால்' என்பதற்குரிய தனிக்குறி எழுதப்படும். ஆனால் ஒரு வார்த்தைக்குப்பின் வரும்போது வசதியுள்ள இடங்களில் அதற்கு முன் வரும் கோட்டின் முடிவில் ஒட்டினாற்போல இந்தப் புள்ளி வைக்கப்படும். எ.கா.

என்ன என்றால், போகாது என்றால்.

(71) ஒரு வார்த்தைக்குப் பின், 'படி/பட/பட்ட, (க்கத்) தக்க/து' என்பன வந்தால்தான், முறையே என்ற குறிகள் சேர்த்து எழுதப்படும். ஆரம்பத்தில் இவை எழுதப்படுவதில்லை. எ.கா.

உள்ளபடி, பாடுபட/பட்ட, கேட்கப்பட்ட,

 கேட்கத்தக்கது.

பயிற்சி—16

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



பயிற்சி—17

சுருக்கெழுத்தில் எழுதுக

(தடித்த எழுத்தில் அச்சிடப்பெற்றுள்ள வார்த்தைகள் தனிக் குறிச் சொற்கள், சுருக்கம் ஆகியவற்றைக் குறிக்கும்)

கௌரி, வீணை எங்கே இருக்கிறது? அதை எடுத்து மாலை நாலு மணி வரை இங்கேயே இப்பொழுது வாசி. அதுவே உன் கடமை. ஊமை

போல முனகக் கூடாது. வாயால் தெளிவாய்ப் பாடுவது தேவை. ஆயினும், ஒரு பூமாலை ஆசைப்படத்தக்கது அல்லவென்று நீ ஏற்கனவே அறிவாய். ஏனென்றால் பாடுவது என்பது ஒரு கலை. ஆகையினால் நீ அந்தக் கலைக்கே உயிர் வாழ்வாய். கலை அரசியாக அப்பொழுதே உலகில் நீ மிளிர்வாய்.

வையாபுரி நெய்வேலி என்ற ஊருக்குப் போகாதது, அங்கே பாடாதது ஒரு பிழையாகாது. நீ அங்கே போகாதது நியாயமே இல்லை. ஆகையால் இனியாவது நீ அங்கே போய் வா.

பாடச் சுருக்கம்

1. 'ஐ, ஔ' இரண்டும் ஈருயிர்களாகும். 'ஆய்/அய், ஈய்/இய், ஊய்/உய், ஏய்/எய், ஓய்/ஒய்' போன்றவைகளும், ஒலியைப் பொறுத்தவரையில் ஈருயிர்களோடு ஒப்பவே கருதப்படும்.

2. 'ஐ, ஆய்/அய்' என்பனவற்றின் குறிகள் முதல் இடத்திலும், 'ஏய்/எய், ஓய்/ஒய்' என்பனவற்றின் குறிகள் இரண்டாம் இடத்திலும், 'ஔ, ஊய்/உய், ஈய்/இய்' என்பனவற்றின் குறிகள் மூன்றாம் இடத்திலும் எழுதப்படும்.

3. வாகுள்ள இடங்களில், ஈருயிர்க்குறிகள் ஆரம்பத்திலோ முடிவிலோ சேர்த்தும் எழுதப்படும்.

4. ஈருயிரைத் தொடர்ந்து உடனே வரும் வேறு ஓர் உயிரொலியைக் குறிக்க, ஈருயிர்க் குறியோடு ஒரு சிறு கோடு சேர்க்கப்படுவது மூவுயிர்க் குறி எனப்படும்.

5. 'ய' சிறிய அரை வட்டத்தினால் குறிக்கப்படும்.

(விதிகள் 58 – 71)

அத்தியாயம்—6

வேற்றுமைகள்

வேற்றுமைகள். (72) பெயர்ச் சொற்களின் பின்னே நின்று அவற்றின் பொருளை வேறுபடுத்துபவை வேற்றுமை உருபுகள். வேற்றுமை எட்டு வகைப்படும். பெயர்ச் சொற்களோடு வேற்றுமை உருபுகள் சேர்ந்து வரும்போது இவை பெரும்பாலான இடங்களில் சாதாரணமாக ஒலி முறைப்படியே எழுதப்படும். ஆனால் எங்கெல்லாம் அவ்வாறு எழுத வாகில்லையோ, அங்கெல்லாம் வாகுடன் எழுதுவதற்காக இவற்றுக்குச் சிறப்புக் குறிகள் கொடுக்கப் படும். வேற்றுமை உருபுகளையும் அவற்றின் சிறப்புக் குறிகளையும் கீழே காண்க. சிறப்புக் குறிகள் பெயர்ச் சொற்களின் குறித் தொடரோடு சேர்த்தோ தனித்தோ எழுதப்படும்.

அட்டவணை—3 —வேற்றுமை உருபுகள்

வேற்றுமை	உருபு	குறி	சொல்	குறித் தொடர்
1			மணி	
2.	ஐ		மணியை	
3.	ஆல் ஒடு ஓடு உடன்		மணியால் மணியொடு மணியோடு மணியுடன்	
4.	கு		மணிக்கு	
5.	இல் இருந்து இன் நின்று		மணியில் மணியிலிருந்து மணியின் மணியினின்று	
6.	உடைய அது		மணியுடைய மணியினது	
7.	இல் இடத்தில் கண்		மணியில் மணியிடத்தில் மணியின்கண்	
8.	ஏ (ஈற்று உயிர்க்குறி)		மணியே	

(73) நாலாம் வேற்றுமை உருபாகிய 'கு' என்பதற்குப் போடும் என்ற குறி, (க்)காக என்று வந்தால் வாகுள்ள இடங்களில் இரட்டித்து எழுதப்படும். எ.கா.

....மணிக்காக.

(74) ஐந்தாம் வேற்றுமை உருபாகிய 'நின்று' என்பதற்குப் போடப்படும் குறியே 'இன்றி' என்று வந்தாலும் கடைசியில் 'இ' உயிர்க்குறி போட்டு எழுதப்படும். எ.கா.

....வீடின்றி.

(75) ஆறாம் வேற்றுமை உருபாகிய 'உடைய' என்பதற்குப் போடப்படும் குறியே 'உடையது' என்று கடைசியில் வந்தாலும் எழுதப்படும். எ.கா.

....மணியுடையது.

(76) வேற்றுமை ஏற்ற வார்த்தைகளின் இறுதியில், 'ஏ, ஓ' வந்தால் உருபுக் குறிகளோடு, ஈற்று உயிர்க்குறி 'ஏ, ஓ' சேர்த்து எழுதப்படும். எ.கா.

.... மணியையே,....... .... மணியாலோ,

.... மணிக்கே, .......... மணியிடத்திலே,

....... வழியிலே; ........... மணியிடத்திலோ.

(77) 'உடன்' என்பதற்கு ...... என்ற குறி போடப்படும். 'உடனே' என்னும்பொழுது கடைக்கொக்கிக்குள் 'ஏ' கொக்கியைப் போடுவது சிரமமாதலால், கொக்கியின் போக்கிலேயே ஈற்று 'ஏ' உயிர்க்குறி எழுதப்படும். எ.கா.

.... மணியுடன். .... மணியுடனே, ... மணியுடனேயே.

(78) கடைசியில் 'இடையே' என்று வந்தால் .... என்று எழுதப்படும். எ.கா.

....மணியிடையே..

பயிற்சி—18

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



பயிற்சி—19

சுருக்கெழுத்தில் எழுதுக

என்னை, எனக்கு, என்னிடத்தில், என்னால், என்னோடு, உண்மையை, உண்மையில், துணையை, துணையையே, துணையுடன், அமைதியை, பகையுடன், கடையில், மார்பில், இயல்புக்கு, கொடையாளியை, அலையாழி, நிம்மதியை, விடையை, அறிவுடன், அடியை, கிளையில், கைதியை, அடிமையை..

பயிற்சி—20

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக





பாடச் சுருக்கம்

1. வேற்றுமை எட்டு வகைப்படும். அவற்றின் உருபுகளுக்குச் சிறப்புக் குறிகள் கொடுக்கப்படும்.

2. வேற்றுமை உருபுகளைச் சாதாரணமாக ஒலி முறைப்படி எழுத வாகில்லாத இடங்களில் 'சிறப்புக் குறிகள்' பெயர்ச் சொற்களின் குறிகளோடு சேர்த்தோ தனித்தோ எழுதப்படும்.

3. நாலாம் வேற்றுமை உருபாகிய 'கு' என்பதற்குரிய குறியே '(க்)காக' என்பதற்கு இரட்டித்து எழுதப்படும்.

4. வேற்றுமை ஏற்ற வார்த்தைகளின் இறுதியில் 'ஏ, ஓ' வந்தால் உருபுகளுக்குரிய சிறப்புக் குறிகளோடு ஈற்று உயிர்க்குறி 'ஏ, ஓ' சேர்த்து எழுதப்படும்.

(விதிகள் 72 – 78)

அத்தியாயம்—7

சுருக்கம்

சுருக்கம்: (79) அடிக்கடி வரக்கூடிய வார்த்தைகளுக்கு கையை எடுக்காமல் சுலபமாகவும், தெளிவாகவும், வாகாகவும் எழுதப்படக் கூடியனவாய், இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட குறிகளைச் சேர்த்து எழுதும் குறித்தொடருக்குச் சுருக்கம் என்று பெயர். இதை எழுதப் பல முறைகள் உள்ளன.

(80) குறியைப் பார்த்தவுடனேயே வார்த்தைகள் தோன்றும்படி இன்றியமையாத குறிகளை மாத்திரம் வைத்துக் கொண்டு மற்றவை விலக்கி எழுதப்படும். எ.கா.

 ...... கட்சிப்பிரதிகட்சி, ... படிப்படியாக

(81) ஆரம்ப உயிர்க்குறிகளை விலக்கியும், தனிக்குறிச் சொற்களை அடிப்படையாகக் கொண்டும் எழுதப்படும். எ.கா.

...... அவ்வாறு .... அடிக்கடி, ... அதைத் தவிர,

(82) சுருக்கத்தில் உள்ள முதல் வார்த்தையைத் தனியாக எழுதினால் எந்த நிலையில் எழுதப்படுமோ, அந்த நிலையிலிருந்தே சுருக்கத் தொடர் ஆரம்பித்து எழுதப்படும். எ.கா.

...... அதுவரை, ... அப்பொழுதாவது.

(83) தமிழில், 'அது, எது, இது, அப்பொழுது, எப்பொழுது, இப்பொழுது' என்பன போன்ற வார்த்தைகள் வருவதைக் கவனிக்க. சுருக்கத்தில் 'அதுவரை' என்பது முதல் நிலையில் எழுதிக் காட்டப் பட்டிருந்தால், 'எதுவரை' என்பதை இரண்டாம் நிலையிலும், 'இதுவரை' என்பதை மூன்றாம் நிலையிலும், 'அப்பொழுதாவது' என்பது முதல் நிலையில் எழுதிக் காட்டப்பட்டிருந்தால், 'எப்பொழுதாவது' என்பதை இரண்டாம் நிலையிலும், 'இப்பொழுதாவது' என்பதை மூன்றாம் நிலையிலும் எழுதிப் பழக வேண்டும்.

(84) ஒரு வார்த்தைக்குப் பின் 'என்ற/என்று' என்னும் சொற்கள் வந்தால் அவற்றைக் காட்ட ஒரு சிறு மெல்லிய கோடு வாகுக்கேற்ப மேல்நோக்கியோ, கீழ்நோக்கியோ, அதற்கு முன் வரும் கோட்டோடு சேர்த்து எழுதப்படும். எ.கா.

அல்லவென்று, இல்லையென்று, இருக்கின்றனவென்று.

ஆனால், 'என்ற/என்று' என்பவை பிற சொல்லோடு சேராமல் தனியே எழுதப்படும்போது சிறு கோடு போடப்படுவதில்லை. 'என்ற/என்று' என்பதற்கான 'தனிக்குறி' தான் எழுதப்படும்.

(85) இனிமேல் ஒவ்வொரு பயிற்சிக்கும் முன்பு சில சுருக்கங்கள் கொடுக்கப்படும். தனிக்குறிச் சொற்களைப் போலவே இவற்றையும் பற்பல முறைகள் எழுதிப் பழக்கம் செய்துகொள்ள வேண்டும்.

சுருக்கங்கள்

அதாவது,
அதுவரையில்,
அத்துடன்,
அத்தகைய,
அதெப்படி,
அதுவுமொரு,
அதல்ல,
அதில்லை,
அதைத்தவிர,
அதையொட்டி,
அப்போதைய,
அப்பொழுதுள்ள,
அப்பொழுதாவது,
அப்படிப்பட்ட,
அவ்வப்போது,
அப்போதைக்கப்போது.

அதை அதை,
அந்தந்த,
படிப்படியாக,
நாளுக்கு நாள்,
தனித்தனியாய்,
கட்சிப்பிரதிகட்சி,
அடிக்கடி,
இடையிடையே,
இடைவிடாமல்,
ஆங்காங்கு,
அவ்வாறு,
அவையாவன,
ஏற்பட/படு/பாடு
ஏற்பட்ட/டு,
ஏற்படுத்த/தி/து.

{ இருக்கிறது என்று, இருக்கின்றன என்று, அந்த இடத்தில்,

 தனிப்பட்ட இடத்தில், அடிப்படையாக,

அடுத்தபடியாக, அடியோடு,  ஐயமில்லை.

சந்தி எழுத்துக்கள்: *(86)* நிலை மொழியும், வருமொழியும் சேரும்போது, *1)* இயல்பாகச் சேருதலும் உண்டு: *(எ.கா.)* அடி + நுனி=அடி நுனி. *2)* புதிய எழுத்தொன்று தோன்றுதலும் உண்டு. *(எ.கா.)* மலை + குகை=மலைக்குகை. *3)* ஒன்று மற்றொன்றாகத் திரிதலும் உண்டு. *(எ.கா.)* மண் + பாண்டம் = மட்பாண்டம்.
4) இருக்கின்ற ஒன்று மறைதலும் உண்டு. *(எ.கா.)* மரம் + வேர் = மரவேர்.

தமிழின் இலக்கணம் அறிந்து, விரிவெழுத்தில் எழுதும்போது சந்திப் பிழை இல்லாது எழுதித் தரப் பழக வேண்டும்.

வினைச் சுருக்கம்: *(87)* 'கொடு' என்ற வினைச் சொல்லின் அடியாக, இருதிணை, ஐம்பால், மூவிடம், முக்காலம் ஆகியவற்றைக் காட்டும் சொற்கள் பிறக்கும். 'கொடுத்தான், கொடுத்தாள், கொடுத்தார், கொடுத்தது, கொடுத்தன, கொடுத்தேன், கொடுத்தாய், கொடுப்பது, கொடுப்பாய், கொடுப்பன' என்பன போலப் பல சொற்கள் உண்டாகின்றன. இவற்றை ஒலிக்கேற்ப இயல்பாகவே எழுதலாம். என்றாலும், ஒரே மாதிரியாகவும், வாகாகவும் சுருக்கி எழுத, 'வினைச் சுருக்கம்' என்ற தலைப்பில் சில தொகுத்துக் கொடுக்கப்படும். அவை தனித்தும், வினைச் சொற்களோடு சேர்த்தும் எழுதப்படும். சேர்த்து எழுதும்போது, இடைச் சந்தி ஒலிக் குறிக்கேற்ப குறித்தொடர் மாறுவதில்லை. என்றாலும், சந்திப்பிழை இல்லாதவாறு விரிவு எழுத்தில் எழுதித் தரவேண்டும். (எ.கா.)

கொடு + பாய் = கொடுப்பாய்,

கொடு + தாய் = கொடுத்தாய்.

வினைச் சுருக்கங்கள்

(த்)ததே, (த்)ததை, (த்)ததால், (த்)ததில், (த்)ததாக, (ப்)பட்டது, (ப்)பட்டன, படியால்; பட்டால், படுமா, படுமென, படுமே- யன்றி, படுவது, படுவதை, பட்டோர், பட்டவை.

பயிற்சி–21

சுருக்கெழுத்தில் எழுதுக

கொடுத்ததே, அடித்ததை, போகாததால், வராததில், கொடுத்ததாக, கேட்கப்பட்டது, கேட்கப்பட்டன, கேட்டபடியால், கேட்கப்பட்டால், கேட்கப்படுமா, கேட்கப்படுமென, கேட்கப் படுமே யன்றி, கேட்கப்படுவது, எடுக்கப்பட்டது, கேட்கத்தக்கது, கூறப் பட்டது, நினைக்கப்பட்டவை, வராததை, நினைத்ததாக.

பயிற்சி–22

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக





பாடச் சுருக்கம்

1. அடிக்கடி வரக்கூடிய வார்த்தைகளுக்கு இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட குறிகளைச் சேர்த்து எழுதும் குறித்தொடர் சுருக்கம் எனப்படும்.

2. வார்த்தைகளில் வரும் இன்றியமையாத சில குறிகளை மாத்திரம் வைத்துக்கொண்டு, எஞ்சியவற்றை விலக்கிச் சுருக்கம் அமைக்கப்படும்.

3. ஆரம்ப உயிர்க்குறியை விலக்கியும், தனிக் குறிச் சொற்களை அடிப்படையாக கொண்டும் சுருக்கம் அமைக்கப்படும்.

4. சுருக்கத்திலுள்ள முதல் வார்த்தை தனியாக எழுதப்பட்டால் எந்த நிலையில் எழுதப்படுமோ, அந்த நிலையிலிருந்தே சுருக்கத் தொடர் ஆரம்பித்து எழுதப்படும்.

5. 'என்ற/என்று' என்பதற்கு ஒரு சிறு மெல்லிய கோடு வாகுக்கேற்ப மேல்நோக்கியோ கீழ்நோக்கியோ, அதற்கு முன்னால் வரும் கோட்டோடு சேர்த்து எழுதப்படும். பிற சொல்லோடு சேர்க்காமல் தனியே எழுதப்படும்போது, 'என்ற/று' என்பதற்குச் சிறு கோடு போடப்படுவதில்லை.

6. வினைச் சொல்லின் அடியாக இருதிணை, ஐம்பால், மூவிடம், முக்காலம் காட்டப் பிறக்கும் சொற்களின் இறுதிகளுக்குக் கொடுக்கப்படும் குறிகள் 'வினைச் சுருக்கம்' எனப்படும்.

(விதிகள்: 79–87)

அத்தியாயம்—8

சிறிய சுழி

ஆரம்பத்திலும் நடுவிலும் சிறிய சுழி: *(88)* 'ச/ஸ'வுக்கு என்று தனியான மெய்க்குறி இருந்தாலும் அது ο என்ற சிறிய சுழியால் ஆரம்பத்திலும் நடுவிலும் குறிக்கப்படும்.

இடது வலது வாட்டம்: *(89)* இந்தப் பகுதியிலும், இனிமேல் வரப்போகும் பகுதிகளிலும், (கையின் போக்கு) இடது வாட்டமாக எழுதப்படுமென்றால் என்றும், வலது வாட்டமாக எழுதப்படு மென்றால் என்றும் எழுதப்படும். 'ச/ஸ' சுழி தனித்திருக்கும் போது இடது வாட்டமாக எழுதப்படும்.

(90) 'ச/ஸ' சுழி ஆரம்பத்திலோ நடுவிலோ *(1)* வளைவு கோடுகளின் உட்புறமாகவும், *(2)* கோணங்களின் வெளிப்புறமாகவும், *(3)* கோணம் உண்டாக்காத நேர்கோடுகளுக்கு இடது வாட்டமாகவும் சேர்த்து எழுதப்படும். எ.கா.

சாவி, சிலை.  நெசவு, பசுமை,

பாசறை, பிசகு ரசிக்க, கசப்பு,

அரசர்,  கசக்க, பசப்பு, சராசரி.

(91) ஆரம்பத்தில் 'உயிர்' வந்தாலும், ஆரம்ப உயிர்க் குறிகளோடு 'ச/ஸ' சுழி சேர்த்து எழுதப்படும். எ.கா.

ஊசல்,  ஆசாமி, இசைவு.

(92) கொக்கியுள்ள மெய்க்குறிகளுக்கு (விதி—6) 'ச/ஸ' சுழி கொக்கிக்குள் ஆரம்பத்தில் சேர்த்து எழுதப்படும். எ.கா.

 செழிப்பு, சயனி,  சோளப்பொரி.

(93) 'ஹ' வுக்கு முன் 'ச/ஸ' சுழி வந்தால், 'ஹ'வின் சுழியே

பெரியதாக எழுதப்படும். எ. கா.

சஹபாடி, சஹாரா.

(94) 'ல'வுக்கு முன்னோ பின்னோ வளைவு கோட்டுடன் சேர்க்கப்பட்டுள்ள சுழி வந்தால், சுழியின் வாட்டமாகவே 'ல' எழுதப்படும். எ.கா.

ஆலோசனை, வாசல், மசாலை.

(95) 'ச / ஸ' சுழி எழுதப்படும் வார்த்தைக்கு முன் வேறொரு வார்த்தை வந்து சேரும்போது, 'ச / ஸ' சுழி அப்படியே வைத்துக் கொள்ளப்படும். எ.கா.

சொல், பழிச்சொல், சுவடு, அடிச்சுவடு.

பயிற்சி–23

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



கடைசியில் சிறிய சுழி. (96) வார்த்தைகளின் இறுதியில் 'ம்' வந்தால் அதைக் காட்ட நேர்கோடானால் இடது வாட்டமாகவும், வளைவு கோடானால் வளைவின் உட்புறமாகவும், கடைசியில் ஒரு சிறிய சுழி சேர்க்கப்படும். எ.கா.

 பாடம்,  கோபம், முறம்,  மணம்,

கோலம்,  மௌனம்.

(97) ஆனால் ஒரு வார்த்தையின் கடைசியில் உயிரொலி வந்தால், உயிர்க்குறியைப் போடக் கடைசியில் ஒரு கோடு இருக்க வேண்டியது அவசியம். ஆதலால் கடைசியில் 'ம்' என்பதோடு, உயிரொலி சேர்ந்து விட்டால் 'ம்' சுழியை உபயோகப்படுத்தாது, முழுவதுமே எழுதப்படும். எ.கா.

படம்,  படமே, நிஜம், நிஜமாக.

(98) வேற்றுமை ஏற்ற வார்த்தைகளின் இறுதியில் 'ம்' சேர்ந்தால் உருபுக் குறிகளோடு 'ம்' சுழி சேர்க்கப்படும். எ.கா.

எனக்கும், என்னையும், என்னிடம்.

(99) 'ம்' என்பதற்குப் பிறகு 'உடைய' (விதி–75), 'என்ற/று (விதி–84) வந்தால் அவற்றுக்கான குறிகள் சேர்த்து எழுதப்படும். எ.கா.

 நம்முடைய, தம்முடைய,  போகுமென்று,

 சொல்வோமென்று.

(100) ஆரம்பத்தில் எழுதப்படும் சுழி ஆரம்பத்திலும், கடைசியில் எழுதப்படும் சுழி கடைசியிலுமே படிக்கப்படும். எ.கா.

 சமானம்,  செல்வம்.

(101) நடுவில் 'ம்' வந்தாலும், முடிவில் 'ச/ஸ' வந்தாலும் அவற்றைக் குறிக்கச் சிறிய சுழியை உபயோகப்படுத்தக்கூடாது; முழுவதுமே எழுதப்படும். எ. கா.

கம்மி, பம்மல், பாசி,  நாசி.

(102) ஆனால் கடைசியில் 'ச/ஸ'வைத் தொடர்ந்து 'ம்' வந்தால், அது கீழ்க்கண்டபடி எழுதப்படும். எ. கா.

 ஆயாசம், மோசம்.

(103) தனிக்குறிச் சொற்கள், சுருக்கம் ஆகியவற்றின் கடைசியில் 'ம்' சேர்ந்தால், அவற்றோடு 'ம்' சுழி சேர்த்து எழுதப்படும்.

எ. கா. .... அப்பொழுதும், ... அதையும், ... இதுவும்,

.... அவ்வாறும், ... ஏற்படும், ... எல்லாம்.

சுருக்கத்தில் 'சம்'. **(104)** 'ஆயாசம்' என்பதற்குப் போடப்படும் 'சம்' என்பது சுருக்கத்தில் 'அவசியம்' (அல்லது) 'அம்சம்' என்பதைக் காட்ட வாகுள்ள இடங்களில் அதற்கு முன் வரும் குறியுடன் சேர்த்து எழுதப்படும். எ. கா.

.... போவது அவசியம், ... ஓர் அம்சம்.

பயிற்சி-24

சுருக்கெழுத்தில் எழுதுக

ஆர்வம், ஒச்சம், ஞாபகம், அபராதம், கணிசம், அகலம், ஆதீனம், மிச்சம், புரதம், ஆகாசம், அமிலம், உறக்கம், வைரம், புருவம், ஆவேசம், அமுதம், உரிமம், துயரம், நோக்கம், இலவசம், அடக்கம், ஒடுக்கம், வீரம், நாணம், இதிகாசம், மேகம், பணையம், மோட்சம், கப்பம், விண்ணப்பம்.

பயிற்சி-25

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



வினைச் சுருக்கங்கள்

...... தையும், ... ததாகும், ... வதாகும்,

...... (ஆ)லொழிய, ... தாலொழிய, ... மேயொழிய,

...... (ம்) அளவில், ... விட்டால், ... விடில்.

பயிற்சி—26

சுருக்கெழுத்தில் எழுதுக

கொடுத்ததும், கொடுத்ததையும், கொடுத்ததாகும், களிப்பதும், கொடுத்தும், கொடுத்தேயும், கேட்டோம், கேட்டபடி யாலும், கேட்கப்படுவதும், சொன்னோம், கேட்டதையும், சொல்வதும், சொன்னபடியாலும், கேட்கப்படுவதாகும், கேட்டாலொழிய, அடித்தாலொழிய, போகாவிட்டால், சொன்னோமேயொழிய சொல்வதாகும், போகாவிடில்.

தனிக்குறிச் சொற்கள்

...... செய்/செய்ய, ... செய்த/செய்து, ... மாதம், ... சமய/மாய்

...... சம்பந்த/மாய், ... சாச்வத/மாய், ... வருஷ(ட)/மாய்,

...... விஷ(ட)ய/மாய், ... அவ்வளவு, ... சங்கம், ... சுங்கம்.

சுருக்கங்கள்

...... அரசியல், ... அச்சமயத்தில், ... அந்தச் சமயத்தில்,

...... அதுசம்பந்தமாக, ... ராஜ்ய, ... அவசியம், ... அவசரம்,

...... அகஸ்மாத்தாய், ... வருஷா வருஷம், ... வருஷத்திற்கு வருஷம், ... அவ்வளவுக்கவ்வளவு, ... அத்தியாவசியம்.

பயிற்சி–27

பார்த்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



பாடச் சுருக்கம்

1. சிறிய சுழி, 'ச/ஸ' என்பதற்கு ஆரம்பத்திலும் நடுவிலும், 'ம்' என்பதற்கு முடிவிலும் எழுதப்படும்.

2. 'ச/ஸ' சிறிய சுழி, வளைவு கோடுகளின் உட்புறமாகவும், கோணங்களின் வெளிப்புறமாகவும், கோணம் உண்டாக்காத நேர்கோடுகளுக்கு இடது வாட்டமாகவும் சேர்த்து எழுதப்படும்.

3. 'ம்' சிறிய சுழி, நேர்கோடானால் இடது வாட்டமாகவும்; வளைவு கோடானால் வளைவின் உட்புறமாகவும் எழுதப்படும்.

4. ஒரு வார்த்தையின் கடைசியில் உயிரொலி வந்தால் உயிர்க் குறியைப் போட, கடைசியில் ஒரு கோடு இருக்க வேண்டியது அவசியம். ஆதலால் கடைசியில் 'ம்' என்பதோடு உயிரொலி சேர்ந்துவிட்டால் 'ம்' சுழியை உபயோகப்படுத்தாது முழுவதுமே எழுதப்படும்.

5. கொக்கியுள்ள மெய்க்குறிகளுக்கு 'ச/ஸ' சுழி கொக்கிக்குள் எழுதப்படும்.

6. 'ஹ'வுக்கு முன் 'ச/ஸ' சுழி வந்தால் 'ஹ'வின் சுழியே பெரிதாக எழுதப்படும்.

7. 'ல'வுக்கு முன்னோ பின்னோ வளைவு கோட்டுடன் சேர்க்கப் பட்டுள்ள சுழி வந்தால் சுழியின் வாட்டமாகவே 'ல' எழுதப்படும்.

8. ஆரம்பத்தில் வரும் சுழி ஆரம்பத்திலும், கடைசியில் வரும் சுழி கடைசியிலுமே படிக்கப்படும்.

9. நடுவில் 'ம்' வந்தாலும், கடைசியில் 'ச/ஸ' வந்தாலும் சிறிய சுழியைப் போடாது முழுவதும் எழுதப்படும்.

10. தனிக்குறிச் சொற்கள், சுருக்கங்கள், வேற்றுமை ஏற்ற வார்த்தைகள் ஆகியவற்றின் முடிவில் 'ம்' வந்தால், 'ம்' சுழி அவற்றோடு சேர்த்து எழுதப்படும்.

(விதிகள்: 88–104)

அத்தியாயம்—9

பெரிய சுழி

ஆரம்பத்தில் பெரிய சுழி: *(105)* 'ஸ்வ/சுவ' என்பதைக் குறிக்க ஆரம்பத்தில் பெரிய சுழி *(1)* நேர்கோடுகளுக்கு இடது வாட்டமாகவும் *(விதி–89)*, *(2)* வளைவு கோடுகளுக்கு வளைவின் உட்புறமாகவும் சேர்த்து எழுதப்படும். ஆரம்பத்தில் மட்டுமே ஸ்வ/சுவ' சுழி எழுதப்படும். எ.கா.

சரம், ஸ்வரம், சாமி, ஸ்/சுவாமி.

(106) 'ஸ்வ' என்பதைத் தொடர்ந்து சுழி அல்லது கொக்கியுள்ள மெய்க்குறிகள் *(விதி–6)* வந்தால், 'ஸ்வ' சுழியைப் போடாது முழுவதும் எழுதப்படும். எ.கா.

ஸ்வாஹா, ஸ்வயம்.

(107) 'ஸ்வ' என்பதற்கு முன் 'உயிர்' வந்தால் பெரிய சுழியைப் போடாது முழுவதும் எழுதப்படும். எ.கா.

அசுவினி, ஈசுவரி.

நடுவில் பெரிய சுழி: *(108)* நடுவில் பெரிய சுழியை எழுதினால், அது அந்தச் சுழியைத் தொடர்ந்து வருகிற வல்லினம் 'க'வானால் 'க'வின் இன எழுத்தாகிய 'ங்' என்பதைக் குறிக்கும். இப்படியே 'ச' வானால் 'ஞ்' என்பதையும், 'ட'வானுல் 'ண்' என்பதையும், 'த'வானால் 'ந்' என்பதையும், 'ப'வானால் 'ம்' என்பதையும், 'ற'வானால் 'ன்' என்பதையும் குறிக்கும்.

சுருக்கமாகப் பார்த்தால், நடுவில் போடுகிற பெரிய சுழி 'ங், ஞ், ண், ந், ம், ன்' ஆகிய ஆறு மெல்லின மெய்யெழுத்துக்களில் எந்த ஒன்றை வேண்டுமானாலும் குறிக்கலாம். இந்த ஆறு மெல்லின எழுத்துக்களும் முறையே க, ச, ட, த, ப, ற ஆகியவற்றின் இன எழுத்துக்களாகையால் நடுவில் போடப்படுகிற பெரிய சுழி அந்தச் சுழியை அடுத்து உடனே எழுதுகிற வல்லின மெய்க்குறிக்கு ஏற்ற மெல்லினமாகப் படிக்கப்படும்.

(109) நடுவில் பெரிய சுழி *(1)* வளைவு கோடுகளின் உட்புறமாகவும், *(2)* கோணங்களின் வெளிப்புறமாகவும், *(3)* கோணம் உண்டாகாத இரண்டு நேர் கோடுகளுக்கு இடையே இடது வாட்டமாகவும் போடப்படும். எ.கா.

நங்கை, நம்பி,  நண்டு, பாங்கு,

கஞ்சி, புஞ்சை, பந்து,

பண்டம், கங்கை.

(110) 'ற'வுக்கு முன் வரும் 'ன்' என்பதையும் மூன்று கன்று என்பன போல நடுவில் பெரிய சுழி போட்டு எழுதலாம். என்றாலும் 'ன்' என்பது வேறு முறையால் பின்னர் எழுதப்படுவதால், நடுவில் 'ன்' என்பதற்குப் பெரிய சுழி போடப்படுவதில்லை.

(111) 'ச/ஸ' வுக்குப் பிறகு மெல்லினம் வந்தாலும், 'ம, ம்ப'வுக்குப் பிறகு 'ங' தவிர இதர மெல்லின எழுத்துக்கள் வந்தாலும், வாகாக எழுதுவதைக் கருதிப் பெரிய சுழியை நடுவில் போடாது முழுவதுமே எழுதப்படும். எ.கா.

 சஞ்சாரம், சண்பகம்,  முந்தி,

மஞ்சரி, மாண்பு, சம்பந்தி.

முடிவில் பெரிய சுழி: *(112)* வார்த்தைகளின் முடிவில் 'தா/ஆனது' என்று வந்தால் அதைக் காட்டக் கடைசியில் எழுதப்படும் 'ம்' சிறிய சுழியைப் போலவே பெரிய சுழி எழுதப்படும். எ.கா.

வீடானது, கேட்பதானது, சொத்தானது,

செய்வதானது.

(113) 'ஆனது'க்குப் பிறகு 'ம்' வந்தால் 'ம்' சுழி கீழ்க்கண்டபடி எழுதப்படும். எ.கா.

நியாயமானதும், அத்தியாவசியமானதும்.

(114) 'ஆனது'க்குப் பிறகு 'என்ற/று' வந்தால், சிறிய கோடு *(விதி 84)* வெளியே இழுக்கப்படும். எ.கா.

நியாயமானதென்று, அத்தியாவசியமானதென்று.

(115) 'ஆனது' என்பதோடு, ஈருயிராகிய 'ஐ', 'ஆய்' சேர்ந்தால் கடைசியில் போடப்படும் பெரிய சுழிக்குள்ளேயே ஈருயிர்க்குறி போடப்படும். எ.கா.

நியாயமானதை, நியாயமானதாய்.

பயிற்சி—28

சுருக்கெழுத்தில் எழுதுக

சுவரூபம், சுவாதி, சுவாகதம், சுவாசம், சுவதேசம், சுவாமிமலை, சுவாமிக்கண்ணு, சுவர்க்கம், சுவர்ணம், சுவாரஸ்யம், வஞ்சம், கம்பு, புகுந்து, பணிந்து, தஞ்சம், பிழம்பு, பூகம்பம், கிடங்கு, வேங்கை, உராய்ந்து, பாண்டம், மந்தி, உடந்தை, விதியானது, வேலையானது.

(116) 'ம்ப' என்பதற்கு என்று போடப்படுவதை மெய்க்குறிகள் அட்டவணையில் காண்க. இந்த 'ம்ப' மெய்க்குறி,

1. உயிரை முன்னதாகக் கொண்டு வந்தால் எழுதப்படும். எ.கா.

அம்பலம், அம்பிகை.

2. சுழிகளை முன்னதாக் கொண்டு வந்தாலும் எழுதப்படும். எ.கா.

 சாம்பல், செம்பு.

3. கீழ்க்கோடுகளுக்குப் பிறகு வந்தாலும், வாகான சேர்க்கையை உத்தேசித்து எழுதப்படும். எ.கா.

 கதம்பம், குடும்பம், ஜம்பம்.

(117) மற்ற இடங்களில் வாகாக எழுதுவதை உத்தேசித்து, 'ம்ப' என்பதற்கு நடுவில் பெரிய சுழி போட்டு, 'ப'தான் எழுதப்படும். எ.கா.

 ஆரம்பம், கிளம்பு, குழம்பு, ஸ்வயம்பு.

(118) 'ம்' சுழியைக் கொண்டு முடிகிற வார்த்தைகளோடு 'ஆக', 'ஆன' சேர்ந்தால் மெய்க்குறிகள், 'க, ன' என்பவை கையை எடுக்காமலேயே சேர்க்கப்படுவது வாகாக இருக்கும். ஆனால் அவற்றை வாகாகச் சேர்க்க வசதியற்ற இடங்களில் (நடுவில் சிறிய சுழி 'ச/ஸ' வைக் குறிக்குமாதலால்) கடைசியில் போடப்படும் 'ம்' சிறிய சுழியே பெரியதாக எழுதப்படும். எ. கா.

.... அவசரமாக, ... வழக்கமாக, ... வழக்கமான.

.... அத்தியாவசியமான.

பயிற்சி–29

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



தனிக்குறிச் சொற்கள்

.... சுவாதீன/மாய், ... சுயேச்சை/யாய்.

சுருக்கங்கள்

.... அரசாங்க, ... ஆதியோடந்தமாக, ... அதைப் போன்ற, ... மாட்சிமைதங்கிய.

வினைச் சுருக்கங்கள்

.... வேண்டாம், ... வேண்டாமென, ... வேண்டாமென்று, ... வேண்டாமெனில், ... வேண்டாமென்றால்.

பயிற்சி – 30
சுருக்கெழுத்தில் எழுதுக

மாட்சிமைதங்கிய நமது தேசப் பிதா காந்திஜி அரசியல் நெறியில் கையாண்ட ஆயுதம் அஹிம்சை, உண்மை என்ற இரண்டுமேயாகும். இதைப்போன்ற நம்பிக்கையான, நியாயமான வழி உலகில் வேறு எதுவும் இல்லை. பிறருக்கு ஊறு ஏற்படுத்த எண்ணாதது அஹிம்சை. எப்பொழுதும் அழிவு இல்லாதது உண்மை. இப்படிப்பட்ட இரண்டையும் கைக்கொண்ட நம்முடைய புனித முறையானது அப்போதிருந்த ஆங்கில அரசாங்கத்துக்கு ஒரு அணுகுண்டு போல அச்சம் கொடுத்தது. இத்தகைய நூதனமான போர் முறையை அவ்வப்போது உசிதமாய்க் கையாண்ட நமது தனிப்பட்டோர் இயக்கமே வாகை சூடியது. இந்தச் சமயத்தில் நாம் சுயேச்சையாய், சுவாதீனமின்றி, ஆதியோடந்தமாக, கட்சிப்பிரதிகட்சி பேசுவது கூடாது. நாம் எல்லோரும் இணைந்து பணி செய்ய எதைச் செய்வது இப்பொழுது அவசியமோ அதையே அவசரமாகச் செய்வது அத்தியாவசியம். அப்பொழுதே நம்முடைய நாடு, நம்முடைய தேசம் க்ஷேமப் பெறும்.

பாடச் சுருக்கம்

1. சிறிய சுழியைப் போலவே எழுதப்படும் பெரிய சுழி, ஆரம்பத்தில் 'ஸ்வ/சுவ' எனபதையும், நடுவில் 'ங், ஞ், ண், ந், ம்' என்ற மெல்லின எழுத்துக்களையும், முடிவில் 'ஆனது' என்பதையும் குறிக்கும்.

2. 'ஸ்வ/சுவ'க்குப் பிறகு கொக்கியுள்ள மெய்க்குறிகள் வந்தாலோ, முன்பு 'உயிர்' வந்தாலோ பெரிய சுழி எழுதப்படாது, முழுவதுந்தான் எழுதப்படும்.

3. 'ச/ஸ'வுக்குப் பிறகு மெல்லினம் வந்தாலும், 'ம, ம்ப'வுக்குப் பிறகு 'ங்' தவிரப் பிற மெல்லின எழுத்துக்கள் வந்தாலும் பெரிய சுழி நடுவில் போடப்படாது, முழுவதுந்தான் எழுதப்படும்.

4. 'ம்ப'வுக்கு முன்பு உயிர் வந்தாலும், சுழிகள் வந்தாலும், கீழ்க்கோடுகளுக்குப் பிறகு வந்தாலும், 'ம்ப' மெய்க்குறி எழுதப் படும்.

(விதிகள்: 105 – 118)

அத்தியாயம்–10

நீண்ட சுழி

நீண்ட சுழி 'ஸ்த' *(119)* 'ச/ஸ' சுழியைப் போல (விதி–*90*) வார்த்தைகளின் ஆரம்பத்தில் வருகின்ற 'ஸ்த' என்பதைக் காட்ட, அது எந்த மெய்க்குறியோடு போய்ச் சேருகிறதோ, அதன் பாதியிலிருந்து ஒரு நீண்ட சுழி சேர்த்து எழுதப்படும். எ.கா.

ஸ்தூபி, ஸ்தானம், ஸ்தம்பம்.

(120) 'ஸ்த'வைத் தொடர்ந்து சுழி அல்லது கொக்கியுள்ள மெய்க்குறிகள் (விதி–*6*) வந்தால், 'ஸ்த' நீண்ட சுழியைப் போடாமல் முழுவதும் எழுதப்படும். எ.கா.

ஸ்தாயி, ஸ்தாணு.

(121) நடுவில் எழுத வாகாக இருந்தால் நீண்ட சுழி ''ஸ்த' எழுதப்படும். எ.கா.

புஸ்தகம், கஸ்தூரி, விஸ்தரிப்பு.

(122) ஒரு வார்த்தையின் கடைசியில் உயிரொலி வந்தால், உயிர்க்குறியைப் போடக் கடைசியில் ஒரு கோடு இருக்க வேண்டியது அவசியம் (விதி–*97*). ஆதலால், கடைசியில் 'ஸ்த'வுடன் உயிரொலி சேர்ந்து விட்டால் பெரும்பாலும் நீண்ட சுழியை உபயோகப்படுத்தாமல், முழுவதுமே எழுதப்படும். எ. கா.

கிஸ்தி, ரஸ்தா, ஜாஸ்தி.

நீண்ட சுழி ஸ்தர்': *(123)* 'ஸ்தர்' என்பதைக் காட்ட அது எந்த மெய்க்குறியோடு போய்ச் சேருகிறதோ அதன் மூன்றில் இரண்டு பாகத்திலிருந்து ஒரு நீண்ட சுழி சேர்த்து எழுதப்படும். ஆனால், ஆரம்பத்தில் 'ஸ்தர்' நீண்ட சுழி ஒருபோதும் எழுதப்படுவதில்லை. நடுவிலும், உயிரொலி இன்றி வந்தால் முடிவிலும் 'ஸ்தர்' நீண்ட சுழி

நேர்கோடுகளுக்கு இடது வாட்டமாகவும், வளைவு கோடுகளுக்கு வளைவின் உட்புறமாகவும் எழுதப்படும். எ.கா.

ரெஜிஸ்தர், மோஸ்தர், வஸ்திரகாயம்.

(124) ஆரம்பத்தில் எழுதப்படும் நீண்ட சுழி ஆரம்பத்திலும், கடைசியில் எழுதப்படும் நீண்ட சுழி கடைசியிலுமே படிக்கப்படும்.

(125) கடைசியில் எழுதப்படும் நீண்ட சுழிக்குப் பின் 'ம்' சுழி கீழ்க்கண்டபடி சேர்த்து எழுதப்படும். எ.கா.

ஹஸ்தம், வஸ்திரம்.

(126) கடைசியில் நீண்ட சுழி போட்ட வார்த்தைகளுக்குப் பின் பன்மை விகுதியாகிய 'கள்' வந்தால் நீண்ட சுழிக்கு வெளியே ஒட்டினாற்போல ஒரு சிறு கோடு எழுதப்படும். எ.கா.

வஸ்திரங்கள், வஸ்திரங்களும்.

பயிற்சி–31

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



தனிக்குறிச் சொற்கள்

வாஸ்தவ/மாய், அந்தஸ்து, கம்யூனிஸ்டு

பயிற்சி–32

சுருக்கெழுத்தில் எழுதுக

நாம் எல்லோரும் உடம்பு ஸ்தூல சரீரம் ஆகாது இருக்க

எப்பொழுதும் ஏதாவது வேலையைச் செய்வதே உசிதம். அந்தஸ்தை எண்ணி சும்மா இருக்கக் கூடாது. சோம்பல் மிகக் கெடுதியாகும். உழைப்பே உயர்வு அளிக்கும். உழைக்கும் உடம்பை நோயின்றி காக்க வாஸ்தவமாய் உடல் பயிற்சியும் அவசியம். அப்பொழுதே எல்லோர் உடம்பும் ஸ்தபதி செதுக்கிய சிலையாக மிளிறும். உடலை உறுதி செய்வது, ஊக்கமாக உழைப்பது நமக்கு எல்லா வகையிலும் மனக் களிப்பை அளிக்கும். உழைப்புக்கு ஈடு எதுவும் இல்லை. வாழ்வு செழிக்க, தேசம் கொழிக்க உழைப்புக்கே உயர்வு அளிப்போம்.

சுருக்கங்கள்

...... செய்கையில், ... செய்யப்படுகையில், ... செய்யப்பட்டிருக்கையில், ... அதைச் செய்கையில், ... எதையாகிலும், ... எதைச் செய்தாகிலும், ... அதைப்போன்றதொரு, ... அதெல்லாம், ... அதன்மூலம், ... அவ்வாறு செய்கையில், ... அவ்வாறு செய்யப்படுகையில், ... இருக்கும்பொழுது, ... வைத்திருக்கும்பொழுது, ... செய்திருக்கும்பொழுது, ... வைக்கும்பொழுது, ... அங்குமிங்கும் ...... மாகாணம், ... மிக முக்கியம், ... தொழிலாளர், ... தொழிலாளி, ... தொழிற்சாலை, ... தொழிற்சங்கம், ... சச்சரவு, ... சண்டைசச்சரவு.

பயிற்சி—33

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக





பாடச் சுருக்கம்

1. சிறிய நீண்ட சுழி 'ஸ்த'வையும், பெரிய நீண்ட சுழி 'ஸ்தர்' என்பதையும் காட்டும்.

2. 'ஸ்த' நீண்ட சுழி ஆரம்பத்திலும், நடுவிலும் எழுதப்படும் முடிவில் உயிரொலி வந்தால் பெரும்பாலும் எழுதப்படுவதில்லை.

3. 'ஸ்த'வைத் தொடர்ந்து கொக்கியுள்ள மெய்க்குறிகள் வந்தால் நீண்ட சுழி எழுதப்படுவதில்லை. முழுவதும் எழுதப்படும்.

4. 'ஸ்தர்' நீண்ட சுழி நடுவிலும், முடிவிலும் எழுதப்படுகின்றதே தவிர ஆரம்பத்தில் எழுதப்படுவதில்லை.

5. கடைசியில் நீண்ட சுழி போட்ட வார்த்தைகளுக்குப் பின் பன்மை விகுதியாகிய 'கள்' வந்தால் நீண்ட சுழிக்கு வெளியே ஒட்டினாற் போல் ஒரு சிறு கோடு பன்மை விகுதியைக் காட்ட எழுதப்படும்.

(விதிகள் 119 – 126)

அத்தியாயம்—11

ர், ல் – கொக்கிகள்

(127) உயிர்மெய்களோடு சேர்ந்து வருகின்ற 'ர்' அல்லது 'ல்' என்பதைக் குறிக்க, அவ்வம் மெய்க்குறிகளோடு ஒரு சிறு கொக்கி சேர்க்கப்படும்.

நேர்கோடுகளுக்கு 'ர்' கொக்கி: *(128)* 'ர்' என்பதற்குச் சிறிய கொக்கி, நேர்கோடுகளுக்கு அவற்றின் ஆரம்பத்தில் வலது வாட்டமாகச் சேர்த்து எழுதப்படும். எ.கா



ப, பர், டர், ஜர், கர்.

நேர்கோடுகளுக்கு 'ல்' கொக்கி: *(129)* 'ல்' என்பதற்குச் சிறிய கொக்கி, நேர்கோடுகளுக்கு அவற்றின் ஆரம்பத்தில் இடது வாட்டமாகச் சேர்த்து எழுதப்படும். எ.கா.



ப, பல், டல், ஜல், கல்.

வளைவு கோடுகளுக்கு 'ர்' கொக்கி: *(130)* 'ர்' என்பதற்குச் சிறிய கொக்கி, வளைவு கோடுகளுக்கு அவற்றின் ஆரம்பத்தில் வளைவின் உட்புறம் சேர்த்து எழுதப்படும். எ.கா

வ, வர், தர், மர், நர்.

வளைவு கோடுகளுக்கு 'ல்' கொக்கி: *(131)* 'ல்' என்பதற்குப் பெரிய கொக்கி, வளைவு கோடுகளுக்கு அவற்றின் ஆரம்பத்தில் **வளைவின் உட்புறம் சேர்த்து எழுதப்படும்.** எ.கா.

வ, வல், தல், மல், நல்.

(132) மெய்க்குறிகள் / \\ 'ர/ற', / 'ச்ச', ⌣ 'ங', ('ல',) 'ச/ஸ' என்பவற்றுக்கும், சுழி அல்லது கொக்கியுள்ள மெய்க்குறிகளுக்கும், 'ர், ல்' கொக்கிகள் போடப்படுவதில்லை.

(133) கொக்கியுள்ள இவை எல்லாம் முறையே 'பர், பல், டர், டல், தர், தல்' என்றே படிக்கப்படும். சாதாரண மெய்க்குறிகளுக்குப் போடுவது போலவே இவற்றுக்கும் உயிர்க்குறிகள் போட்டு வாசிக்கப்படும்.

(134) 'ஆற்றல், குற்றம்' என்பன போன்ற வார்த்தைகளில் வரும் 'ற்ற' என்பது 'ட்ற' என்பதன் ஒலியையே ஒத்து நிற்பதால், 'ற்ற' என்பதற்கு 'ட'வுக்கு 'ர்' கொக்கி போடப்படும். இது 'டர்' என்பதையும், 'ற்ற' என்பதையும் குறிக்கும். எ.கா.

வேடர்,  வெற்றி, மூடர்,  முற்றி.

(135) 'க' வுக்கு 'ல்' கொக்கி போட்டால், அது 'கல்' என்பதைக் குறிக்கும். எ. கா.

திண்டுக்கல், செங்கல்.

இந்த 'கல்' என்பதையே பன்மை விகுதியாகிய 'கள்' என்பதைக் காட்ட, 'கள்' என்பதற்கு முன் மெல்லினம் 'ங்' வராத வார்த்தைகள் (தனிக்குறிச் சொற்கள், சுருக்கம் உட்பட) எல்லாவற்றுக்கும் எழுதப்படும். எ.கா.

மாடுகள், வண்டுகள், தொழிலாளர்கள்.

(136) பன்மை விகுதியாகிய 'கள்' ளுக்குப் பிறகு ஈற்று உயிர்க்குறி 'ஏ, ஓ' சேர்க்கப்படும். எ.கா.

 மாடுகளே, மாடுகளோ.

பயிற்சி—34

சுருக்கெழுத்தில் எழுதுக

கர்ஜனை, கற்பரசி, மர்மம், கர்வம், மடல், அகரம், தோற்றம், குற்றம், நபர்கள், நகல், அக்கறை, ஆற்றாமை, காற்று, கொற்றம், கடல், ஆக்கிரமி, முற்றிலும், அறிஞர், கவிஞர், கப்பல், பகர்ந்து, ஒற்றுமை, அரங்கேற்றம், புகல், பகல்.

பயிற்சி—35

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



மாற்றுருவங்கள் 'வர், வல், தர், தல்': *(137)* 'ர/ற, ச/ஸ' என்பவற்றுக்கு 'ர், ல்' கொக்கி போடப்படுவதில்லை. (விதி 132). என்றாலும், 'வர், வல், தர், தல்' என்பவற்றுக்கு மாற்று உருவங்கள் கொடுப்பதற்காக 'ர/ற (கீழ்), ச/ஸ' வுக்குக் கொக்கியிடப்படுவதைக் கீழே பார்க்க.

 வர், வல்,

தர்,  தல்.

(ஜோடிகளின் முதல் குறியெல்லாம் இடது வாட்டம். இரண்டாவது குறியெல்லாம் வலது வாட்டம்).

(138) ஆரம்ப உயிர்க்குறிகள், படுக்கைக் கோடுகள் மேற்கோடுகள் ஆகியவற்றுக்குப் பின் 'வர், தர், வல், தல்' வந்தால், அவற்றின் வலது வாட்டம் எழுதப்படும். எ.கா.

 செல்வர்,  கிழவர்,  இரவல்.

ஏவல், ஈதல்,  காதல்.

(139) மற்றச் சமயங்களில் வலது வாட்டமோ, இடது வாட்டமோ, எது வாகாகச் சேர்த்து எழுத வருகின்றதோ அந்த வாட்டத்தில் எழுதப்படும். எ.கா.

 உழவர்,  மற்றவர்.

(140) கொக்கியிடப்பெற்ற 'தர், தல்' வார்த்தைகளை விரிவெழுத்தில் எழுதும் போது, தேவைப்படும் இடத்தில், 'த்' என்கிற சந்தி எழுத்தும் சேர்த்து எழுதப்படும். எ.கா.

அடித்தீர், அடித்தல்.

பயிற்சி—36
சுருக்கெழுத்தில் எழுதுக

தர்மசாலை, தற்காப்பு, ஏற்றவர், அகவல், ஆடவர், மாணவர், ஆறுதல், புலவர், பரவல், முறுவல், வர்க்கம், வர்மம், மேலவர், பகைவர், எதிரொலி, வர்ணனை, தர்மபுரி, காவல், வர்ணஜாலம், எதிர்மறை.

தனிக்குறிச் சொற்கள்

பெயர், பிரிட்டிஷ், நண்பர், மெம்பர், நம்பர், அன்று/றி, ஒன்று/றி, இன்று/றி, ஒவ்வொன்று, காரிய, கோரி, நிர்வாக/கி மறுபடி, மேற்படி, ஆதரவு/ஆதரி/ஆகார, திரு, தீர்மான/மாய், அவர், அதில், பல, பலவித/மாய், ஆனால், ஆனதனால், உதாரணம், காலம், உறுப்பினர்.

சுருக்கங்கள்

ஒன்றோடொன்று, ஒன்றன்பின்ஒன்றாய், ஒன்றை ஒன்று, ஒன்றுகொன்று, உணர்ச்சி, பலவந்த.

பயிற்சி—37

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



பாடச் சுருக்கம்

1. 'ர்' என்பதற்குச் சிறிய கொக்கி நேர்கோடுகளுக்கு, அவற்றின் ஆரம்பத்தில் வலது வாட்டமாகச் சேர்த்து எழுதப்படும்.

2. 'ல்' என்பதற்குச் சிறிய கொக்கி நேர்கோடுகளுக்கு, அவற்றின் ஆரம்பத்தில் இடது வாட்டமாகச் சேர்த்து எழுதப்படும்.

3. 'ர்' என்பதற்குச் சிறிய கொக்கியும், 'ல்' என்பதற்குப் பெரிய கொக்கியும், வளைவு கோடுகளுக்கு அவற்றின் ஆரம்பத்தில் வளைவின் உட்புறம் சேர்த்து எழுதப்படும்.

4. 'ர/ற, (ச்)ச,  ங, ல, ச/ஸ' என்பவற்றுக்கும், சுழி அல்லது கொக்கியுள்ள மெய்க்குறிகளுக்கும், 'ர், ல்' கொக்கிகள் போடப்படுவதில்லை.

5. பன்மை விகுதியாகிய 'கள்' என்பதற்கு 'கல்' எழுதப்படும்.

6. 'ர், ல்' கொக்கியிடப்பட்ட ர/ற (கீழ்), ச/ஸ ஆகியவை, இடது வாட்டம் 'வர், தர், வல், தல்' ஆகியவற்றுக்கு மாற்று உருவங்களாக எழுதப்படும்.

7. ஆரம்ப உயிர்க்குறிகள், படுக்கைக் கோடுகள், நேர்கோட்டு மேற்கோடுகள் ஆகியவற்றுக்குப் பின் வலது வாட்டம், 'வர், தர், வல், தல்' எழுதப்படும். மற்றச் சமயங்களில் எந்த வாட்டம் சேர்த்து எழுத வாகாக இருக்கிறதோ அந்த வாட்டம் எழுதப்படும்.

(விதிகள்: 127 – 140)

அத்தியாயம்–12

குறுக்கிடும் உயிர்களும், கொக்கிகளுக்கு முன் சுழிகளும்

குறுக்கிடும் உயிர்கள்: *(141)* வாகாக எழுதுவதற்கு 'ர், ல்' கொக்கி சேர்ந்த தொடருக்கு இடையே குறில் வந்தாலும், கொக்கிகள் உபயோகிக்கப்படும். நெடில் வந்தால் கொக்கியை உபயோகப் படுத்தாமல் முழுவதும் எழுதப்படும். எ.கா.

பலமாக, பாலம், பிறகு,  பீரிடு.

(142) இருந்தாலும், வாகாகவும், நீளமாகப் போகும் குறித்தொடரைச் சுருக்கி எழுதுவதற்காக, 'ர், ல்' சேர்ந்த தொடருக்கு இடையே எந்த இடத்து நெடில் வந்தாலும், அதைக் காட்டக் கொக்கியிடப்பட்ட மெய்க்குறிக்கு நடுவே ஒரு குறுங்கோட்டு உயிர்க்குறி போடப்படும். குறித்தொடர் முதல்நிலையில் எழுதப் பட்டிருந்தால் முதலிடத்து உயிர் நெடிலையும், இரண்டாம் நிலையில் எழுதப்பட்டிருந்தால் இரண்டாம் இடத்து உயிர் நெடிலையும், மூன்றாம் நிலையில் எழுதப்பட்டிருந்தால் மூன்றாம் இடத்து உயிர் நெடிலையும் குறிக்கும். (விதி–38) எ.க.

கார்காலம்,  கோரிக்கை, பூர்த்தி.

(143) மேற்சொல்லிய விதிகளின்படி கொக்கி போட்டு எழுதக்கூடிய குறித் தொடர்களைக் கூட, வார்த்தைக்கு வார்த்தை வித்தியாசப்படுத்திக் காட்ட வேண்டிய இடங்களில், ஒரு வார்த்தை கொக்கியுடனும், மற்றது முழுவதும் எழுதப்படுவதைக் கீழே பார்க்க.

 பார்த்தே, பாராதே,  பார்வை,  பறவை,

 பொறுமை, பொறாமை.

(144) ஒரு வார்த்தையின் ஆரம்பத்தில் 'நல்ல' என்பது வந்தால், அதற்கு  என்பது சேர்த்து எழுதப்படும். எ.கா.

 நல்லது.  நல்லவை, நல்லகாலம்.

இதுபோல், ஒரு வினைச் சொல்லோடு கடைசியில் 'கொள்ள' என்பது வந்தால், அதற்கு ...... என்பது சேர்த்து எழுதப்படும். எ.கா.

...... கூடிக்கொள்ள, ... அமைத்துக்கொள்ள.

'ர், ல்' கொக்கிகளுக்கு முன் சுழிகள்: *(145)* 'ர்' கொக்கியுடைய நேர்கோடுகளுக்கு முன் ஆரம்பத்தில் 'ச/ஸ' அல்லது 'ஸ்வ'வுக்குரிய சுழி வந்தால் கொக்கியுள்ள பக்கமாக, அதாவது வலது வாட்டமாகவே, அந்தச் சுழிகள் சேர்த்து எழுதப்படும். எ.கா.

...... சீக்கிரம், ... சுற்றம், ... ஸ்வீகரி.

(146) ஆனால், 'ல்' கொக்கியிடப்பட்ட நேர்கோடுகளுக்கும் 'ர், ல்' கொக்கியிடப்பட்ட வளைவு கோடுகளுக்கும், 'ச/ஸ' சுழி மாத்திரம் கொக்கிக்குள், கொக்கி, சுழி இரண்டையும் சுலபமாகத் தெரிந்துகொள்ளக்கூடிய வகையில் எழுதப்படும். எ.கா.

...... சேவல், ... சுழி, ... சகலத்திற்கும்,

...... பேசினார், ... பரஸ்பரம், ... பசுக்கள்.

(147) நடுவிலே 'ஸ்கர்' என்பது கீழ்க்கோடுகளுக்குப் பின் வந்தால் அது கீழ்க்கண்டபடி எழுதப்படும். எ.கா.

...... கிருபாசாகரனா, ... பாஸ்கரனா, ... பேசுகிறவை.

பயிற்சி—38

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக.



சுருக்கங்கள்

அதிகார/ரி, காலக்கிரமத்தில்,
அபிப்பிராய/ம்/பேதம், காலத்திற்கேற்ப,
இன்றியமையாத/து, மேற்படியார்.
அதற்கு, ஒவ்வொருவருக்கும்,
சமயோசித/மாய், ஒருவருக்கொருவர்,
தற்கால நிலைமை, ஒருவரோடொருவர்,
எதிர்கால நிலைமை, ஒருவரையொருவர்
நாளடைவில், எல்லாவற்றிலும்,
நாளாவட்டத்தில், சர்வகலாசாலை,
பெருமை தங்கிய, நல்லது பொல்லாதது.
பிரஸ்தாபித்து, அதற்கேற்றபடி,
தற்பொழுது/போது, அவற்றை.
அப்பொழுதாகிலும், சகோதர சகோதரிகளே

வினைச் சுருக்கங்கள்

ததற்கு, ததினால்/ததனால், தீர், னர்/னார்/னீர், வர்/வார்/வீர், பர்/பார்/பீர், னால், (ஆ)மல், (ஆ) மற்போனால், (ஆ) திருந்தால்,

பயிற்சி—39

சுருக்கெழுத்தில் எழுதுக

கொடுத்ததற்கு, கொடுத்ததனால், கொடுத்தீர், பாடினார், ஆடினார், கூடினீர், சொல்வார், ஆடுவார், போவீர், கேட்பார், கொடுப்பார், கேட்பீர், பாடினால், கேட்காமல், கேட்காமற்போனால், கேட்காதிருந்தால்.

பயிற்சி—40

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



பாடச் சுருக்கம்

1. வாகாக எழுதுவதற்கு 'ர், வ்' கொக்கி சேர்ந்த தொடருக்கு இடையே குறில் வந்தால் கொக்கி எழுதப்படும். ஆனால் நெடில் வந்தால் பெரும்பாலும் கொக்கி எழுதப்படுவதில்லை.

2. 'ர், வ்' கொக்கி சேர்ந்த தொடருக்கு இடையே எந்த இடத்து நெடில் வந்தாலும், சுருக்கமாகவும், வாகாகவும், எழுதுவதற்காகச் சில இடங்களில் கொக்கியிடப்பட்ட மெய்க் குறிக்கு நடுவே குறுங்கோட்டு உயிர்க்குறி போடப்படும். குறித்தொடர் எழுதப் பெறும் நிலையைக் கொண்டு அது எந்த இடத்து உயிரைக் குறிக்கும் என்பது அறியப்படும்.

3. 'ர்' கொக்கியையுடைய நேர்கோடுகளுக்கு முன் ஆரம்பத்தில் 'ச/ஸ' அல்லது 'ஸ்வ'வுக்குரிய சுழி வந்தால் கொக்கியுள்ள பக்கமே அந்தச் சுழிகள் எழுதப்படும்.

4. 'வ்' கொக்கியிடப்பட்ட நேர்கோடுகளுக்கும், 'ர், வ்' கொக்கியிடப் பட்ட வளைவு கோடுகளுக்கும், 'ச/ஸ' சுழி மாத்திரம் கொக்கிக்குள் சுழி, கொக்கி, இரண்டும் சுலபமாகத் தெரிந்து கொள்ளக் கூடிய வகையில் எழுதப்படும்.

(விதிகள்: 141–147)

அத்தியாயம்—13

'த' கொக்கி

'த' கொக்கி. *(148)* சுழியோ கொக்கியோ, எதுவும் இல்லாத நேர்கோட்டு மெய்களுக்கு முன்னால் வருகின்ற 'த' அல்லது 'தி' என்பதைக் காட்ட அவ்வந் நேர்கோடுகளின் ஆரம்பத்தில் வலது வாட்டமாகப் பெரிய கொக்கி சேர்த்து எழுதப்படும். எ.கா.

தடுக்க, தாபம்,  தக்கபடி, தரை.

(149) ஆரம்பத்தில் உயிர் வந்தாலும், ஆரம்ப உயிர்க் குறிகளோடு 'த' கொக்கி சேர்த்து எழுதப்படும். எ.கா.

உதடு.

(150) ஆனால் ஆரம்ப உயிர்க் குறியோடு 'த' கொக்கியை வாகாகச் சேர்க்க வசதியற்ற இடங்களில் முழுவதும் எழுதப்படும். எ.கா.

 அதிகம். அதிரசம் அதிர்ச்சி

(151) நடுவிலும், 'த' கொக்கி, வாகாகச் சேர்க்க வசதியிருந்தால் சேர்த்து எழுதப்படும், அதாவது இரண்டு கோடுகளுக்கிடையே 'த' வரும்போது அதனை அடுத்து வருகிற கோடு நேர்கோடாக இருந்தால் அந்த நேர்கோட்டின் ஆரம்பத்தில் 'த' கொக்கி சேர்த்து எழுதப்படும். எ.கா.

போதிக்க, வாதிக்க, கைத்தறி.

(152) 'ல்' என்பதற்கு, வளைவு கோடுகளின் ஆரம்பத்தில் வளைவின் உட்புறம் பெரிய கொக்கி சேர்த்து எழுதப்படுவதால் (விதி—131) வளைவு கோடுகளுக்கு 'த' கொக்கி போடப்படுவதில்லை. எ.கா.

தீவு, தீனி,  தீமை.

ஆனால் 'ல' வளைவு கோடானாலும், அதற்கு 'ல்' பெரிய கொக்கி போடுவதில்லையாதலால், 'த' கொக்கி போடப்படும். எ.கா.

தலை, தலைவர். தோல்வி.

பயிற்சி—41

சுருக்கெழுத்தில் எழுதுக

தகவல், தொகுதி, துப்புரவு, தொடரும், அவதாரம், துறவி, தேர்வு, தலையீடு, தீர்வை, அவதூறு, திரவியம், மூதறிவு, தலைவலி, தலைப்பு, அநுதாபம், தொலைவு, கதவு, திரை, தோகை, ஆணித்தரம், தரிசு, மோதிரம், தூக்கம், துருவம். உதரம், பச்சாதாபம், தப்பு, தீர்க்கதரிசனம், திரையரங்கு, நிதானம்.

தனிக்குறிச் சொற்கள்

தடவை, திட்டம், தகராறு.

சுருக்கங்கள்

தக்கவாறு, குடிசைத் தொழில்,

 தலைமுறை தலைமுறையாய்.

பயிற்சி—42

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக





பாடச் சுருக்கம்

1. 'த' கொக்கி, நேர்கோடுகளுக்கு அவற்றின் ஆரம்பத்தில் வலது வாட்டமாகப் போடப்படும்.

2. ஆரம்ப உயிர்க் குறியோடு 'த' கொக்கி சேர்க்கப்படும்.

3. நடுவிலும் வாகாக எழுதவரும் இடங்களில் 'த' கொக்கி எழுதப்படும்.

4. 'ல'வைத் தவிர, மற்ற வ்ளைவு கோடுகளுக்கு 'த' கொக்கி கிடையாது.

(விதிகள் 148 – 152)

அத்தியாயம்—14

ன், வ்' கொக்கிகள்

'ன்' கொக்கி. *(153)* 'ன்' என்பதற்குச் சிறிய கொக்கி, நேர்கோடுகளுக்கு அவற்றின் கடைசியில் வலது வாட்டமாகச் சேர்த்து எழுதப்படும். எ.கா.

பொன், டின், பையன், பேன்.

(154) 'ன்' என்பதற்குச் சிறிய கொக்கி, வளைவு கோடுகளுக்கு அவற்றின் கடைசியில் வளைவின் உட்புறம் சேர்த்து எழுதப்படும். எ.கா.

மீன், நான், வ்ான், தேன்.

'வ்' கொக்கி. *(155)* 'வ்' என்பதற்குச் சிறிய கொக்கி, நேர்கோடுகளுக்கு அவற்றின் கடைசியில் இடது வாட்டமாகச் சேர்த்து எழுதப்படும். எ.கா.

ராவ், மியாவ்.

(156) 'ன்' என்பதற்குச் சிறிய கொக்கி, வளைவு கோடுகளுக்கு அவற்றின் கடைசியில் வளைவின் உட்புறம் சேர்த்து எழுதப்படுவதால், வளைவு கோடுகளுக்குப் பின் 'வ்' வந்தால். கொக்கியின்றி, முழுவதுமே எழுதப்படும். எ.கா.

நவீனம்.  லவங்கம்.

(157) ஒரு வார்த்தையின் கடைசியில் உயிரொலி வந்தால், உயிர்க் குறியைப் போடக் கடைசியில் ஒரு கோடு இருக்க வேண்டியது அவசியம். (விதி—*97*). ஆதலால் கடைசியில்'ன்', 'வ்'வோடு உயிரொலி சேர்ந்துவிட்டால், கொக்கியை உபயோகப்படுத்தாமல் முழுவதுமே எழுதப்படும். எ.கா.

தேன், தேனீ. ராவ், ரவி.

(158) 'ர/ற'வுக்குப் பின் 'ன்' வந்தால் எழுதும் வாகு கருதிப் பெரும்பாலும் மேற்கோடு 'ர/ற' தான் எழுதப்படும். எ.கா.

பேரன்,  மாறன், வீரன்.

(159) 'ன்' கொக்கியிடப்பட்ட 'ல' வேறு கோடுகளோடு சேரும்போது, வாகுக்கு ஏற்ப மேல் நோக்கியோ கீழ்நோக்கியோ எழுதப்படும். எ.கா.

பலன், வேலன்.  காலன்,  நீலன்.

நடுவில் 'ன்', 'வ்' கொக்கிகள். *(160)* நடுவில் 'ன், வ்' கொக்கி, பின்னே வரும் கோடுகளோடு வாகாகச் சேர்க்க வசதியுள்ள இடங்களில் எழுதப்படும். எ.கா.

பொன்னாடை. தேன்கூண்டு, பவனி ஜீவனம்.

(161) சேர்த்து எழுத வாகு இல்லாத இடங்களில் நடுவில் 'ன், வ்' கொக்கியைப் போடாமல், அவற்றுக்குரிய மெய்க்குறிகளே எழுதப் படும். எ.கா.

 நோன்பு,  ஜன்மம், சீனிவாசன்.

பயிற்சி—43

சுருக்கெழுத்தில் எழுதுக

அனந்தன், குன்று, அவன், துன்பம், அறிவகம், ராஜீவ், அறிவிக்கை, பன்மை, பீமன், பெரும்பான்மை, சீதனம், மைந்தன், கவர்ச்சி, ஜீவநதி, ஐம்பொன், துணைவன், மன்னன், இடைவேளை, மனிதன், பவானி, ரஸ்தாக்களின், பகைவன், கதிரவன், கவனி, அடிவானம், ஆரவாரம்.

(162) நடுவில் 'ண்' வந்தால், அது பெரும்பாலும் மெய்க்குறி 'ண'வைக் கொண்டோ பெரிய சுழியைக் கொண்டோ காட்டப்படும். எ.கா.

 கணக்கு, மாண்பு, வண்டி.

(163) ஆனால் வாகாக எழுதுவதை உத்தேசித்தும், நீளமாகப் போகும் குறித்தொடரைச் சுருக்குவதற்கும், 'ன்' கொக்கியே 'ண்' என்பதைக் குறிக்கவும் நடுவில் சில இடங்களில் எழுதப்படும். எ.கா.

கண்காட்சி, கண்காணிப்பு.

(164) இரண்டு கோடுகளுக்கிடையே 'த' வந்தால், 'த'வை அடுத்து வருகிற நேர்கோட்டின் ஆரம்பத்தில் அதற்குரிய பெரிய கொக்கி எழுதப்படும். *(விதி–151)* எ.கா.

பாதகம்,  கோபதாபம், பதிப்பு, கைத்திறன்.

(165) ஆனால் வாகாக எழுதுவதை உத்தேசித்தும், நீளமாகப் போகும் குறித்தொடரைச் சுருக்குவதற்கும், நேர்கோடுகளுக்குப் பின் 'த' வந்து அவற்றைத் தொடர்ந்து உடனே வளைவு கோடுகள் வந்தால், நடுவில் வரும் 'த' என்பதைக் குறிக்க, நேர்கோடுகளின் கடைசியில், இடது வாட்டமாகப் போடும் 'வ'வுக்குரிய சிறிய கொக்கியே எழுதப்படும். எ.கா.

 போதனை, குடித்தனம், சச்சிதானந்தம்.

(166) நேர்கோடுகளுக்குப் பின் 'னம், னும்' வந்தால் 'ன்' கொக்கி போடும் வாட்டமாகவே 'ம்' சுழி சேர்த்து எழுதப்படும். எ.கா.

 பிரகடனம், ஸ்தல ஸ்தாபனம், இருப்பினும்,

கடினம், சிக்கனம், யாரேனும்.

'மும்' சேர்ந்தால் சிறிய சுழி பெரியதாக எழுதப்படும். எ.கா.

கடினமும், சிக்கனமும்.

(167) கடைசியில் வளைவு கோடுகளுக்குப் பின்னே 'னும்' வந்தாலும், நேர்கோடுகளுக்குப் பின்னே 'வும்' வந்தாலும், முறையே 'ன், வ்' கொக்கிக்குள் 'ம்' சுழி சேர்த்து எழுதப்படும். எ.கா.

அவனும், போகவும், மிகவும்.

(168) கடைசியில் 'ன்' கொக்கியிடப்பட்ட, அல்லது 'னம்/னும்' சுழியிடப்பட்ட வார்த்தைகளுக்குப் பின் பன்மை விகுதியாகிய 'கள்' வந்தால், கொக்கி அல்லது சுழியிடப்பட்ட கோடுகளுக்கு வெளியே ஒட்டினாற் போல ஒரு சிறு கோடு எழுதப்படும். எ.கா.

.... நலன்கள், ... வர்கனங்கள், ... மான்கள்.

(169) 'ஆயினும்' என்பது தனித்து ஆரம்பத்தில் வரும்போது ...... என்று எழுதப்படும். ஆனால் ஒரு வார்த்தையின் கடைசியில் வரும்போது ...... என்பது முன்னதுடன் சேர்த்து எழுதப்படும். எ.கா.

.... அங்காயினும், ... தீதாயினும், ... அப்பொழுதாயினும்.

சுருக்கத்தில் 'ன்' கொக்கி. ***(170)*** சுருக்கத்தில் ஒரு வார்த்தைக்குப் பின் கடைசியில் வரும் 'தான்' என்பதைக் காட்ட 'ன்' கொக்கி சேர்த்து எழுதப்படும். எ.கா.

.... அங்குதான், ... அதுதான், ... ஏற்பாடுதான்.

பயிற்சி–44

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



தனிக்குறிச் சொற்கள்

.... பயன், ... ஜனநாயக, ... ஜவாப், ... ஜீவாதார,

.... அன்றேனும், ... அப்பொழுதேனும் /போதேனும்.

சுருக்கங்கள்

அன்றைய தினம், சம்பந்தா சம்பந்தமின்றி,

நேற்றைய தினம், அவ்வாறேனும்,

ஜவாப்தாரி, தேச பக்தன்.

பயிற்சி—45

சுருக்கெழுத்தில் எழுதுக

தேச பக்தன் சக்கரபாணி அகஸ்மாத்தாய் அநாதைக் குழந்தைகளின் ஆசிரமம் ஒன்றை அன்றைய தினம் திண்டிவனம் சாலையில் மன்மத வருஷம் ஏற்படுத்தினார். அது இன்றைய தினம் படிப்படியாய் வளர்ந்துள்ளது. அதன் பயன் மேன்மேலும் பெருக எவ்வாறேனும் தனிக் கவனம் செலுத்தி அதற்கு வழிவகை காண்பது நமது ஜீவாதாரக் கடமையாகும். ஒருவகையில் நிதி மிகுந்தவர் நன்கொடை அளிக்கலாம். பெரும் நகரம் எல்லாவற்றிலும் இதைப்போன்ற தர்ம ஸ்தாபனம் ஏற்பட கொடையாளிகள் பலர் அங்கங்கே தங்குதடையின்றி கருணை பொழியலாம். இந்த தேசத்தின் இன்றியமையாத செல்வம் குழந்தைகளே. எல்லாக் குழந்தைகளும் கல்வி பெற்று வாழ்வில் பயன்பெற நாம் ஆற்றும் பணியே தெய்வத் திருத் தொண்டாகும். நம் செல்வம், நம் சக்தி யாவையும் இதற்கே அர்ப்பணிப்போம்.

பாடச் சுருக்கம்

1. 'ன்' என்பதற்குச் சிறிய கொக்கி, நேர்கோடுகளுக்கு அவற்றின் கடைசியில் வலது வாட்டமாகச் சேர்த்து எழுதப்படும். வளைவு கோடுகளுக்கு அவற்றின் கடைசியில் வளைவின் உட்புறம் சேர்த்து எழுதப்படும்.

2. 'வ்' என்பதற்குச் சிறிய கொக்கி, நேர் கோடுகளுக்கு அவற்றின் கடைசியில் இடது வாட்டமாகச் சேர்த்து எழுதப்படும். வளைவு கோடுகளுக்கு 'வ்' கொக்கி கிடையாது.

3. நடுவில் 'ன்', 'வ்', கொக்கி பின்னே வரும் கோடுகளோடு வாகாகச் சேர்க்க வசதியுள்ள இடங்களில் எழுதப்படும்.

4 நேர்கோடுகளுக்குப் பின் . 'னம், னும்' வந்தால் 'ன்' கொக்கி போடும் வாட்டமாகவே 'ம்' சுழி சேர்த்து எழுதப்படும். 'மும்' வந்தால் சிறிய சுழி பெரிதாக எழுதப்படும்.

5. வளைவு கோடுகளுக்குப் பின்னே 'னும்' வந்தாலும், நேர் கோடுகளுக்குப் பின்னே 'வும்' வந்தாலும் முறையே 'ன், வ்' கொக்கிக்குள் 'ம்' சுழி சேர்த்து எழுதப்படும்.

6. சுருக்கத்தில் 'தான்' என்பதைக் குறிக்க 'ன்' கொக்கி எழுதப்படும்.

(விதிகள் 153 – 170)

அத்தியாயம்–15

'ள்/ழ்'– கொக்கி

'ள்/ழ்' கொக்கி: *(171)* வார்த்தைகளின் முடிவில் வரும் 'ள்/ழ்' என்பது பெரிய கொக்கியால் குறிக்கப்படுகிறது. அவசியமான இடங்களில் 'ம்' சுழியும் சேர்க்கப்படும். எ.கா.

நாள், நாளும், குறள், குறளும்,

தமிழ், தமிழும், புகழ், புகழும்.

(172) 'ள்/ழ்' பெரிய கொக்கி வளைவு கோடுகளுக்கு வளைவின் உட்புறம் சேர்த்து எழுதப்படும். எ.கா.

தாள், திருநாள்,  இதழ்.

(173) ஆரம்பச் சேர்க்கை எதுவுமின்றி வருகிற நேர்கோடுகளுக்கு 'ள், ழ்' கொக்கி, கடைசியாக வருகிற உயிர்க்குறியின் மாற்றுப்புறம் எழுதப்படும். இது கடைசியில் வரும் உயிர்க்குறியைக் குறிப்பதற்கு வாகாக இருக்கும். எ.கா.

பாழ், கூழ்.

(174) ஆரம்ப உயிர்க் குறி, சுழி, நீண்ட சுழி, கொக்கி போன்ற ஆரம்பச் சேர்க்கை உடைய நேர்கோடுகளுக்கு, கோடு நன்கு நேராக இருப்பதற்கு வாகாக, ஆரம்பச் சேர்க்கையின் மறுபுறம், 'ள், ழ்' கொக்கி எழுதப்படும். எ.கா.

 அருள்,  சுருள், செய்யுள்,

திரள்,  மரங்கள்,  பாடங்கள்.

(175) நடுவில் 'ள்/ழ்' வந்தால் பெரிய கொக்கியைப் போடாது முழுவதுமே எழுதப்படும். எ.கா.

 வேள்வி,  கேளிக்கை, களிப்பு,

வாழ்வு, தாழ்வு, வழக்கு.

(176) ஆனால் 'ள்/ழ்' கொக்கியிட்டப்பட்ட வார்த்தைகளுக்குப் பின் மற்றொரு வார்த்தையோ (விதி–37), வேற்றுமை உருபோ, பன்மை விகுதியோ சேரும்போது 'ள்/ழ்' கொக்கி வாகுள்ள இடங்களில் அப்படியே வைத்துக் கொள்ளப்படும். எ.கா.

தேள்கடி, தாள்போடு, தமிழ் இசை,

கூழ் கஞ்சி. கொள்க, வாழ்நாள்,

படங்களில், மகளுடைய, சுருள்கள்.

பன்மை விகுதி 'கள்': *(177)* பன்மை விகுதியாகிய 'கள்' என்பதற்கு முன் மெல்லினமாகிய 'ங்' வந்து அதை நடுவில் பெரிய சுழி கொண்டு காட்ட வாகு இல்லாத இடத்திலும், தனிக்குறிச் சொற்கள், சுருக்கங்கள் ஆகியவற்றோடு பன்மை விகுதி சேரும்போது 'கள்' ளுக்கு முன் 'ங்' வருமிடத்திலும், வர், ல (கீழ்) கடைசியில் வரும் இடத்திலும், பன்மை விகுதியாகிய 'கள்' என்பதற்கு 'ள்/ழ்' கொக்கியே கடை சியில் எழுதப்படும். எ.கா.

தேசங்கள், நாசங்கள், அம்சங்கள்,

வருஷங்கள், விஷயங்கள், அதிகாரங்கள்,

ஆடவர்கள், ஊழல்கள், வேல்கள்.

சுருக்கத்தில் 'ள்/ழ்' கொக்கி: *(178)* 'அவர்கள்' என்ற சொல் மரியாதைக்குரிய பின் மொழியாகப் பல இடங்களில் வரும். அதைக் குறிக்க அவ்வார்த்தைக்கு முன்னுள்ள வார்த்தையின் கடைசிக் கோட்டின் முடிவில் 'ள்/ழ்' கொக்கி சேர்த்து எழுதப்படும். எ.கா.

நேருஜி அவர்கள், காமராஜ் அவர்கள்,

பெரியார் அவர்கள், ராஜாஜி அவர்கள்.

பயிற்சி—46

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



தனிக்குறிச் சொற்கள்

நாங்கள், நீங்கள், உங்கள், எங்கள், தங்கள், ஜனங்கள், அவர்கள், சங்கங்கள், மக்கள்.

சுருக்கங்கள்

அபிப்பிராயங்கள், அபிப்பிராய பேதங்கள், சண்டை சச்சரவுகள், நாள்தோறும், கட்சிப்பிரதி கட்சிகள். தங்களைத் தாங்களே, பழக்க வழக்கங்கள், உணர்ச்சிகள், குடிசைத் தொழில்கள்.

வினைச் சுருக்கங்கள்

தீர்கள், வார்கள்/வீர்கள், களேயாகில், களல்லாத, கொள்ளும்படி, கொள்ளும்போது, கொள்கிறேன், கொள்கிறார்கள்.

பயிற்சி—47

சுருக்கெழுத்தில் எழுதுக

கொடுத்தீர்கள், சொல்வார்கள், கேட்பார்களேயாகில்,
வீடுகளல்லாத, அறிந்து கொள்ளுகிறேன், கேட்டுக்கொள்ளும்படி,
கேட்டுக்கொள்ளும்போது, கேட்டுக்கொள்ளுகிறேன்,
அறிந்து கொள்கிறார்கள்,, கேட்டுக்கொள்கிறார்கள்.

பயிற்சி—48

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக





பாடச் சுருக்கம்

1. *வளைவு கோடுகளுக்கு வளைவின் உட்புறம் கடைசியில் 'ள்/ழ் பெரிய கொக்கி எழுதப்படும்.*

2. *ஆரம்பச் சேர்க்கை எதுவும் இல்லாத நேர்கோடுகளுக்கு 'ள்/ழ்' பெரிய கொக்கி, கடைசியில் வருகிற உயிர்க்குறியின் மாற்றுப்.புறம் எழுதப்படும்.*

3. *ஆரம்பச் சேர்க்கையுடைய நேர்கோடுகளுக்கு 'ள்/ழ்' பெரிய கொக்கி ஆரம்பச் சேர்க்கையின் மறுபுறம் கடைசியில் எழுதப்படும்.*

4. *நடுவில் 'ள்/ழ்' கொக்கி பெரும்பாலும் எழுதப்படுவதில்லை. ஆனால் 'ள்/ழ்' கொக்கியிடப்பட்ட வார்த்தைகளோடு மற்றொரு வார்த்தை சேரும்போது 'ள்/ழ்' கொக்கி அப்படியே வைத்துக் கொள்ளப்படும்.*

5. *சுருக்கத்தில் 'அவர்கள்' என்பதற்கு 'ள்/ழ்' கொக்கி எழுதப்படும்.*

(விதிகள்: 171–178)

அத்தியாயம்–16

'த, வ, ஷ, ள்ள' மாற்று உருவங்கள்

(179) 'த, வ, ஷ' வுக்கு முறையே ( ), ⌣ ⌣ என்று மாற்று உருவங்கள் கொடுத்திருப்பதை மெய்க்குறிகள் அட்டவணையில் பார்க்க. ஜோடிகளின் முதல் உருவமெல்லாம் இடது வாட்டம். மற்றவை வலது வாட்டம்.

'த, வ, ஷ' மாற்று உருவம்: *(180)* தனித்தோ, உயிரொலியை முதலாகக் கொண்டோ வந்தால், இடது வாட்டம் எழுதப்படும். எ.கா.

வா, ஊது, உஷா, ஆதி,

அவா, ஏவு.

(181) சேர்த்து எழுதும்பொழுது, சுழி, கொக்கி ஆகியவற்றுடன் கூடிய மெய்க்குறிகள் (விதி–6) அவற்றைத் தொடர்ந்து உடனே வந்தால் இடது வாட்டம் எழுதப்படும். எ.கா.

தயவு, வழி, காஷாயம்.

(182) அவற்றின் கடைசியில் சுழி, நீண்ட சுழி, கொக்கி ஆகியவை வந்தால் இடது வாட்டம் எழுதப்படும். எ.கா.

தண்டம், வஸ்திரம், வாள்.

(183) மற்ற இடங்களில் எந்த வாட்டம் வாகாகச் சேர்த்து எழுதுவதற்கு வருகின்றதோ, அந்த வாட்டம் எழுதப்படும். எ.கா.

மசோதா, தானியம், நைஷதம், வகை.

ஷோபா, வசை, ஷோக்கு, ஷண்முகம்.

'ள்ள' மாற்று உருவம்: *(184)* 'ள்ள' என்பதைக் காட்ட '⌣ ⌢' என்று முறையே இடம், வலமாக இரு வாட்டமும் கொடுத்திருப்பதை மெய்க்குறிகள் அட்டவணையில் பார்க்க.

'ள்ள'வைப் பின்தொடர்ந்து 'த, வ, ழ, ய, ன' வந்தால், இடது வாட்ட 'ள்ள' எழுதப்படும். ம, ர/ற (மேல்) வந்தால் வலது வாட்ட 'ள்ள' எழுதப்படும். மற்ற இடங்களில், பொதுவாக இடமோ வலமோ எழுதுவதற்கு வாகாக வரும் வாட்டம் எழுதப்படும். எ.கா.

உள்ளது, உள்ளவை, கள்ளழகர்,  வெள்ளரி, உள்ளன,  வள்ளியூர், தள்ளாமை,  பள்ளிக்கூடம்.

பயிற்சி–49

சுருக்கெழுத்தில் எழுதுக

தயவு, வாக்கு, வடிக, சதுரம், தேசாபிமானம், அத்தாட்சி, சதுக்கம், வணக்கம், உள்ளன்பு, உள்ளடக்கம், ஆவணம், வெள்ளாமை, சதுப்பு, சதுரங்கம், கள்ளுக்கடை, வாழை, உள்ளம், பள்ளம், வெள்ளாடு, வெள்ளாவி, தைரியம், வளைந்து, விகடம், பள்ளத்தாக்கு, அப்பாலுள்ள.

தனிக்குறிச் சொற்கள்

 லட்சம், லட்சியம், அலட்சியம்.

 வாழ்க்கை,  கூட்டுறவு.

சுருக்கங்கள்

 ஒரு நிமிஷம்,  ஒவ்வொரு நிமிஷமும், நிமிஷத்திற்கு நிமிஷம், உள்ளது உள்ளபடி, லட்சம் லட்சமாய்,  பாரபட்சமின்றி, பட்சபாதமின்றி, திவ்யக்ஷேத்திரம், கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவு ஸ்தாபனம்.

பயிற்சி–50

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



பாடச் சுருக்கம்

1. 'த, வ, ஷ' ஆகியவற்றின் இடது வாட்டம் (1) தனித்தும், (2) உயிரொலியை முதலாகக் கொண்டு வந்தாலும், (3) கொக்கியுள்ள மெய்க்குறிகளுக்கு முன் வந்தாலும், (4) கடைசியில் சுழி, நீண்ட சுழி, கொக்கி ஆகியவை வந்தாலும் எழுதப்படும்.

2. மற்ற இடங்களில் எந்த வாட்டம் வாகாக எழுத வருகின்றதோ அந்த வாட்டமே எழுதப்படும்.

3. 'த, வ, ழ, ய, ன' ஆகியவற்றுக்கு முன் 'ள்ள' வந்தால் இடது வாட்டமும், 'ம, ர/ற (மேல்)'வுக்கு முன் வந்தால் வலது வாட்டமும் எழுதப்படும். மற்ற இடங்களில் பொதுவாக இடமோ வலமோ எழுதுவதற்கு வாகாக வரும் வாட்டம் எழுதப்படும்.

(விதிகள்: 179–184)

அத்தியாயம்–17

'ல,. ஷ' மேலும் கீழும்

(185) .... 'ல' மேல் நோக்கியே எழுதப்பட்டாலும், சில சமயம் கீழ் நோக்கியும் எழுதப்படும். அதேபோல், வலது வாட்டம் .... 'ஷ' கீழ் நோக்கியே எழுதப்பட்டாலும் சில சமயம் மேல் நோக்கியும் எழுதப்படும் (விதி–8).

'ல' மேல், கீழ். *(186)* ஆரம்பத்திலோ முடிவிலோ 'ல' மேல் நோக்கியே சாதாரணமாக எழுதப்படும். எ.கா.

.... லாபம், ... கூலி, ... சல்லாபம்.

(187) 'ல'வுக்கு முன்னோ. பின்னோ வளைவு கோடுகளுடன் (விதி–94) அல்லது கொக்கியுள்ள மெய்க்குறிகளுடன் சேர்க்கப் பட்டுள்ள சுழி வந்தால், சுழியின் வாட்டமாகவே 'ல' எழுதப்படும். எ.கா.

.... மாசிலாமணி, ... கௌன்சில், ... ஹ்ராலாஸ்யம.

(188) 'ண, ன, ஞ, ங' ஆகியவற்றுக்குப் பின் 'ல' வந்தால் வாகாக எழுதுவதை உத்தேசித்துக் கீழ் நோக்கியே எழுதப்படும். எ.கா.

.... அணில், ... நீலம், ... ஞாலம். .... ஆங்கிலம் .

(189) மேல் நோக்கிய நேர் கோடுகளுக்கும், ... வ, ... ஷ, ... சக, ... ழ ஆகியவற்றுக்கும் பின்னே 'ல்' தனிமெய் வந்தால் கீழ் நோக்கியும், இல்லாவிடில் மேல் நோக்கியும் எழுதப்படும். எ.கா.

.... வேல், ... வேலி, ... ஸ்கேல், ... ஸ்கேலை,

.... ரோல், ... ராலி .... குழல், ... குழலி.

(190) நடுவில் வந்தால் எழுதுவதற்கு எப்படி வாகாக வருகிறதோ, அப்படி எழுதப்படும். எ.கா.

காவடி, நீலாம்புரி.

'ஷ' மேல், கீழ். (191) வலது வாட்ட 'ஷ' வேறொரு வளைவு கோட்டோடு சேரும்போது பொதுவாக எந்த வளைவு கோட்டோடு சேருகிறதோ, அதன் வாட்டமாகவே மேல் நோக்கியோ கீழ் நோக்கியோ எழுதப்படும். எ.கா.

மேஷம், வேஷம்.

நேர்கோடுகளோடு சேரும்பொழுது பெரும்பாலும் கீழ் நோக்கியே எழுதப்படும். என்றாலும் வாகு கருதி மேல்நோக்கியும் சில இடங்களில் எழுதப்படும்.

ஷரா,  போஷாக்கு.

பயிற்சி–51
சுருக்கெழுத்தில் எழுதுக

சிலம்பு, நிழல், மறியல், தோஷம், உஷார்,
தென்றல், தளியல், தணல், விசேஷம், உஷ்ணம்,
சால்பு, கல்லாமை, துகில், ரோஷம், ஆக்கிரோஷம்,
மணல், நாணல், சிலேடை, விஷம், ஷொதல்,
வள்ளல், கிழிசல், அடையலாம், ரிஷபம், பொக்கிஷர்.

சுருக்கங்கள்

பலவற்றை, அவற்றால்.

ஜாதி வித்தியாச உணர்ச்சி.

'ல, ஷ' மேலும் கீழும்

பயிற்சி–52

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



பாடச் சுருக்கம்

1. 'ல' மேல் நோக்கியே பெரும்பாலும் எழுதப்படும்.

2. 'ல'வுக்கு முன்னோ பின்னோ வளைவு கோட்டுடன் சேர்க்கப் பட்டுள்ள சுழி வந்தால், சுழியின் பக்கமே 'ல' எழுதப்படும்.

3. 'ண, ன, ஞ, ங' ஆகியவற்றுக்குப் பின் 'ல' வந்தால், கீழ் நோக்கியே எழுதப்படும்.

4. மேல் நோக்கிய நேர்கோடுகள் 'வ, ஷ, சக, ழ' ஆகியவற்றிற்குப் பின் 'ல்' தனி மெய் வந்தால் கீழ் நோக்கியும், இல்லாவிடில் மேல் நோக்கியும் எழுதப்படும்.

5. வலது வாட்ட 'ஷ' வேறொரு வளைவு கோட்டோடு சேரும்போது, அந்த வளைவு கோட்டின் வாட்டமாகவே மேல்நோக்கியோ கீழ்நோக்கியோ எழுதப்படும்.

6. நேர் கோடுகளோடு சேரும்பொழுது பெரும்பாலும் 'ஷ' வலது வாட்டம் கீழ் நோக்கியே எழுதப்படும். சில இடங்களில் வாகு கருதி மேல் நோக்கியும் எழுதப்படும்.

(விதிகள் 185 – 191)

அத்தியாயம்—18

பாதியாக்கும் முறை

பொது விதி. *(192)* ஒரு கோட்டின் சாதாரண நீளம் அக்கோட்டுக்குரிய மெய்யொலியை அடுத்து, 'ட/டு' அல்லது த/து' வரும்போது பாதியாக்கப்படும். எ.கா.

நட்பு, வடக்கு, பத்மநாபன்,

மஹாத்மா, ஜட்கா, மட்கலம்.

(193) 'ட', 'டு' பாதியாக்கப் பெறும்போது முறையே 'ட்ட/டுட' என்பதைக் குறிக்கும். எ.கா.

ஆட்டம், குற்றச்சாட்டு, அட்டிகை, இட்டிலி.

(194) 'ட்/த்'என்பதற்குப் பாதியாக்கப்படுகிற ம, ந/ன ;'டு/து' என்பதற்குப் பாதியாக்கப்படுவதோடு அழுத்தியும் எழுதப்படும். எ.கா.

மடக்கு, நடப்பு, சிந்தனை,

நடுவர், முதலியோர்.

(195) பாதியாக்கப்பட்ட கோடுகளின் ஆரம்பத்திலோ முடிவிலோ சுழி கொக்கி ஆகியவை சேர்க்கப்படலாம். எ.கா.

சப்தமி, சாஸ்திரம், நிபந்தனை, பந்தகம்.

(196) தமிழில் பெரும்பாலான வார்த்தைகளின் நடுவில் 'ட்'டுக்குப் பிறகு 'ட'வும், 'த்'க்குப் பிறகு 'த'வும் வருவதால், இம்மாதிரியான இடங்களில் பாதியாக்கப்பட்ட கோடுகளோடு சேரும் ட்/த் க்குப் பிறகு 'ட/த' சேர்த்தே படிக்கப்படும். எ.கா.

மட்டமாய், வர்த்தகம், வைத்தியர், வாத்தியம்.

எழுதும் இடம்: (197) பாதியாக்கப்பட்ட மேற்கோடோ, கீழ்க்கோடோ, வரியினூடே உயிரொலியைக் காட்ட எழுதப்படுவதில்லை. ஒரு குறித் தொடரின் முதலில் வரும் பாதியாக்கப்பட்ட மேற்கோடோ கீழ்க்கோடோ, படுக்கைக் கோடுகளைப் போல (விதி 40) அவ்வார்த்தையின் முதலில் வரும் உயிரொலி முதல் இடத்ததானால் எழுதும் வரிக்கு மேலும், இரண்டாம், மூன்றாம் இடத்ததானால் எழுதும் வரியை ஒட்டியுமே எழுதப்படும். எ.கா.

தந்திரம், சுதந்திரம், நடக்க, மீட்க.

யந்திரம், இந்திரன், நோட்டம், நீட்டம்

பயிற்சி—53

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



(198) மெய்க்குறிகள் 'ம' 'ந/ன'வோடு 'ட்/த்' சேரும்போது, ம, ந/னவுக்குரிய குறி பாதியாக்கப்பட்டு அழுத்தி எழுதப்படுவதால் 'ம்ப' 'ங' இரண்டும் பாதியாக்கப் படுவதில்லை.

(199) மெய்க்குறி 'ள' பாதியாக்கப்படுவதில்லை. 'ள' பாதியாக்கப்பட்டால் 'ள்ள' போல் ஆகிவிடும். அதே போல், 'ய' தனித்திருக்கும்பொழுது பாதியாக்கப்படுவதில்லை. 'ய' பாதியாக்கப் பட்டால் ஆரம்ப உயிர்க்குறி 'இ/ஈ' போலாகிவிடும். ஆயினும், 'ன்'

கொக்கியிடப்பட்ட 'ய'வுக்குரிய குறி, '(இ)யந்த' என்பதற்குப் பாதியாக்கப்படும். எ.கா.

யந்திரம், இந்திரஜாலம்.

(200) மேற்கோடு 'ர/ற' பொதுவாக பாதியாக்கப்படுவதில்லை. ஏனெனில், ஆரம்ப உயிர்க்குறி 'உ/ஊ' 'இருக்கிறது/கின்றன, என்ற/று' என்பன போன்றவற்றுக்கு எல்லாம் பாதியாக்கப்பட்ட 'ர/ற (மேல்)' வைப் போன்ற ஒரு குறி ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளது. எ.கா.

(இ)ரத்தம், (இ)ரத்தினம்.

ஆயினும், ஆரம்பச் சேர்க்கையுள்ள இடங்களில் 'த்/த்த' என்பதற்கு வாகுள்ள இடங்களில் பாதியாக்கப்படும். எ.கா.

அசுரத்தனம், சூரத்தனம்.

(201) 'த்/த்' என்பதற்கு முன் 'ப'வுக்குரிய குறி கடைசியில் பாதியாக்கப்படுவதில்லை. ஏனெனில், 'பட/படி/பட்ட' என்பதற்குப் பாதியாக்கப்பட்ட 'ப' தனிக்குறியாக ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளது. எ.கா.

கொடுப்பது, அற்புதம்.

(202) பாதியாக்குவது எங்கெங்கே வாகாக இல்லையோ, அங்கெல்லாம் முழுவதுமே எழுதப்படும். எ.கா.

முந்தி, பாண்டுரங்கன், குதிக்க.

(203) ஒரே வாட்டத்திலிருக்கும் பாதிக்கோடும் முழுக்கோடும் சேர்த்து எழுதப்படுவதில்லை. எ.கா.

பட்டாடை, பட்டினி, கட்டிடம்.

'ஷ்ட' குறி. (204) 'ஷ்ட' என்பதற்கு என்பது குறி. இது நடுவிலோ முடிவிலோ வாகுக்கேற்பச் சேர்த்து எழுதப்படும்.

ஆரம்பத்தில் உயிர் வந்தாலும், ஆரம்ப உயிர்க்குறிகளோடு சேர்த்து எழுதப்படும். எ.கா.

 நஷ்டம், தீர்க்கதிருஷ்டி,  அஷ்டமி,

இஷ்டமான.

பயிற்சி-54

சுருக்கெழுத்தில் எழுதுக

கட்டுரை, வெட்கம், மத்தியஸ்தம், புஷ்டி, நடப்பாண்டில், ஈட்டுறுதி, மத்தியஸ்தர், கைகாட்டி, சமதிருஷ்டி, காட்டாறு, வர்த்தமானம், வர்த்தக சபை, கூட்டணி, கஷ்டமான, அர்த்தசாமம்,
நடுப்பகல், சட்டசபை, விளையாட்டு, தூரதிருஷ்டி, ஜெய்ஹிந்த், வெள்ளோட்டம், கொட்டாரம், படுகொலை, கள்ளச்சந்தை, பக்கவாத்தியம்.

தனிக்குறிச் சொற்கள்

ஆதரித்த/து, திருத்த/து,  எதிர்த்த/து,

 மட்டும், கொண்ட/டு, அல்லது,

 இந்தியா, வந்த/து, வேண்டும்/டி,

 இருந்த/து, அடைந்த/து,

சுருக்கங்கள்

பயனுண்டு,  ஒன்றுண்டு, நடவடிக்கை,

பொதுவாக, பொதுமக்கள், ராஜதந்திரம்,

அதுமட்டுமல்ல, ஒட்டுமொத்தமாக.  திருமதி

வினைச் சுருக்கங்கள்

...... வந்திருக்கிறது/கின்றன, ... வந்திருக்கும், ... வந்திருந்தனர், ... வேண்டுமென்று, ... வேண்டுமென்றால், ... வேண்டிய, ... வேண்டியதாக, ... வேண்டுமானால், ... வேண்டிய மட்டும், ... வேண்டுமென்பது, ... வேண்டுமென, ... கொண்டிருக்கும், ... கொண்டிருக்கிறோம், ... கொண்டிருக்கையில், ... கொண்டிருக்கிறது/கின்றன, ... (க்)கிறது, ... (க்)கிறதேனும், ... (க்)கிறதாயினும், ... (க்)கிறவை.

பயிற்சி–55

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக





பாடச் சுருக்கம்

1. ஒரு கோட்டின் சாதாரண நீளம் அக்கோட்டுக்குரிய மெய்யொலியை அடுத்து ட/ட̣ அல்லது த/த̣ வரும்போது பாதியாக்கப்படும்.

2. ம, ந/ன ஆகிய இரண்டின் சாதாரண நீளம், ட்/த் என்பதற்குப் பாதியாக்கப்படும். ட்̣/த்̣ என்பதற்கு அவை பாதியாக்கப் படுவதோடு, அழுத்தியும் எழுதப்படும்.

3. பாதியாக்கப்பட்ட மேற்கோடோ கீழ்க்கோடோ அவ் வார்த்தையின் முதலில் வரும் உயிரொலி முதல் இடத்ததானால் எழுதும் வரிக்கு மேலும், இரண்டாம், மூன்றாம் இடத்ததானால் எழுதும் வரியை ஒட்டியும் எழுதப்படும்.

4. ள, ம்ப, ங, ர/ற (மேல்) ஆகிய மெய்க்குறிகள் பாதியாக்கப் படுவதில்லை.

5. ஒரே வாட்டத்திலிருக்கும் பாதிக்கோடும், முழுக்கோடும் சேர்த்து எழுதப்படுவதில்லை.

6. 'ஷ்ட' என்பதற்கான குறி நடுவிலோ முடிவிலோ வாகுக்கேற்பச் சேர்த்து எழுதப்படும். ஆரம்ப உயிர்க்குறிகளோடு சேர்த்தும் எழுதப்படும்.

(விதிகள்: 192–204)

அத்தியாயம்–19

இரட்டிப்பு முறை

பொதுவிதி. *(205)* வளைவுகோட்டு மெய் இரட்டிக்கும்போது அந்த மெய்க்குறியின் சாதாரண அளவு இரண்டு பங்கு நீட்டித்து எழுதப்படும் (விதி–20) என ஆரம்பத்தில் கூறப்பட்டது. அதனோடு முரண்படாது, மேலும், விதிவிலக்கான சில சொற்களைத் தவிர, பெரும்பாலான வார்த்தைகளோடு 'அர்/ஆர், க்ர்/கார், டர்/டார், தர்/தார்' சேர்ந்தால் அவற்றுக்கு முன்னாலுள்ள கோடு இரட்டிப்பாக்கப்படுவது இப்பகுதியில் கூறப்படும்.

(206) வளைவு கோட்டு மெய்க்குறிகள், தனித்து அல்லது ஆரம்பச் சேர்க்கையுடன் (மெய்க்குறியோ, ஆரம்ப உயிர்க்குறியோ, சுழியோ, கொக்கியோ) வரும்போது, அவற்றை அடுத்து 'அர்/ஆர், ட்டர்/ட்டார், த்தர்/த்தார்' வந்தால் இரட்டிக்கப்படும். எ.கா.

 நாட்டார்,  மாட்டார், மீட்டார்,

 இடும்பர்,  அணைத்தார்,  தாசில்தார்.

(207) மெய்க்குறி 'ங'வை அடுத்து அர்/ஆர், கர்/கார் வந்தால், 'ங' இரட்டிக்கப்படும். எ.கா.

 சோளிங்கர், நரசிங்கர்,  அலங்காரம்.

(208) நேர்கோட்டு மெய்க்குறிகள் தனித்துவரின் இரட்டிக்கப் படுவதில்லை. என்றாலும் ஆரம்பச் சேர்க்கையுடன் வரும்போது 'அர்/ஆர்' வந்தால் இரட்டிக்கப்படும். எ.கா.

ஊழியர், தக்கார்.

(209) நேர்கோட்டு மெய்க்குறிகள் அவற்றை அடுத்து, 'த்தர்/த்தார்' வந்தால் இடது வாட்டமாகக் கடைசியில் சிறிய

கொக்கியிட்டு (விதி—165) இரட்டிக்கப்படும். எ.கா. எழுத்தர், கொடுத்தார், படைத்தார், சுற்றத்தார்.

(210) மெய்க்குறிகள் அவற்றை அடுத்து, 'ந்தர்/ந்தார், ண்டர்/ண்டார்' வந்தால் 'ன்' கொக்கியிட்டு இரட்டிக்கப்படும். எ.கா.

வேந்தர், வந்தார், அலைந்தார்,

கண்டார், கொண்டார், இருந்தார்.

(211) மெய்க்குறிகள், அவற்றை அடுத்து 'ளர்' வந்தால் 'ள்' கொக்கியிட்டு இரட்டிக்கப்படும். எ.கா.

கொடையாளர், மேலாளர், தாளாளர்,

நெசவாளர், ுறையாளர், ஆணையாளர்.

(212) இரட்டிக்கப் பெறும் குறித் தொடர் வேறொரு வார்த்தையையும் குறிக்கும் இடத்தில், சந்தர்ப்பத்தைக் கொண்டு அறியலாம் என்றாலும், இரண்டுக்கும் வேறுபாடு காண குறித் தொடரை மாற்றியோ, உயிர்க்குறி வைத்தோ எழுதவேண்டும். எ.கா.

கிழார், கிழக்கு, தக்கார், தாக்கு,

ஆக்கியோர், ஆகியோர், இமையோர்

இம்மி, கண்டார், கண்டீர், ஆரம்பித்தார்,

ஆரம்பித்தீர்.

பன்மை விகுதி 'கள்'. (213) மாட்டார், நாட்டார், போன்று கடைக் கொக்கியின்றி இரட்டிக்கப்பட்ட வார்த்தைகளுக்கு பன்மை விகுதியாகிய 'கள்' என்பதைக் குறிக்க, 'ள்/ழ்' கொக்கி எழுதப்படும். எ.கா.

மாட்டார்கள், நாட்டார்கள்.

(214) **ஆனால் ஏற்கனவே கொக்கியிட்டு இரட்டிக்கப்படுகிற வார்த்தைகளுக்குக் கடைசியில், பன்மை விகுதியாகிய 'கள்' வந்தால், கொக்கிக்கு வெளியே ஒட்டினாற்போல ஒரு சிறு கோடு *(விதி–168)* எழுதப்படும்.** எ.கா.

கண்டார்கள், சுற்றத்தார்கள், அளித்தார்கள்.

எழுதும் இடம். *(215)* இரட்டிக்கப்பட்ட கீழ்க் கோடுகள் எல்லாம் எழுதும் வரியினூடே எழுதப்படும். எ.கா.

வந்தார், வேந்தர், பூண்டார்

(216) இரட்டிக்கப்பட்ட மேற்கோடுகள் அவ்வவ் வார்த்தைகளின் முதலில் வரும் உயிரொலிக்கேற்ப எழுதும் வரிக்கு மேலோ, வரியை ஒட்டியோ, வரியினூடேயோ எழுதப்படும். எ.கா.

அலைந்தார், எரிந்தார், இருந்தார்.

(217) இரட்டிக்கப்பட்ட படுக்கைக் கோடுகள் மற்றப் படுக்கைக் கோடுகளைப் போல எழுதப்படும். *(விதி–40)* எ.கா.

மாட்டார், மோட்டார், மீட்டார்.

பயிற்சி–56

சுருக்கெழுத்தில் எழுதுக

ஜமீன்தார், நிலச்சுவாந்தார். ஆதரித்தார், இரவலர், பதிப்பாளர், பேச்சாளர், வாக்காளர், பார்வையாளர், வியந்தார், கேட்கிறார், அறங்காவலர், உடையலங்காரம், சமூகத்தார், நகர்ப்புறத்தார், ஒற்றர், பம்பரம், ஆட்சியாளர், கைத்தறியாளர்கள், தொகுப்பாளர், அழைப்பாளர், குடியிருப்பாளர், பணியாளர், மதிப்பாளர், சுந்தரம்.

தனிக்குறிச் சொற்கள்

அங்கத்தினர், நிரந்தரம், சந்தர்ப்பம், சுமார், சுகாதாரம். திருவாளர்,

பயிற்சி–57

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



பாடச் சுருக்கம்

1 தனித்தோ, சுழி. கொக்கியோடு சேர்ந்தோ வரும் வளைவுகோட்டு

இரட்டிப்பு முறை

1. மெய்க்குறிகள், அவற்றை அடுத்து, அர்/ஆர், டர்/டார், தர்/தார் வந்தால் இரட்டிக்கப்படும்.

2. 'ங்' மெய்க்குறி அதை அடுத்து, அர்/ஆர், கர்/கார் வந்தால் இரட்டிக்கப்படும்.

3. தனி நேர்கோடுகள் இரட்டிக்கப்படுவதில்லை. ஆரம்பச் சேர்க்கை யுடன் வருமபோது 'அர்/ஆர்' என்பதற்கு இரட்டிக்கப்படும்.

4. நேர்கோட்டு மெய்க்குறிகள் அவற்றை அடுத்து 'த்தர்/த்தார்' வந்தால் இடது வாட்டமாகக் கடைசியில் சிறிய கொக்கியிட்டு இரட்டிக்கப்படும்.

5. மெய்க்குறிகள், அவற்றை அடுத்து, 'ந்தர்/ந்தார்', ண்டர்/ண்டார்' வந்தால் 'ன்' கொக்கியிட்டு, இரட்டிக்கப்படும்.

6. மெய்க்குறிகள் அவற்றை அடுத்து, 'ளர்' வந்தால் 'ள்' கொக்கியிட்டு இரட்டிக்கப்படும்.

7. இரட்டிக்கப்பட்ட ஒரு குறித்தொடர் வேறொரு சொல்லையும் சுட்டும்போது, குறித் தொடரை மாற்றியோ, உயிர்க்குறி வைத்தோ வேறுபடுத்தப்படும்.

8. பன்மை விகுதியைக் குறிக்க கடைக் கொக்கியின்றி இரட்டிக்கப் பட்ட எல்லா வார்த்தைகளுக்கும் 'ள்/ழ்' கொக்கி எழுதப்படும். ஆனால் கொக்கியிட்டு இரட்டிக்கப்பட்ட வார்த்தைகளுக்கு அந்தக் கொக்கிக்கு வெளியே ஒட்டினாற்போல ஒரு சிறுகோடு போடப்படும்.

9. இரட்டிக்கப்பட்ட கீழ்க்கோடுகள் எல்லாம் வரியினூடே எழுதப்படும். இரட்டிக்கப்பட்ட மேற்கோடுகள் அவ்வவ் வார்த்தை களின் முதலில் வரும் உயிரொலிக்கேற்ப, வரிக்கு மேலோ, வரியை ஒட்டியோ, வரியுனூடேயோ எழுதப்படும். இரட்டிக்கப்பட்ட படுக்கைக் கோடுகள் மற்றப் படுக்கைக் கோடுகளைப் போல எழுதப்படும்.

(விதிகள்: 205–217)

அத்தியாயம்—20

எண்களும், பேச்சை எடுக்கும் முறையும்

எண்கள். *(218)* எண்கள் ஒன்றிலிருந்து பத்து வரை சுருக்கெழுத்திலேயே எழுதப்படும். அதற்குப் பிறகு வரும் எண்கள் எல்லாம் அப்படியே அராபிக் எழுத்திலேயே எழுதப்படும். எ.கா. இருநூற்று எழுபத்தாறு—*276*. அறுநூற்று எழுபத்தொன்று—*671*.

(219) நூறும், அதற்கு மேற்பட்ட பேரெண்களும், பின்ன எண்களும் வரும்போது, கீழ்க்கண்ட சுருக்கங்கள் உபயோகிக்கப்படும். எ.கா.

...... நூறு, 8 ...... எண்ணூறு,

...... ஆயிரம், 8 ...... எண்ணாயிரம்,

...... லட்சம், 8 ...... எட்டு லட்சம்,

...... கோடி, 8 ...... எட்டுக் கோடி,

...... நூறாயிரம், 8 ...... எண்ணூறாயிரம்,

...... நூறு கோடி, 8 ...... எண்ணூறு கோடி,

...... ஆயிரம் கோடி, 8 ...... எண்ணாயிரம் கோடி,

80 ...... எண்பதே கால், *80* ...... எண்பதரை,

80 ...... எண்பதே முக்கால்,

(220) ரூபாய் என்பது எண்களுக்குப் பின் ...... என்றும், பவுன் என்பது ...... என்றும், வராகன் என்பது ...... என்றும், மூட்டை என்பதற்கு ...... என்றும் எழுதப்படும். பர்செண்ட் என்பதற்கு ...... என்றும், சத வீதம் என்பதற்கு ...... என்றும் போடப்படும், எ.கா.

80 ___ எண்பது ரூபாய்கள், 80 ___ எண்பது பவுன்கள்,

80 ___ எண்பது மூட்டைகள் 80 ___ எண்பது பர்செண்ட்

80 ___ எண்பது சத வீதம்.

எண்களுக்குப் பின் மாதம், தேதி, நாள் வரும்போது கீழ்க்கண்டவாறு எழுதப்படும். எ.கா.

8 ___ எட்டாம் மாதம். 8 ___ எட்டாம் தேதி,

8 ___ எட்டாம் நாள், 8 ___ எட்டாம் தேதிக்குள்,

8 ___ எட்டாம் தேதியிட்ட, 8 ___ எட்டாம் தேதியிடப்பெற்ற.

(221) 'நூறு, கோடி' என்பவை ஓர் எண்ணை அடுத்து எழுதிக் காட்டுவது போல, சில சொற்களை அடுத்து வரும்போதும் வாகுள்ள இடங்களில் எழுதலாம். எ.கா.

___ அகநானூறு, ___ பக்த கோடிகள், ___ கோடானுகோடி.

(222) ஒரே வார்த்தை இரண்டு முறை அடுக்கி வந்தால் அதைக் காட்ட அவ்வார்த்தையின் குறித்தொடர் இரண்டு முறை அடுத்தடுத்து எழுதிக் காட்டப்படும். எ.கா.

___ அந்தந்த. ___ அப்போதைக்கப்போது.

(223) ஆனால் இம்மாதிரி அடுத்தடுத்து எழுதிக் காட்ட முடியாத இடங்களில், முதல் வார்த்தையை முழுவதும் எழுதிக்கொண்டு, முதல் வார்த்தையின் கடைசிக் கோட்டினூடே இரு சிறு கோடுகள் போட்டுக் காட்டலாம். எ.கா.

___ பெருகப் பெருக, ___ மேலும் மேலும், ___ போகப் போக.

''ஆக, ஆன, என்று'' என்பவை தொடர்ந்து வந்தால், கீழ்க்கண்டவாறு எழுதப்படும். எ.கா.

அடியடியாக, அடியடியான,  நேர் நேர் என்று

இணைச் சொற்கள். *(224)* 'லாப நஷ்டம்,' 'நல்லது கெட்டது' என்பது போல ஒரு சொல்லும், அதன் எதிர்ச் சொல்லும் இணைந்து வரும் இடங்களில் முதற் சொல்லின் கடைசிக் கோட்டினூடே பின்னே வரும் சொல்லின் முதல் கோடு மட்டும் வெட்டி எழுதப்படும். எ.கா.

லாப நஷ்டம்,  நல்லது கெட்டது. ஏழை பணக்காரன்.

முன்னதோடு இணைந்து பின்னால் வரும் சொல் முன்னதன் எதிர்ச் சொல்லாக இல்லாமலும் இருக்கலாம். எ.கா. பூவும் மணமும்; சொல்லும் பொருளும்; வாயும் வயிறும்; நகமும் சதையும்; இவற்றை சாதாரண முறைப்படி எழுதலாம் என்றாலும், வேகமாக எழுதுவது கருதி, முன் சொல்லின் கடைசிக் கோட்டினோடு, பின் சொல்லின் முதல் கோடு 'ம்' சுழியோடு வெட்டியும் எழுதப்படும். எ.கா.

பூவும் மணமும், சொல்லும் பொருளும்.

(225) ஒரு சொற்பொழிவின் முக்கியமான பகுதிகளை மாத்திரம் குறிப்பு எடுக்க வேண்டுமென்றால் அதைச் சுருக்கெழுத்தில் எழுதிக் கொண்டு போகும்போதே, முக்கியமான பகுதிகள் வருகையில் எழுதும் நோட்டின் இடது கைப்புற விளிம்பில் அந்தப் பகுதி முக்கியமானது என்பதைக் காட்டுவதற்காக, // என்று போட்டுக் கொள்க.

(226) நகைச்சுவை அளிக்கும் இடங்களை அப்படியே எழுத வேண்டுமென்பதற்காக  என்று போட்டுக் கொள்க.

(227) பழக்கம் இல்லாத சொற்களோ வேற்றுமொழிச் சொற்களோ வந்தால், அவற்றின் அடியில் இரு சிறு கோடுகள் போட்டுக் கொள்வதுடன் (விதி-43) எல்லா உயிர்க் குறிகளையும் விடாமல் குறித்துக் கொள்க. ஒரு வார்த்தைக்கு ஒன்றுக்கு மேல் வேற்றுமை உருபுகள் சேர்ந்து வரும்போது, வாகுள்ள இடங்களில் இறுதியில் வருவதை மட்டும் எழுதிக் கொள்ளலாம்.

(228) பேசுவோர் தமிழில் கவிதைகளை மேற்கோள்களாக எடுத்து ஆளும்போது, முழுமையாக அப்படியே எழுதிக் கொள்ள இயலா விட்டால், அவற்றின் ஆரம்பத்தையும் முடிவையும் சரியாக எழுதிக் கொண்டு விட்டால், பின்னர் அவற்றிற்குரிய மூல நூலிலிருந்து முழுவதையும் பார்த்து எழுதிக் கொள்ளலாம்.

(229) தொடர் வார்த்தைகள் பல முறை திரும்பத் திரும்ப வந்தால், முதல் முறை அவற்றை எழுதிவிட்டுப் பின்னரெல்லாம் அவை திரும்பத் திரும்ப வருகின்றன என்பதைக் காட்ட —— என்று நீளக் கோடு போட்டுக் கொள்க. அல்லது இடம் விட்டு விட்டு எழுதிக் கொள்க.

(230) மக்கள் கை தட்டும் இடங்களைக் காட்ட  என்றும், காதில் சரியாக விழாத இடங்களைக் காட்ட என்றும் எழுதிக் கொள்க.

எழுதிப் பழகும் முறை. ***(231)*** தமிழ்ச் சொற்பொழிவுகளைச் சுருக்கெழுத்தில் எடுத்து மறுபடியும் அவற்றை அப்படியே வார்த்தைகள் பிறழாது விரிவெழுத்தில் எழுத விரும்புவோர் இந்த நூலில் கொடுத்திருக்கும் விதி ஒவ்வொன்றையும் படித்துப் புரிந்துகொண்டு, மாதிரிப் பயிற்சிகளையும் அடிக்கடி தினமும் குறிப்பிட்ட நேரத்தில் எழுதிப் பழக்கம் செய்து வரவேண்டும். தனிக்குறிச் சொற்கள், சுருக்கம் போன்றவைகளை நன்றாகப் பலமுறை எழுதி நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். நல்ல வழுவழுப்பான கோடிட்ட வெள்ளைத் தாளில் ஆரம்பக் காலத்தில் கூர்மையான பென்சிலைக் கொண்டு எழுதிப் பழக வேண்டும். பின்னர் நல்ல பேனாவினால் எழுதிப் பழகலாம். காலையில் ஒரு மணி நேரம் சுருக்கெழுத்துக் கலையில் பயிற்சி பெறுவது மாலையில் இரண்டு மணி நேரம் பழக்கம் செய்வதைவிட உயர்ந்தது. ஆரம்பக் காலங்களில் நிதானமாக எழுதிப் பழக வேண்டும். நேர்கோடுகள், வளைவுகோடுகள் ஆகியவற்றைத் தனித்தனியாக ஒரே அளவோடு நிறுத்தி சரியாக எழுதிப் பழக வேண்டும்.

வார்த்தைகளை எண்ணிக் கோடிட்டுக் குறித்துக் கொள்வதற்கும், குறிப்பிட்ட வேகத்தில் வாசிப்பதற்கும் கூடத் தெரிந்து கொள்ளவேண்டும். நிமிடத்துக்கு 20 வார்த்தைகள் என்றால் அதை ஒவ்வொரு கால் நிமிடத்திற்கும் அதாவது 15 வினாடிகளுக்கு 5

வார்த்தைகள் வீதம் 'மார்க்' செய்து ஒவ்வொரு கால் நிமிடத்திலும் இந்த ஐந்து வார்த்தைகளைப் படிக்கச் சொல்லி எழுத வேண்டும். பிறகு அதைப் படித்தும் காட்ட வேண்டும். அப்படியே நிமிடத்திற்கு 24 வார்த்தைகள் என்றால் ஒவ்வொரு கால் நிமிடத்திற்கும் 6 வார்த்தைகள் வீதம் மார்க் செய்து படிக்கச் சொல்ல வேண்டும். இப்படியே கொஞ்சம் கொஞ்சமாக வார்த்தைகளைக் கூட்டி வேகத்தை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆரம்பக் காலங்களில் 'ஸ்பீட்' எழுதுவதற்காக மார்க் செய்த பத்திகளைப் பார்த்தே முதலில் இரண்டொரு முறை சுருக்கெழுத்தில் எழுதிப் பழகிவிட்டு, அதையே 'ஸ்பீட்' எழுதினால் வேகத்தை அதிகப்படுத்திக் கொள்ள மிகவும் உதவியாக இருக்கும். போகப் போக பழக்கமில்லாத பத்திகளையும் எழுதக்கூடிய ஆற்றல் வரும்.

ஆரம்பக் காலத்தில் சுருக்கெழுத்தில் எழுதிக்கொள்ளும்போது எழுதும் நோட்டுப் புத்தகத்தின் தாளைப் புரட்ட சில சமயங்களில் சங்கடம் ஏற்படும். இதைத் தவிர்ப்பதற்கு அந்தத் தாளின் மேல் பகுதியில் எழுதிக் கொண்டிருக்கும் போதே, இடது கை அந்தத் தாளின் இடது கோடிக்குப் போய்விடப் பழகவேண்டும். நடுப் பகுதியில் எழுத வரும்போது இடது கைப் பெருவிரலினால் அந்தத் தாளின் இடது கோடி நுனியைக் கொஞ்சம் புரட்டி. அதை இடது கை ஆள் காட்டி விரலினாலும், பெரு விரலினாலும் சேர்த்துப்பிடித்துக் கொண்டு விடவேண்டும். கீழ்ப்பகுதியில் எழுத வரும்போது கொஞ்சம் கொஞ்சமாக இடது கையினால் பிடித்திருக்கும் அந்தத் தாளின் நுனியை மேலே உயர்த்தி, சரியான சமயம் வரும்போது, அந்தத் தாளைப் புரட்டினால் போதும். தாள் தானாகவே புரண்டு விடும். எவ்விதத் தடங்கலுமின்றி அடுத்த பக்கத்தில் எழுத ஆரம்பிக்கலாம்.

இது காரணமாகத்தான் எவ்வித உருவத்தில் அமைந்த நோட்டுப் புத்தகமாக இருந்தாலும் சரி, முதலில் ஒரு பக்கமாகவே கடைசி வரையில் எழுதிக் கொண்டு போகவேண்டும். பின்னர் நோட்டுப் புத்தகத்தைத் தலை கீழாகத் திருப்பிக் கொண்டு, எழுதாத பக்கத்தில் முன்போலவே தொடர்ந்து எழுதி வரவேண்டும்.

எழுதும்போது குறித்தொடர்களின் நிலை தப்பிப் போகாமல் எழுதிப் பழக்கம் செய்து கொள்ள வேண்டும். வாக்கியத்தினுடைய முடிவை எப்பொழுதும் காட்ட வேண்டும்.

ஒரு கூட்டத்திற்குப் போவதற்கு முன் அது பற்றிய முழு விவரங்களையும் நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். எழுதும்போதே பேசுவோரின் கருத்தை நன்கு புரிந்து கொள்ளவேண்டும். சொற்பொழிவாளர்களில் சிலர் வடமொழியை அதிகமாகக் கலந்து பேசுவார்கள். சிலர் அளவாகப் பேசுவார்கள். சிலர் வடமொழியே கலக்காமல் பேசுவார்கள். அந்த மூவகையினருடைய பேச்சை அப்படியே சுருக்கெழுத்தில் எடுத்து விரிவெழுத்தில் கொடுப்பதுதான் சுருக்கெழுத்தாளர்களுடைய கடமை. 'வணக்கம், முகவரி, ஆண்டு' என்றே சிலர் பேசுவர். 'நமஸ்காரம், விலாசம், வருஷம்' என்று சிலர் பேசுவர். சுருக்கெழுத்தாளர்களுக்கு இந்த இரண்டிலும் ஏதேனும் ஒரு கொள்கையில் விருப்பம் இருக்கலாம். ஆனால் அந்தக் கொள்கைகளைப் பிறருடைய பேச்சைச் சுருக்கெழுத்தில் எடுக்கும்போது மேற்கொள்ளக் கூடாது. சொல்லுகிறவர் 'ஜனவரி' என்றால் அப்படியே எழுதவேண்டும். 'சனவரி' என்றாலும் அப்படியேதான் விரிவெழுத்தில் எழுதித் தரவேண்டும்.

தினமும் எழுதி எழுதி, எழுதியவற்றைத் திருப்பிப் படித்துக் கொண்டும், சுருக்கெழுத்தில் எழுதியவற்றை விரிவெழுத்தில் எழுதிக் கொண்டும் போனால், நாளடைவில் வேகம் தானே அதிகரிக்கும். எந்த வேகத்தில் எழுதினாலும் எழுதியவற்றை எழுத்துப் பிழை, சந்திப் பிழையின்றி (விதி–86) விரிவெழுத்தில் எழுதக் கற்றுக் கொள்வதுதான் முக்கியம்.

பயிற்சி–58

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



பயிற்சி–59
சுருக்கெழுத்தில் எழுதுக

செஞ்சி,
6.1.81.

மேலாளர்,
பாண்டி சகோதரர்கள் அரிசி மண்டி,
தஞ்சாவூர்.

அன்புடையீர்,

3.1.81 ஆம் தேதியிடப்பெற்ற தங்கள் கடிதம் கிடைத்தது. அத்துடன் விலைப் பட்டியலையும் அனுப்பி வைத்தமைக்கு நன்றி. பொன்னி உயர்ந்த ரக புழுங்கல் அரிசி இருநூறு மூட்டைகள் தற்சமயம் தேவைப்படுகிறது. அவற்றை உடனே லாரி மூலம் 12 ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கக் கோருகிறேன். இத்துடன் இருபதாயிரம் ரூபாய்க்கு காசோலை அனுப்பி இருக்கிறேன். தங்களிடமிருந்து சரக்கு வந்தவுடன் பாக்கித் தொகையை பில்படி காசோலை மூலம் அனுப்புகிறேன். இருநூறு மூட்டைகளை உடனேயே அனுப்ப இயலாவிடில் கையிலுள்ள சரக்கில் 50 மூட்டைகளாவது இந்த வாரத்திற்குள் அனுப்பக் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,
சுந்தரமூர்த்தி.

பயிற்சி–60
படித்து, எழுதி வரிவெழுத்தில் எழுதுக





பயிற்சி—61

சுருக்கெழுத்தில் எழுதுக

மேலும் அவர் பேசுகையில், ''உயர்வு தாழ்வின்றி நான் மாணவனாக இருந்த காலம் ஒன்று. இரண்டாவதாக நான் வேலூர் சிறையில் ஐந்து வருஷங்கள் இருந்த காலம். மூன்றாவதாக நான் தமிழகச் சட்டமன்றப் பேரவை அங்கத்தினராக சுமார் பத்து ஆண்டுகளாகப் பணியாற்றி வந்திருக்கும் காலம் என் நினைவில் என்றென்றும் இருக்கும் என்பதை இங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் சொல்லிக் கொள்வேன்.''

''எனக்குக் கிடைத்ததைப் போன்ற சந்தர்ப்பம் மற்றவர்களுக்கும் கிடைத்தால் அதைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள தகுதி உடையவர்கள் இந்த மன்றத்தில் உள்ளார்கள். அதை முழுக்க முழுக்க ஒப்புக்கொள்ள நான் தயங்கவில்லை. என்னால் இந்த மூன்று ஆண்டுகளாக உற்சாகத்தோடு பணி செய்ய முடிந்தது என்றால் அதற்குக் காரணம் நீங்கள் அனைவரும் என்மேல் வைத்திருந்த நம்பிக்கைதான். இச்சமயத்தில் உங்கள் யாவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களோடு பழகிய காலத்தில் ஒன்றிரண்டு முறைகள் உங்களுக்குக் கோபம் ஏற்படும் வகையில் ஏதாவது பேசி இருக்கலாம். இன்றைக்கு நான் உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்ளும் போது அவற்றை எல்லாம் மறந்து எனக்கு நீங்கள் உங்களுடைய நல்லாசியை அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்,'' என வேண்டிக் கொண்டார்.

பாடச் சுருக்கம்

1. எண்கள் ஒன்றிலிருந்து பத்து வரை சுருக்கெழுத்தில் எழுதப்படும். பிறகு அராபிக் எழுத்திலேயே எழுதப்படும்.

2. நூறும் அதற்கு மேற்பட்ட பேரெண்களும் பலவாக வரும்போது அவற்றைக் குறிக்கத் தனிச் சுருக்கங்கள் உள்ளன.

3. அடுத்தடுத்து வரக்கூடிய வார்த்தைகள் இரண்டு முறை எழுதப்படும். அல்லது ஒரு முறை முழுவதும் எழுதிக் கொண்டு அதன் கடைசிக் கோட்டின் குறுக்கே இரு சிறு கோடுகள் போடப்படும்.

4. இணைச் சொற்களெனில், முன் சொல்லின் கடைசிக் கோட்டினூடே பின்னே வரும் வார்த்தையின் முதல் கோடு வெட்டி எழுதப்படும்.

5. திரும்பத் திரும்பவரும் தொடர் வார்த்தைகள் இடம் விட்டோ, நீளக் கோட்டைப் போட்டோ காட்டப்படும்.

6. தினமும் விடாமல் குறிப்பிட்ட நேரத்தில் சுருக்கெழுத்தில் எழுதி, எழுதியதைப் படிக்க வேண்டும்.

7. சொற்பொழிவுகளை எழுதப் போகும் முன்பே அது பற்றிய முழு விவரங்களையும் தெரிந்து கொள்வது நல்லது. எழுதும் போது பேசுவோரின் கருத்தைப் புரிந்து கொண்டு எழுதுவது முக்கியம்.

8. வாக்கியத்தினுடைய முடிவை எப்போதும் காட்ட வேண்டும். எழுதும்போதே குறித்தொடரைச் சரியான நிலையில் எழுதிப் பழக வேண்டும்.

(விதிகள் 218–231)

அத்தியாயம்–21

கூட்டு மெய்கள்

பொது. (232) ஆரம்பக் காலத்தில் ஒவ்வொரு வார்த்தைக்குப் குறித்தொடரை முழுமையாக எழுதி, படித்து, பிழையின்றி விரிவெழுத்தில் எழுதிப் பழகுவது அவசியம். ஓரளவு நல்ல தேர்ச்சி பெற்ற பின்னர், வேகமாக எழுதுவதற்கு குறித்தொடர்களைச் சுருக்கி எழுத முற்படலாம். அவ்வாறு சுருக்கி எழுதும் குறித்தொடர், அவ்வவ் வார்த்தைகளை எளிதில் திரும்பவும் படித்துப் பிழையின்றி விரிவெழுத்தில் எழுதுவதற்கு நம் நினைவைத் தூண்டத் தக்கதாக அமைதல் வேண்டும். எனவே, நீளமாக அமையும் குறித்தொடர்களைச் சுருக்கி எழுத சில பல விதிமுறைகள் கையாளப்படும்.

மெய்யெழுத்து 'வ, ய'. *(233)* 'வ, ய' ஆகிய இரண்டெழுத்துக்களும் சொல்லின் ஆரம்பத்திலும், நடுவிலும், முடிவிலும் வரும். மேலும், இரண்டு சொற்கள் சேரும்போதும் இடையில் 'வ, ய' உடம்படு மெய்யாக வருவதும் உண்டு. எ.கா.

பல + அணி — பலவணி: பனை + ஓலை — பனையோலை. 'வ, ய'வுக்குத் தனியாக மெய்க்குறி இருந்தாலும் வேகமாகச் சுருக்கி எழுத வாகுள்ள இடங்களில் அவை சிறிய அரைவட்டத்தினாலும் எழுதப் படும்.

'வ' சிறிய அரை வட்டம். (234) நடுவில் 'வ' வரும்போது, 'வ' வுடன் சேரும் உயிருக்கேற்ப 'வ'வுக்குப்பின் வரும் கோட்டின் முன்னால் முதல், இரண்டாம், மூன்றாம் இடங்களில் ...ᑕ... என்ற சிறிய அரை வட்டத்தினால் 'வ' குறிக்கப்படும். எ.கா.

 உயிர்வாழ,  புல்வ்வெளி, அறிவிழந்து

அட்டவணை,  கட்டுவேலை,  பூவிதழ்.

(235) சிறிய அரை வட்டம் 'வ' எழுதப்படும்போது, 'வ'வுக்கு முன்னோ, பின்னோ உயிரொலி சேர்ந்து வந்தால், சிறிய அரை

வட்டத்துடன், முறையே முன்னோ, பின்னோ ஒரு சிறு கோடு சேர்க்கப்படும். எ.கா.

நிந்தாவுவமை,  மேகவியாதி,  கூட்டுவியாபாரம்.

(236) ஆரம்பத்தில் 'வ'வரும்போது, 'வ'வுக்கு சிறிய அரைவட்டம் எழுதப்படுவதில்லை. ஆரம்ப உயிர்க்குறி 'அ/ஆ'வுக்கு இது போன்ற சிறிய வட்டம் கொடுக்கப்பட்டிருப்பதால், (விதி-28) ஆரம்பத்தில் 'வ'வுக்குரிய மெய்க்குறியே எழுதப்படும். எ.கா.

வாழ, வெளி, வேலை, வேகம்.

(237) முடிவில் 'வ' வரும்போதும், 'வ'வுக்கு சிறிய அரைவட்டம் எழுதப்படுவதில்லை. மெய்க்குறி 'வ'வோ, 'வ்' கொக்கியோதான் (விதிகள் 155 – 157) எழுதப்படும். எ.கா.

ரவி, ராவ்.

பயிற்சி—62

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



பயிற்சி–63
சுருக்கெழுத்தில் எழுதுக

நிறுவனம், தாழ்வான, தாழ்வாக, உறைவிடம், முகவரி, கைவிடுதல், தீவனம், கடல்வழி, மறைவிடம், சூறாவளி, துணைவிதிகள் பதிவேடு, ஆண்டுவிழா, வைரவிழா, மணிவிழா,
திருவிழா, தளவாடம், துண்டுவிழ, கிளைவழி, சுற்றுவழி, வடிவியல், பிருந்தாவனம், ஒட்டவில்லை, சேர்ந்துவாழ, கட்டுவிரியன்.

'ய' சிறிய அரைவட்டம். (238) நடுவில் 'ய' என்பதற்கு ட என்று சேர்த்து எழுதப்படும் சிறிய அரைவட்டம் (விதி–68) 'ய'வுடன் சேரும் உயிருக்கேற்ப 'ய'வுக்குப்பின் வரும் கோட்டின் முன்னால் முதல், இரண்டாம், மூன்றாம் இடங்களில் தனித்தும் எழுதப்படும். எ.கா.

 பிரயாணம்.  மற்றொருயோசனை,  உலகயுத்தம்.

(239) முடிவில் 'யம்' என்று வரும்போது சுருக்கியெழுதும் வாகு கருதி 'ம்' சுழியையொட்டி மூன்றாமிடத்தில் 'ய' அரைவட்டம் எழுதப்படும். எ.கா.  நிச்சயம்.

சுருக்கத்தில் இந்த 'ய' சிறிய அரைவட்டம் வாகுள்ள இடங்களில் 'உடைய/உடையது' என்பதற்கு அதற்கு முன்னால் வரும் மெய்க்குறியோடு சேர்த்து எழுதப்படும். எ.கா.

ஒருவருடைய, பலருடைய.

(240) நடுவில் கூட்டு உயிர் 'வை' என்பதற்கு உரிய குறி (விதி–66) சொற்களைச் சேர்த்து எழுதும்போது, சில இடங்களில் தனித்தும் எழுதப்படும். எ.கா.

அடிவைக்க,  ஈடுவைத்து.

(241) கையை எடுக்காமல் எழுதும் வாகு கருதி, ஒரு சில இடங்களில் மட்டும் கூட்டுயிர் 'ஐ' என்பதற்குப் பதிலாக, வேற்றுமை உருபு 'ஐ' எழுதப்படும். எ.கா.

 ஆண்பிள்ளை, விடுமுறை, வாய்வார்த்தை

பயிற்சி—64

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



(242) ஈருயிர் ஒலியைத் (விதி—62) தொடர்ந்து எந்த உயிரொலி வந்தாலும், அதனைக் குறிக்க ஈருயிர்க்குறியோடு ஒரு சிறுகோடு சேர்க்கப்படும். (விதி—65) இதன்படி எழுதப்படும் பல குறித்தொடர்களைக் காண்க.

பயிற்சி—65

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக





(243) உயிரெழுத்து 'இ'யோடு சேர்ந்து வரும் உயிரொலியைக் காட்ட ...... என்ற இக்குறி 'இ' புள்ளி போடும் இடத்தில் எழுதப்படும். *(விதி—63)*. இதன்படி எழுதப்படும் பல குறித்தொடர்களைக் காண்க.

பயிற்சி—66

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



தனிக்குறிச் சொற்கள்

...... விவசாயம், ... பொருளாதாரம், ... கற்பனை.

...... விற்பனை, ... ஞானம், ... விஞ்ஞானம்.

...... உற்பத்தி, ... ஓயாமல், ... கட்டுப்பாடு.

...... கோட்பாடு, ... பற்றாக்குறை, ... ஏறக்குறைய.

...... சற்றேறக்குறைய, ... ஐயப்பாடும். ...... என்றாலும்.

பயிற்சி—67
சுருக்கெழுத்தில் எழுதுக

நாடகாசிரியர் சங்கரதாஸ் சுவாமிகளின் வைர விழாக் கொண்டாட்டத்தில் தலைவர் ஆற்றிய உரையாவது:

"நாடகக் கலை வளரவளர ஏறக்குறைய நாட்டிலுள்ள மற்ற எல்லாக் கலைகளும் வளரும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. சற்றேறக்குறைய நாடகக் கலையோடு தொடர்பு கொண்டது ஓவியக் கலை. நாடகக் கலையோடு தொடர்பு கொண்டது ஒப்புவமை இல்லா ஒப்பனைக் கலை. நமது மக்களில் பெரும்பாலோர் விவசாயிகள், அவர்கள் விவசாய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து ஜீவனம் செய்கிறார்கள். பற்றாக்குறை இல்லாமல் அவர்களது பொருளாதாரம் வளம்பெற குடிசைத் தொழில்கள் ஆங்காங்கே பெருகுவது அவசியமாகும். நமது நாட்டு மக்களுடைய மனப்பான்மையில் ஒரு மாறுதல் ஏற்பட்டாக வேண்டும். நமது சமுதாயம் ஒரு முழு உருவத்தைப் பெற்றாகவேண்டும். நாடகக் கலையின் மூலம் நமது நாட்டுக்கு இன்னமும் மிகுதியாக நன்மை ஏற்படுமென்று நான் எதிர்பார்க்கிறேன். இதற்கு நல்ல நாடகங்கள் பலவற்றை எழுதி வெளியிடலாம். நாடக மன்றங்கள் இயங்காவிட்டால் நாடக நூல் எழுதி எந்தப் பலனையும் காண இயலாது. ஓயாமல் 'நமது தமிழ்மொழி நாடகத்திற்கு ஏற்ற மொழி. அது நாடக மொழி' என்று பேசுவதாலே எந்தவிதமான பயனும் கிடையாது. இந்த நாடகக் கலை நசித்துப் போகாமல் இருக்க அரசாங்கம் எல்லாவிதமான பாதுகாப்பையும் அதற்கு அளிப்பது அதன் கடமையாகும்."

பாடச் சுருக்கம்

1. *நடுவில் 'வ' வரும்போது ⌣ என்ற சிறிய அரை வட்டம் தனித்து, அந்தந்த உயிருக்கேற்ப முறையே மூன்று இடத்திலும் எழுதப்படும்.*
2. *நடுவில் வரும் 'வ' வுடன் 'உயிர்' சேரும்போது அரைவட்டத்துடன் ஒரு சிறு கோடு சேர்க்கப்படும்.*
3. *ஆரம்பத்திலும் முடிவிலும் 'வ'வந்தால் சிறிய அரைவட்டம் எழுதாது முழுவதுமே எழுதப்படும்.*

4. நடுவில் 'ய' சிறிய அரைவட்டம் தனித்து, அந்தந்த உயிருக்கேற்ப முறையே மூன்று இடத்திலும் எழுதப்படும்.
5. முடிவில் 'யம்' என வரும்போது 'ம்' சுழியை ஒட்டி 'ய' சிறிய அரைவட்டம் எழுதப்படும்.
6. கூட்டு உயிர்க்குறி 'லை' நடுவில் தனித்தும் எழுதப்படும்.

(விதிகள்: 232–243)

அத்தியாயம்—22

முன் ஒட்டுகளும் பின் ஒட்டுகளும்

(244) ஒரு வார்த்தைக்கு முன்னோ, பின்னோ சில வார்த்தைகள் சேர்ந்து அவ்வார்த்தையின் பொருளைச் சிறப்புறச் செய்யும். அத்தகைய இடங்களில் மூல வார்த்தைகளின் குறித்தொடர் மாறாமல், அவற்றுக்கு முன்னோ, பின்னோ வருகின்ற ஒட்டுகளை மாத்திரம் வாகாகச் சுருக்கி எழுதினால் வேகம் அதிகமாகும். எழுதியவற்றை எளிதில் படிக்க முடியும். அவை எப்படி எழுதப்படுகின்றன என்பதைக் கீழே பார்க்க.

ஆரம்பத்தில் ஒரு வார்த்தைக்கு முன் வருபவை

(245) 'தன்' என்பதற்கு ஒரு புள்ளி தனியாக அதன் பின்னே வரும் கோட்டின் தலைக்கு மேல் வைக்கப்படும் எ.கா.

தன்மதிப்பு, தன்னடக்கம், தன்மானம்.

(246) 'சுய/ஸ்வய' என்பதற்கு 'ச/ஸ' சுழி தனியாக அதன் பின்னே வரும் கோட்டின் முன் இரண்டாம் இடத்தில் எழுதப்படும். எ.கா.

 சுயலாபம், சுயகௌரவம். சுயபுராணம்.

(247) 'தன் சுய/ஸ்வய' என்பதற்கு 'ச/ஸ' சுழி தனித்து அதன் பின்னே வரும் கோட்டின் தலைக்குமேல் 'தன்' புள்ளி வைக்கப்படும் இடத்தில் எழுதப்படும். எ.கா.

தன் சுயமதிப்பு,  தன் சுயஅந்தஸ்து,

தன் சுயகௌரவம், தன் சுயமுயற்சி.

(248) 'விச்வ/விசுவா/விசுவே' என்பதற்கு 'ஸ்வ/சுவ' சுழி தனித்து அதன் பின்னே வரும் கோட்டின் தலைக்கு மேல் 'தன்' புள்ளி

வைக்கப்படும் இடத்தில் எழுதப்படும். எ.கா.

விசுவநாதன், விசுவாமித்திரன், விசுவேசன்.

(249) புள்ளி, சுழியைக் கொண்டு குறிக்கப் பெறுகின்ற ஒட்டுகளுடன் வரும் வார்த்தையின் குறித்தொடர் நிலை, ஒட்டுகளுக்குப் பிறகு வரும் உயிரொலியைக் கொண்டே நிர்ணயிக்கப் பெறுகிறது.

(250) 'உத்/உத்த/உத்தி' என்பதற்கு ஒரு சிறு கோடு, தனியாக அதன் பின்னே வரும் கோட்டின் தலைக்குமேல் எழுதப்படும். எ.கா.

உத்தியோகம், உத்திரவு, உத்திராடம்.

ஆனால் நடுவில் வந்தால் அதைக் காட்ட அதற்குப் பின்னே வரும் கோடு முன்னதை ஒட்டினாற்போலப் பிரித்து எழுதப்படும். எ.கா.

சர்க்கார் உத்திரவு, அரசாங்க உதவி.

(251) 'புண்ணிய' என்பதற்கு 'ண' அதன் பின்னே வரும் கோட்டோடு சேர்த்தே எழுதப்படும். எ.கா.

புண்ணிய ஸ்தலம், புண்ணியவான், புண்ணிய மூர்த்தி.

(252) 'புஷ்ப/புஷ்பக' என்பதற்கு 'ப' தனியாக அதன் பின்னே வரும் கோட்டுக்கு முன்னால் எழுதப்படும். எ.கா.

புஷ்ப மாலை,, புஷ்பக விமானம்.

(253) 'சந்திர' என்பதற்கு 'ச்ச' தனியாக அதன் பின்னே

வரும் கோட்டுக்கு முன்னால் எழுதப்படும். எ.கா.

சந்திரமதி.  சந்திரமௌலி.

(254) 'மகா/மஹா' என்பதற்கு 'ம' தனியாக அதன் பின்னே வரும் கோட்டுக்கு முன்னால் எழுதப்படும். எ.கா

மகாராணி, மகாவீரன்,  மகாவித்துவான்.

பயிற்சி—68

சுருக்கெழுத்தில் எழுதுக

தன்னாட்சி, தன்னறிவு, தன் காரியம், தன்குலம்,
சுயமரியாதை, சுய புத்தி, சுயசரிதை, சுயநலம்,
தன்சுயபுத்தி, தன்சுய நம்பிக்கை, தடை உத்தரவு,
பரஸ்பர உதவி,
மகாஜனங்கள், புஷ்பவாசனை, சந்திர பிம்பம், மகாபாரதம்,
புண்ணியசாலி, சுயநிறம், தன்னுரிமை, தன்னிறைவு.

முடிவில் ஒரு வார்த்தைக்குப் பின் வருபவை

(255) 'பதி' என்பதற்கு 'ப' அதன் முன் வரும் கோட்டோடு வெட்டி எழுதப்படும். எ.கா.

 கணபதி,  சேனாபதி,  தளபதி,  நீதிபதி.

(256) 'போது/பொழுது' என்பதற்கு 'பு' அதன் முன் வரும் கோட்டோடு சேர்த்தோ அல்லது வெட்டியோ எழுதப்படும். எ.கா.

 கேட்கும்போது,  சொல்லும்பொழுது,

 கேட்டபோது,  இருக்கும்பொழுது.

ஒரு சில இடங்களில் வேகமாக எழுதுவது கருதி ஆரம்பத்திலும் எழுதப்படும். எ.கா.

பொழுது போக, பொழுது அறிந்து.

(257) 'பற்றி' என்பதற்கு 'பர்' அதன் முன் வரும் கோட்டோடு வாகாகச் சேர்க்க வசதியுள்ள இடங்களில் சேர்த்து எழுதப்படும். எ.கா.

அதுபற்றி, அதைப்பற்றி.

(258) 'ன்/ம்' பொருட்டு' என்பதற்குப் பாதியாக்கப்பட்ட 'பர்' அதன் முன் வரும் கோட்டோடு வாகாகச் சேர்க்க வசதியுள்ள இடங்களில் எழுதப்படும். எ.கா.

அதன் பொருட்டு கேட்கும்பொருட்டு.

(259) 'ன்/ம் பரியந்தம்' என்பதற்கு 'ன்' கொக்கி பக்கம் 'ம்' சுழி சேர்க்கப்பெற்ற, பாதியாக்கப்பட்ட பர், அதன் முன் வரும் கோட்டோடு வாகாகச் சேர்க்க வரும் இடங்களில் சேர்த்து எழுதப்படும். எ.கா.

கேட்கும் பரியந்தம், சொல்லும் பரியந்தம்.

(260) 'முடியும்' என்பதற்கு 'ம்' சேர்க்கப்பட்ட 'ய'வும், 'முடியாது' என்பதற்குப் பாதியாக்கப்பட்ட 'ய'வும் அவற்றின் முன் வரும் கோட்டோடு வாகாகச் சேர்க்க வரும் இடங்களில் சேர்த்து எழுதப்படும். எ.கா.

சொல்ல முடியும், கேட்க முடியும்,

சொல்ல முடியாது, கேட்க முடியாது.

(261) 'விரும்புகிறேன், விரும்புகிறார்கள்' என்பதற்கு

'வர்'க்கு 'ன்,ள்' கொக்கி சேர்க்கப்பெற்று முன் வரும் கோட்டோடு சேர்த்தோ, வெட்டியோ எழுதப்படும். எ.கா.

சொல்ல விரும்புகிறேன், சொல்ல விரும்புகிறார்கள்,

பேச விரும்புகிறேன்.

பயிற்சி—69

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக



சுருக்கங்கள்

தன்னந்தனியாய் தெள்ளத்தெளிவாய்,

 நூற்றுக்கு நூறு, வருஷ(ட)ந்தோறும்,

வருஷா(டா)ந்திரம்.

பயிற்சி—70

சுருக்கெழுத்தில் எழுதுக

நமது இந்தியா ஒரு புண்ணிய பூமி. இமயம் முதல் குமரி வரை இந்த தேசத்தில் பல மகாநதிகள் இருக்கின்றன. புஷ்பச் சோலைகள் நிறைந்த புண்ய க்ஷேத்திரம் அநேகம் இருக்கின்றன. பனி மூடிக் கிடக்கும் மகாமேரு சிகரம் நூற்றுக்கு நூறு மேல்நாட்டார் அனைவரது

கவனத்தையும் பெரிதும் ஈர்க்கிறது. அங்குதான் மகாதேவன் மகாசக்தியோடு வாசம் செய்கிறதாக மகாபுராணங்கள் வருணிக்கின்றன. வருடந்தோறும் மலையேறும் கோஷ்டிகள் பல இங்கு வந்து கொண்டிருக்கின்றன. தன்னந்தனியாய் யாரும் அங்கே போக முடியாது. நமது அரசாங்கம் அவர்களுக்குப் பல உதவிகளை அவ்வப்போது செய்து வந்து கொண்டிருக்கிறது.

தென்னிந்தியாவிலிருந்து பலர் புண்ணிய கங்கையில் ஸ்நானம் செய்ய காசிக்குப் போகிறார்கள் என்றால் வட இந்தியாவில் இருந்து பலர் புண்ணியத்தலம் இராமேசுவரம் நாடி தென்னகம் வருகிறார்கள். வெளிநாட்டார் இன்று சந்திரமண்டலத்திற்கே போய் வந்திருக்கிறார்கள்.

எந்த ஒன்றையும் தெள்ளத்தெளிவாய் நன்கு அறிந்து கொள்ள வேண்டுமென்ற மனித உள்ளத்தின் பகுத்தறிவுத் துடிப்பே இதற்கெல்லாம் காரணம். இதைப் பிறர் சொல்லும்போது வேடிக்கையாக இருக்கலாம். நம் உள்ளமே சொல்லும்போது நாம் அலட்சியமாக இருக்க முடியாது. நம் அறிவு நல்லதையும் காட்டும். தீயதையும் காட்டும். களையை நீக்கி, பயிரை வளர்த்தால் வாழ்வில் சிறப்பு அடையலாம்.

பாடச் சுருக்கம்

1. ஒரு வார்த்தைக்கு முன்னோ, பின்னோ சில வார்த்தைகள் சேரும்போது, மூலவார்த்தைகளின் குறித்தொடர் மாறாமல், அவற்றுக்கு முன்னோ, பின்னோ வருகின்ற ஒட்டுகள் மாத்திரம் வாகாகச் சுருக்கி எழுதப்படும்.
2. ஆரம்பத்தில் வார்த்தைகளுக்கு முன் வருபவை:

(1) 'தன்' என்பதற்கு ஒரு புள்ளியும், 'தன் சுய/ஸ்வய' என்பதற்கு 'ச/ஸ' சுழியும், 'விச்வ/விசுவா/விசுவே,' என்பதற்கு 'ஸ்வ/சுவ' சுழியும், 'உத்/ உத்த/உத்தி' என்பதற்கு ஒரு சிறு கோடும் தனியாக அதனதன் பின்னே வரும் கோட்டின் தலைமேல் எழுதப்படும். 'உத்/உத்த/உத்தி' என்பது நடுவில் வந்தால் அதற்குப் பின்னே வரும் கோடு பிரித்து முன்னதை ஒட்டினாற்போல் எழுதப்படும்.

(2) 'சுய/ஸ்வய' என்பதற்கு. 'ச/ஸ' சுழி தனியாக அதன் பின்னே வரும் கோட்டின் முன் இரண்டாம் இடத்தில் எழுதப்படும்.

அத்தியாயம்—23

வேறுபாட்டுக் குறிகள்

வேறுபாட்டுக் குறிகள். *(262)* பொதுவாக, எங்கே ஒரு குறித்தொடர் இரண்டு வார்த்தைகளை ஒரே நிலையில் குறிக்கிறதோ, அங்கெல்லாம் ஒன்றினின்றும் ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவதற்காக உயிர்க்குறிகள் முக்கியமாகப் போடப்படும். அல்லது அவை இரண்டுக்கும் மெய்க்குறிகள் வெவ்வேறுவிதமாக எழுதியும் காட்டப் படும். (விதிகள்—*143, 212*). கீழே வரும் வார்த்தைகளைப் பன்முறை எழுதிப் பயில்வது மிகவும் அவசியமாகும்.

உயிர்க்குறியால் வேறுபடுத்தல்

அதனை,
அத்தனை,
அதுமூலம்,
அதன்மூலம்,
ஆதிமூலம்,
அதுமாதிரி,
அதேமாதிரி
அதுசமயம்,
அதேசமயம்,
அத்தியாவசியம்,
அதிசயம்,
அணையில்
அணியில்,

அழையாது,
அழியாது,
அசதி,
ஆஸ்தி,
இத்தகைய,
தீய,
இன்னும்,
இனியும்,
இனியாயினும்,
இனியேனும்,
எதாவது,
ஏதாவது,
எவ்வாறு,

வேறு,
கடமை,
கடுமை,
காப்பாற்ற,
கைப்பற்ற,
காயாது,
காய்த்து,
சுமார்,
சும்மா,
தங்கள்,
தாங்கள்,
நடக்க,
நடிக்க,
நெடுங்கை.
நெடுந்தகை.
பண்டைய,
பாண்டிய.
பணிவிடை,
பணியிடை,
பிற,
பூரா,
பெருமக்கள்,
பெருமாள்,
பெருமை.
பொறுமை,
மடக்க,
மடக்கு
மறக்க,
மறைக்க,
மறுக்க,
மாறாக,
மற்ற,
மாற்ற,
மாற்று,
முத்திரை,
மூதுரை,
வந்தார்,
வேந்தர்,
வறுமையினால்,
வராமையினால்,
வாராமையினால்,
வெளியார்,
வெளிறிய,
வேடிக்கை.

வேட்கை,

வேண்டியது அவசியம்.

வித்தியாசம்,

யாதானும்,

யாதேனும்,

யா.தாயினும்,

சிலரை,

சில்லரை.

மெய்க்குறியால் வேறுபடுத்தல்

அடித்தால்,

அடித்தல்,

அரங்கம்,

அரசாங்கம்,

அவைகள்,

அவள்,

இருக்காது,

இராது,

எப்படியாயினும்,

எப்படியேனும்,

சீர்திருத்தம்,

சரித்திரம்,

செய்யவும்

செய்வோம்,

நிலப்பரப்பு;

நிலப்பிரபு

பார்த்தீர்,

பார்த்தார்,

பறவை.

பார்வை,

பாதுகாக்க,

பாதிக்க,

பிரசுரம்,

பிரச்சாரம்,

விட்டீர்கள்,

விட்டார்கள்,

வேத்தியல்,

வேதியியல்,

நடவடிக்கை,

நடவு.

(263) ஒரு வார்த்தைக்கும், அதன் எதிர்மறை வார்த்தைக்கும் குறித்தொடரில் வேறுபாடு இருக்க வேண்டியது மிக அவசியம். இந்த வேறுபாடு ஒரு வார்த்தையின் எதிர்மறையைக் குறிக்க 'அ' உயிர் வருமிடங்களில் 'அ' ஆரம்ப உயிர்க்குறி விடாமல் சேர்த்து எழுதப்படும். அல்லது மெய்க்குறிகள் வெவ்வேறு விதமாக எழுதியும் காட்டப்படும். கீழே வரும் வார்த்தைகளைக் கவனிக்க.

ஆரம்ப உயிர்க்குறி சேர்த்தல்



காரணம், அகாரணம், நீதி, அநீதி,



தர்மம், அதர்மம், திருப்தி, அதிருப்தி.

மெய்க்குறிகள் வேறுபாடு



அசையும் பொருள், அசையாப் பொருள், செலுத்தியது. செலுத்தாது, உடன்பட்டது, உடன்படாதது, சொல்லிவிட்டால், சொல்லாவிட்டால், இருக்கவேண்டும், இருக்கவேண்டாம், அடைந்திருந்தால் அடையாதிருந்தால்,



கூடியிருந்தால், கூடாதிருந்தால். இருந்திருந்தால், இருக்காதிருந்தால், உடன்பட்டுப் போனால், உடன்படாமற் போனால், உடன்பட்டிருந்தால், உடன்படாதிருந்தால், ஏற்பட்டது, ஏற்படாது, செய்து, செய்யாது.

பன்மை விகுதியாகிய 'கள்': (264) பன்மை வகுதியாகிய 'கள்' என்பது (1) கல் என்பதை எழுதியும், (2)  கள் என்பதை எழுதியும், (3) சிறு கோட்டை எழுதியும், (4) 'ள்' பெரிய கொக்கியை கடைசியில் எழுதியும் காட்டப்படும். அவை முறையே தொகுக்கப் பெற்றுக் கொடுக்கப் பெற்றுள்ளதை பின்வரும் பத்திகளில் காண்க.

'கல்' எழுதுதல்: (265) 'கள்' என்பதற்கு முன் மெல்லினம் 'ங்' வராத வார்த்தைகள், தனிக்குறிச் சொற்கள், சுருக்கம் உட்பட எல்லாவற்றுக்கும் என்பது எழுதப்படுகிறது. (விதி–135) எ.கா.

அகதிகள்,  வேஷ்டிகள், எதிரிகள், தேதிகள், தலையீடுகள், பெயர்கள்,  அதிகாரிகள்.

'கள்' எழுதுதல்: (266) பன்மை விகுதியாகிய 'கள்' என்பதற்கு முன் மெல்லினம் 'ங்' வந்து அதை நடுவில் பெரிய சுழி கொண்டு காட்டவாகுள்ள இடங்களில் என்பது எழுதப்படுகிறது. எ.கா.

இல்லங்கள், நிறங்கள்,  ஒலியங்கள்.

சிறுகோடு எழுதுதல்: (267) கடைசியில் நீண்ட சுழி, சிறிய கொக்கி, 'னம் , னும்' சுழி இவற்றைக் கொண்டு முடிகிற வார்த்தைகளுக்கு சிறு கோடு எழுதப்படுகிறது. (விதிகள்–126, 168, 214).

கம்யூனிஸ்டுகள்,  குடும்பஸ்தர்கள்,
பலன்கள் சமூகத்தார்கள்... பானங்கள்.

'ள்' கொக்கி எழுதுதல்: (268) 'கள்' என்பதற்கு முன் மெல்லினமாகிய 'ங்' வந்து அதை நடுவில் பெரிய சுழி கொண்டு காட்டவாகு இல்லாத இடத்திலும், (2) தனிக்குறிச் சொற்கள், சுருக்கங்கள் ஆகியவற்றோடு பன்மை விகுதி சேரும்போது 'ங்' வருமிடத்திலும், (3) வர், ல (கீழ்) கடைசியில் வரும் இடத்திலும், (4) கடைக் கொக்கியின்றி இரட்டிக்கப் பெற்ற வார்த்தைகளுக்கும் 'ள்' கொக்கியே

எழுதப்படுகிறது (விதிகள்–177, 213).

வாசங்கள், வடிவங்கள், அட்டகாசங்கள்.

அரசாங்கங்கள், சந்தர்ப்பங்கள்,  அதிகாரங்கள்,

பாடுவார்கள், பர்ணசாலைகள்,  சொல்லிவிட்டார்கள்.

(269) பன்மை விகுதியாகிய 'கள்' என்பதை எழுதுவதற்கு மேற்கண்ட சில வரையறைகள் இருந்த போதிலும், வாகாக எழுதுவதே முக்கியமாகையால், எதை வேண்டுமானாலும் வாகுக்கேற்ப எழுதலாம்.

பயிற்சி–71

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக





பயிற்சி–72

சுருக்கெழுத்தில் எழுதுக

அய்யா,

தங்கள் அலுவலகத்திலும், தங்களது சார்நிலை அலுவலகங்களிலும் உள்ள மொத்த தட்டச்சுப் பொறிகளின் விவரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறேன்.

இவ்வாண்டு மே மாதத்தில் அனைத்து மாநில ஆட்சிமொழிக் கருத்தரங்கு நடைபெற உள்ளதால், இந்த விவரம் மிகவும் இன்றியமையாது தேவைப்படுகிறது. எனவே மேற்கண்டவாறு தங்களது ஒருங்கிணைந்த பட்டியலை மார்ச்சு 31–ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும்.

தங்கள் உண்மையுள்ள,

ராஜ்குமார்.

பாடச் சுருக்கம்

1. பொதுவாக எங்கே ஒரு குறித்தொடர் இரண்டு வார்த்தைகளை ஒரே நிலையில் குறிக்கிறதோ அங்கெல்லாம் ஒன்றினின்றும் ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவதற்காக உயிர்க்குறிகள் போடப்படும். அல்லது அவை இரண்டுக்கும் மெய்க்குறிகள் வெவ்வேறு விதமாக எழுதியும் காட்டப்படும்.

2. ஒரு வார்த்தைக்கும், அதன் எதிர்ப் பொருள் வார்த்தைக்கும் குறித் தொடரில் வேறுபாடு காட்டப்படும்.

3. பன்மை விகுதியாகிய 'கள்' என்பது (1) — கல் என்பதை எழுதியும், (2) —⁀ கள் என்பதை எழுதியும், (3) சிறு கோட்டைக் கடைசியில் எழுதியும், (4) 'ள்' பெரிய கொக்கியைக் கடைசியில் எழுதியும் காட்டப்படும்.

(விதிகள்: 262–269)

அத்தியாயம்–24

சிறப்புச் சுருக்கங்கள்

(பகுதி–1)

(270) சாதாரணமாக அதிக நீளமாக அல்லது எழுதுவதற்கு வாகாக இல்லாமல் அமைகின்ற குறித்தொடர்களின் வடிவங்களை சுருக்கி எழுதுவதனால் வேகம் அதிகமாகும். ஆனால் பார்த்தவுடன் வார்த்தை நினைவுக்கு வரக்கூடிய வகையில், சில அடிப்படை முறைகளைக் கொண்டு சுருக்கி எழுதப்படும் சுருக்கங்கள் அமைதல் நல்லது.

(271) இரண்டு வார்த்தைகளைச் சேர்க்கும் பொழுது முதல் வார்த்தையின் கடைசி மெய்க்குறியே, இரண்டாவது வார்த்தையின் ஆரம்ப மெய்க்குறியாக இருந்தால், இரண்டில் ஒன்று விலக்கி எழுதப்படும். எ.கா.

 அறிவு வளர்ச்சி, பிரதான நோக்கம்.

'த' விலக்கப் பெறுதல்: *(272)* 'ந்' என்பதற்கு நடுவில் பெரிய சுழி போடப்படுகிறபோது, 'ந்' என்பதை அடுத்து 'த' வந்தால் வாகுள்ள இடங்களில் 'த' விலக்கி எழுதப்படும். எ.கா.

 இரண்டாந்தரம், உச்சந்தலை, நெடுந்தலைப்பு.

(273) 'ஸ்த' என்பதற்கு நடுவில் 'ஸ்த' நீண்ட சுழி போட வாகில்லாத இடங்களில் 'த' விலக்கி எழுதப்பெறும். எ.கா.

 தீபஸ்தம்பம்,  துவஜஸ்தம்பம், மனஸ்தாபம்.

'ன' விலக்கப் பெறுதல்: *(274)* 'ஸ்த' என்பதற்கு நடுவில் நீண்ட சுழி போடப்படுகிறபோது, 'ஸ்த'வைத் தொடர்ந்து 'னம்'வரின்

வாகுள்ள இடங்களில் 'ன' விலக்கி எழுதப்படும். எ.கா.

சமஸ்தானம், கேந்திர ஸ்தானம்.

'ழ்' மெய்க்குறி விலக்கப் பெறுதல்: *(275)* 'ழ்' என்பது ஒரு வார்த்தையின் நடுவில் வரும்போது, வாகுள்ள இடங்களில் விலக்கி எழுதப்படும். எ.கா.

மகிழ்ச்சி, நெகிழ்ந்து,  மகிழ்ந்து.

'ன்' கொக்கி: *(276)* ஒரு வார்த்தைக்குப் பின் கடைசியில் வரும் 'தான்' என்பதைக் காட்ட, 'ன்' கொக்கி சேர்க்கப்பெற்றது. (விதி 170). 'கொண்டு' என்பதைச் சேர்த்து எழுத வாகு இல்லாத இடங்களில் 'கொண்டு' என்பதற்கும், 'ன்' கொக்கி எழுதப்படும். எ.கா.

 உட்கார்ந்து கொண்டு, ஒத்துக் கொண்டு.

(277) சிலவார்த்தைகளுக்கான குறித்தொடர்களை சாதாரண முறைப்படியே எழுதலாம். எ.கா. அந்தப்புறம் என்றாலும், சுருக்கி வேகமாக எழுத, இதுபோன்ற சாதாரண வார்த்தைகளையும் தனிக்குறியின் அடியாக வாகுள்ள இடங்களில் எழுதலாம். எ.கா.

அந்தப்புறம், அந்தரம், ஒன்றியம்.

(278) நேர்கோடுகளுக்குப் பின் 'ணம்/ணும்' வந்தால், 'ண் கொக்கி போடும் வாட்டமாகவே, 'ம்' சுழி சேர்த்து எழுதப்படும். (விதி–166). நீளமாகப் போகும் குறித் தொடரைச சுருக்குவதற்குத் தேவைப்படின் 'ணம்/ணும்' என்பதற்கும் எழுதப்படும். எ.கா.

அந்தக்கரணம்,  கருப்புப்பணம்,  முரட்டுக் குணம்.

(279) ஆரம்ப உயிர்க்குறிகளை விலக்கியோ, சேர்த்தோ குறித்தொடரைப் பார்த்தவுடன் வார்த்தைகளைப் படிப்பதற்கு

முன்பின் உள்ள கோடுகளை விலக்கி, இன்றியமையாத கோடுகளை மாத்திரம் வைத்துக் கொண்டு குறித்தொடர் எழுதப்படும். (விதிகள்–80, 81). நடுவில் வரும் மெய்க்குறிகளை விலக்கியும் எழுதலாம். என்றாலும், அக்குறித்தொடர் வேறு சொல்லொன்றைக் குறிக்காத இடங்களில்தான் இவ்வாறு விலக்கி எழுதப்படும்.

பயிற்சி—73

கீழே உள்ளவற்றைப் பலமுறை எழுதிப் பழகுக

இணைப்புப் பாலம்,

இத்தகைய ஏற்பாடு,

 இத்தகையதொரு ஏற்பாடு,

காட்சியரங்கு,

கிராம மக்கள்,

பழங்குடி மக்கள்,

பிற பகுதிகள்,

புழக்கடை,

மனநிறைவு,

வலிமை மிக்க,

வழிகாட்ட/டி,

விரைவு வண்டி,

விழாக்கொண்டாட்டம்.

அதிக கவனம்

முக்கிய கவனம்,

விசேஷ கவனம்,

விசேஷ ஊக்கம்,

கிராமாந்தரம்,

நெடுந்தூரம்,

 நெடுந்தெரு,

குறுந்தெரு,

நெடுந்தொலைவு,

பைந்தமிழ்,

ஐ.நா. ஸ்தாபனம்,

ஐக்கியநாட்டு ஸ்தாபனம்,

கலாச்சார ஸ்தாபனம்,

செய்தி ஸ்தாபனம்,

நிர்வாக ஸ்தாபனம்,

பல்வேறு ஸ்தாபனங்கள்,

ஆகம சாஸ்திரம்,

தலைமை ஸ்தான'

பயிற்சி–74

கீழே உள்ளவற்றைப் பலமுறை எழுதிப் பழகுக

புகழ்ச்சி,
புகழ்ந்து,
ஊராட்சி,
பேரூராட்சி,
ஊராட்சி ஒன்றியம்,
நகராட்சி,
ஊரக வளர்ச்சி.
ஆணைபடியால்,
ஆணைபடியினால்
அத்தியாயம்,
ஆதிபத்தியம்,
ஏகபோகம்,
ஏக்கச்சக்கம்,
ஏற்றத்தாழ்வு,
ஒருங்கிணைப்பு,
ஆட்சேப சமாதானம்,
அவற்றுள்,
அவற்றைத் தவிர
ஆகியவற்றைத் தவிர
பலவற்றைத் தவிர,

சிலவற்றைத் தவிர.
அறிக்கை,
இயற்கை,
செயற்கை,
அங்கீகாரம்,
பதிப்பாசிரியர்,
பள்ளி ஆசிரியர்,
இதழாசிரியர்,
சாதாரணம்,
அசாதாரணம்,
ஜாதி,
பலாத்கார,
ஏகாதிபத்தியம்,
நடைமுறை;
தத்துவம்,
மாவட்டம்,
ஆங்கிலேயர்,
வட்டாரம்,
கல்லூரி,
வரலாறு.

பயிற்சி—75

கீழே உள்ளவற்றைப் பலமுறை எழுதிப் பழகுக

நிலவுடைமையாளர்,
திறனாய்வாளர்,
அனுபவம்,
நடுவாந்தரத்திலே,
மாவட்டச் செயலாளர்,
வட்டச் செயலாளர்,
அரசுச் செயலாளர்,
ஆடம்பரச் செலவு,
ஆடம்பரப் பொருள்
அமைச்சர்,
முதலமைச்சர்,
நிதி அமைச்சர்,
அமைச்சரவை,
தத்துவஞானம்,
அனுபவஞானம்,
கூட்டுறவு நாணயச் சங்கம்,
கூட்டுறவு ஒன்றியம்,
கூட்டுறவு நூற்பாலை,
கூட்டுறவு ர்க்கரை ஆலை,

வேண்டுகோள்,
தூண்டுகோல்,
கொஞ்சநஞ்சமல்ல,
அஞ்சாநெஞ்சம்,
நயவஞ்சகம்,
பிரிவினைச் சக்தி,
அதிருஷ்டம்,
அதிருஷ்டசாலி,
அதிருஷ்டகாலம்,
அதிருஷ்டவசமாக,
துரதிருஷ்டம்,
துரதிருஷ்டவசமாக,
வரைபடம்,
ஜனத்தொகை,
நிதியாண்டு,
பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்,
ஆரம்பச் சுகாதார நிலையம்,
கூட்டுறவு நெசவாளர்.
கூட்டுறவு கைத்தறி நெசவாளர்
தாய் சேய் நலம்

பயிற்சி–76

கீழே உள்ளவற்றைப் பலமுறை எழுதிப் பழகுக

.... அணு மின்சாரம்,
.... அனல் மின்சாரம்,
.... புனல் மின்சாரம்,
.... போகிறபோக்கில்,
.... அழுத்தந்திருத்தமாக
.... உச்ச வரம்பு
.... நில உச்சவரம்பு
.... மக்களினம்,
.... மக்கள் கூட்டம்,
.... மக்கள் தொகை,
.... மக்கள் தொகைக் கணக்கு,
.... தாழ்த்தப்பட்ட மக்கள்,
.... தாழ்த்தப்பட்டவர்கள்,
.... பிற்பட்ட மக்கள்.
.... பிற்படுத்தப்பட்ட மக்கள்
.... பிற்பட்டோர்,
.... ஊனமுற்றோர்,
.... கண்கொட்டாமல்.
.... கண்ணிமைப்பொழுதில்,
.... கண்கொள்ளாக்காட்சி,

.... கண்ணும் கருத்தும்.
.... கடன்சுமையினால்,
.... கடன் நிவாரணம்,
.... நடையுடைபாவனைகள்,
.... புள்ளி விவரங்கள்,
.... சுட்டிக் காட்டியுள்ளார்,
.... உள்ளக் கிடக்கை,
.... கள்ளக் கடத்தல்,
.... கள்ள மார்க்கெட்,
.... ரசாயனக் கூடம்,
.... ரசாயன உரம்,
.... பாதுகாப்புச் சட்டம்.
.... தடியடிப் பிரயோகம்,
.... துப்பாக்கிப் பிரயோகம்,
.... வேலைவாய்ப்பு.
.... வேலையற்றோர்,
.... வேலையில்லாத் திண்டாட்டம்
.... அந்நியச் செலாவணி.
.... நாணயச் செலாவணி,
.... கஷ்ட நஷ்டம்.

உணவு தானியம்,

உணவுப் பண்டம்,

அன்பார்ந்த,

அன்பு கூர்ந்து,

அத்தியாவசியப் பண்டங்கள்.

குறிக்கோள்,

அருள் கூர்ந்து

அவதார புருஷர்.

பயிற்சி—77

சுருக்கெழுத்தில் எழுதுக

அன்பார்ந்த ஐயா,

1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2 ஆம் தேதி முதல் 5 ஆம் தேதி வரை உறுப்பினர்களது வேண்டுகோள்படி நமது வர்த்தக சபைக் கூட்டம் குற்றாலத்தில் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்துடன் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் இணைக்கப்பட்டுள்ளது.

அங்கத்தினர்கள் தங்குவதற்கு முன் கூட்டியே ஏற்பாடு செய்ய வேண்டி இருப்பதால், தாங்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள இருக்கிறீர்களா என்பதையும், தங்களுக்கு அங்கே எத்தகைய ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதையும் எனக்குத் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

சதாசிவம்.

பயிற்சி—78

படித்து, எழுதி, விரிவெழுத்தில் எழுதுக







பாடச் சுருக்கம்

1. சுருக்கம் அமைக்கும்போது சுருக்கி எழுதப்படும் குறித்தொடர் பார்த்தவுடன் வார்த்தை தோன்றக் கூடிய வகையிலும் வேறு பொருளுடைய வார்த்தை தோன்றாத வகையிலும் இருக்கும்படி அமைய வேண்டும்.

2. ஆரம்ப உயிர்க்குறிகளை விலக்கியோ, சேர்த்தோ, குறித்தொடரிலுள்ள கோடுகளில் வார்த்தைகளைக் கண்டு பிடிப்பதற்கு இன்றியமையாத கோடுகளை மாத்திரம் வைத்துக் கொண்டோ சுருக்கம் அமைக்கப்படும்.

3. இரண்டு வார்த்தைகளைச் சேர்க்கும் பொழுது முதல் வார்த்தையின் கடைசி மெய்க்குறியே இரண்டாவது வார்த்தையின் ஆரம்ப மெய்க்குறியாக இருந்தால் இரண்டில் ஒன்று விலக்கி எழுதப்படும்.

4. வார்த்தைகளின் நடுவில், ச/ஸ, ஆகியவற்றை அடுத்து வரும் த,ன, ழ் வாகுள்ள இடங்களில் விலக்கி எழுதப்படும்.

5. 'ஞ்' கொக்கி 'கொண்டு' என்பதற்கும் எழுதப்படும்.

(விதிகள்: 270–279)

அத்தியாயம்–25

சிறப்புச் சுருக்கங்கள்

(பகுதி–2)

(280) தமிழில் ஒரு வார்த்தையோடு முன்னோ, பின்னோ சில சொற்களோ, விகுதிகளோ சேர்ந்து பல வார்த்தைகள் உண்டாகின்றன. உதாரணமாக, 'அதிகாரம்' என்பதிலிருந்து, 'அதிகாரி, அதிகாரவர்க்கம், சர்வாதிகாரி, உதவி அதிகாரி, சுங்க அதிகாரி' என்பன போலப் பல வார்த்தைகள் உண்டாகின்றன. 'அதிகாரம்' என்பதன் குறித்தொடரை வைத்துக்கொண்டு மற்ற வார்த்தைகளையும் இயன்ற அளவு சுருக்கி எழுதினால்தான், எழுதிய குறித் தொடரை எளிதில் படிக்க முடியும்.

அதிகாரம், அதிகார/ரி.  அதிகாரவர்க்கம்.

சர்வாதிகாரி. உதவி அதிகாரி. சுங்க அதிகாரி.

மேலேயுள்ளது போல் ஒரு வார்த்தையின் (தனிக்குறிச் சொற்கள், சுருக்கம் உள்பட) குறித்தொடரை, முன்னோ, பின்னோ அப்படியே வைத்துக் கொண்டு அதனை ஒட்டி வருகின்ற வார்த்தைகளுக்கும் குறித்தொடர் எழுதப்படும். பின்னே வரும் பயிற்சிகளைக் காண்க.

பயிற்சி–79

கீழே உள்ளவற்றைப் பலமுறை எழுதிப் பழகுக

 அங்குள்ள

 அங்கெல்லாம்

 அங்ஙனம்,

 அடிக்கொருதரம்

அடிக்கொருதடவை

அடிப்படை

அடிப்படையில்

அடுத்தடுத்து,

அடுத்தபடியாக,

அடுத்தாற்போல

எங்காகிலும்,

எங்கேனும்

எங்காயினும்

எங்ஙனமாயினும்

எடுத்ததற்கெல்லாம்,

எச்சரிக்கை உரை

எச்சரிக்க விரும்புகிறேன்

அடிமை உணர்ச்சி.

அடிமை உணர்வு

அவசர உணர்ச்சி

பகை உணர்ச்சி

புத்துணர்ச்சி

சாதி வித்தியாச உணர்ச்சி

சாதிமத உணர்ச்சி

பயிற்சி—80

கீழே உள்ளவற்றைப் பலமுறை எழுதிப் பழகுக

அதிலுள்ளபடி

அடியிற்கண்டபடி

அடியிற்கண்டவாறு

மேற்கண்டவாறு

மேற்கொண்டு

அடைந்தபடியால்

அடைந்தபடியினால்

அடைந்தால்

அதல்லாமல்

அதுகுறித்து

அதுவுமின்றி

அதே சமயத்தில்

அதையடுத்து

அதையேற்று

அதையெல்லாம்

அதனுடன்

அதன்படி

அதன்பேரில்

அதன் விளைவாக

அத்தகையோர்

அதற்கடுத்தபடியாக

அதற்கப்பால்



அதற்கப்புறம்
அதற்கனுகூலமாக
அதற்காகவும்
அதற்காகிலும்
அதற்குத் தக்கபடி
அதற்கு மாறாக
அதற்கு மேலாக
அதற்குள்ளாக



அதற்கெல்லாம்
அதற்கேற்ப
அதற்கேற்றவாறு
அதிக நம்பிக்கை
அவ நம்பிக்கை
குருட்டு நம்பிக்கை
திட நம்பிக்கை
புது நம்பிக்கை

பயிற்சி–81

கீழே உள்ளவற்றைப் பலமுறை எழுதிப் பழகுக



அபிப்பிராயத்திற்கிசைந்து
அபிப்பிராயப்படுகிறோம்
அபிப்பிராயமாறுபாடுகள்
அப்படிச் செய்யவேண்டும்
அப்படியாயினும்
அப்படியேனும்
அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில்
அப்படிப்பட்ட சமயத்தில்,
அப்பேர்ப்பட்ட சமயத்தில்
அப்பொழுதெல்லாம்
அரசியல் அனுபவம்



அரசியல் அனுபவமிக்க
அரசியல் காழ்ப்பு
அரசியல் தத்துவம்
அரசியல் நிர்ணய சபை
அரசியல் வாழ்வில்
அரசியலார்
அவசர அடியாக
அவசரயேற்பாடு
அவசர காலம்
அவசரச் சட்டம்
அவசர நிலை

அனுபவ சாத்தியம்
அனுபவ சாத்தியமற்ற
அனுபவசாலி
அனுபவ ஞானம்
அனுபவ பாத்தியம்
அனுபவமிக்க
அனுபவிக்க
அனுபவித்து

அனுபவம் வாய்ந்த
தற்கால நிலைமையில் அபிப்பிராயபேதமின்றி அரசாங்க அதிகாரி தமது அதிகாரத்தை நல்லது பொல்லாதது எது என்று ஆராய்ந்து உபயோகிப்பது இன்றியமையாதது. எதிர்கால நிலைமை காலக்கிரமத்தில் எவ்வளவு மாறுதல் அடையக்கூடுமென்று இன்றைக்குச் சொல்வது சிரமம். ஆட்சி மாறும். எந்தக்காலத்திலும் யாரும் ஆட்சிக்கு வரலாம். காலத்திற்கேற்ப ஒவ்வொருவரும் சமயோசிதமாய்ப் பழகுவது மிக அவசியம். எந்தக்காலத்திலும் அரசியல் கொந்தளிப்பில் அரசாங்க அதிகாரிகள் சிக்கக்கூடாது.

சர்வகலாசாலைப் படிப்பு உயர்வானது என்பது பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். ஆனால் ஒருவருக்கு இந்தக் காலத்தில் படிப்பு மாத்திரம் போதுமா? அதற்கேற்ற குணமும் பண்பும் தேவை. பிறருக்கு உபகாரம் செய்யும் உயர்ந்த எண்ணம், அன்பு, இரக்கம், தீமையை எதிர்க்கும் உறுதி, இதைப்போன்ற ஆத்ம குணம் வெளிப் படுதல் அவசியம். எப்பொழுதும் அதிகாரி என்கிற ஆணவம் வேண்டாம். லஞ்சம் வாங்கக்கூடாது. ஆகையினால், ஒருவருக்கொருவர் பொறாமையின்றி இணைந்து உழைப்பது மிக அவசியம்.

'சகோதர சகோதரிகளே', என்று மணிக் கணக்கில் சொற்பொழிவு செய்வதனால் எந்தப் பிரச்சினையையும் சமாளிக்க லாமென்று எண்ணக் கூடாது. அன்பால் ஆவது வேறு எதனாலும் ஆகாது. அதனாலேயே 'அன்பே சிவம்' என்று பெரியோர்கள் சொல்வர்.

பயிற்சி–41



பயிற்சி–42

சென்னை,
11.5.1953.

அன்புமிக்க பழனிக்கு,

அநேக வணக்கம். உன் கடிதம் கிடைத்தது. இப்பொழுது இங்கு யாவரும் சுகம்.

இந்த ஊரில் கைத்தறித் துணி பல வர்ணத்தில் எல்லோருக்கும் தக்கவாறு மிக அழகாக இருக்கிறது. விலையும் மலிவு. இந்த வருஷம் பொங்கல் பண்டிகை வரை விலையில் தள்ளுபடி உள்ளது. எனினும் பலர் கைத்தறித் துணி வாங்குவது இல்லை. ஏனென்றால் நம் எல்லோருக்கும் மில் துணி மோகம் போகவில்லை. ஆனால் ஒன்று. தலைமுறைதலைமுறையாய் நமது பாரத பூமியில் இருக்கும் குடிசைத் தொழில் கைத்தறியாகும். அந்தத் தொழில் இன்று நசித்தால் அதையே நம்பியுள்ள பல குடும்பம் நிர்க்கதியாய்த்தெருவில் வேலையற்றுச் சுற்ற நேரிடும். இந்தப் பாதகம் ஏற்பட நாம் பச்சாதாபமின்றி இருக்கக் கூடாது. ஆகையால் நெசவாலையோடு தகராறு இல்லாமல் விரைவில் இதற்கேற்றபடி திட்டம் வகுப்பது அரசாங்கக் கடமைகளில் தலையாய ஒன்றாகும். ஆயினும் நாமும் அதற்கு அமோக ஆதரவு தருவது

அவசியம் இல்லையா? நானும் பாலுவும் கைத்தறித் துணியையே வாங்கி வருகிறோம். தேவையானால் உனக்கும் இந்தத் தடவை வாங்கி வைக்கிறோம். உன் அபிப்பிராயம் என்ன என்று எழுது. மற்றது பின்னர்.

அன்புள்ள,

சுப்பிரமணியம்.

பயிற்சி—43



பயிற்சி—44

கண்ணாடி, நண்பகல், பாவனை, மனப்பான்மை, சண்டித் தனம், கணவன்,

அஞ்சனம், ஜீவாத்மா, முயன்று, படித்தவன், குணவான், ஜீவானந்தம்,

மேன்மை, முன்னேற்றம், கண்மூடித்தனம், வண்ணம், பாவிக்க, பிரதிநிதி, பதுங்கி,

அற்பத்தனம், மேன்மேலும்,. முன்வருகிறோம், காஞ்சனம். ஜீவனாம்சம், வழிவகை.

பயிற்சி—45





பயிற்சி—46

வாள், வேள், வாழ்ந்தாள், மெய்ப்பொருள் அருந்தமிழ்,
கடவுள், மருள், ஆயுள், தொல்பொருள், அகத்தமிழ்,
தமிழோசை, கோவில்கள், வீழ்ச்சி, கச்சாப்பொருள், செந்தமிழ்,
தென்தமிழ், சங்கத்தமிழ், கலவரங்கள், இடம்பொருள், தண்டமிழ்,
வந்தாள், திருப்புகழ், கொள்முதல், மூலப்பொருள், இசைத்தமிழ்.

பயிற்சி —47





பயிற்சி – 48

'கற்க கசடற' என்பது குறள். படித்தல் நன்று. நீங்கள் படிக்காமற்போனாலும், நல்ல விஷயங்களைக் கேட்பதும் உங்களிடையே இடையறாமல் நாள் தோறும் உயர்ந்த எண்ணம் வளர்வதற்குப் பயன்படும். மக்களது ஒழுங்கற்ற பழக்க வழக்கங்கள் சீராகும். இன்றையதினம் ஜனங்கள் சம்பந்தா சம்பந்தமின்றி நாள்தோறும் சண்டைச் சச்சரவுகள் போடுவதைப் பார்க்கிறோம். அவர்கள் பலவித மான கலாசாரம், பலவிதமான பழக்க வழக்கங்கள் உடையவர்கள். அவர்கள் எல்லோரையும் ஒன்றாக்குவது இயலாத காரியம். அதனால் அவ்வப்போது உங்கள் அபிப்பிராயங்கள் மாறுபடலாம். ஆனபோதிலும், அது சமூக மோதலாக மாற நீங்கள் இடம் கொடுக்கக் கூடாது. எப்படிப்பட்ட வேற்றுமை இருப்பினும் தலைவர்கள் சொல்வதை அவர்கள் கேட்பார்களேயாகில் தேசத்தில் சமாதானம் நிலவும். திரு. சச்சிதானந்தம் தம் பிரசங்கத்தினிடையே இவற்றையே அவ்வப்போது வற்புறுத்திச் சொல்வார்கள். அடிக்கடி அவரது சொற்பொழிவைக் கேட்பதற்கு பல சங்கங்களுக்கு நாங்கள் போகிறோம். அது எல்லோராலும் விரும்பிக் கேட்கத் தக்கது. இதுபோல் நல்லவைகளை யார் எங்கு சொன்னாலும் நாள்தோறும் அங்கே சென்று அதைக் கேட்கப் பழகுவது ஜனங்களது ஆன்மீக அறிவை வளப்படுத்தும்.

பயிற்சி – 49





பயிற்சி – 50

யாரும் மனம் போன போக்கில் போகக் கூடாது. மனதை அடக்கி, அறிவைச் செலுத்தி ஒரு நிமிஷம் கூட சும்மா இராது ஒவ்வொரு நிமிஷமும் ஏதாவது நற்பணி செய்யப் பழகுதல் அவசியம். நிமிஷத்திற்கு நிமிஷம் பாரபட்சமின்றி யோசித்துக் காரியம் ஆற்ற உள்ளபடியே உள்ளத்தில் உயர்ந்த லட்சியம் ஒன்றை வைத்துக்கொள்ளுதல் அவசியம். நமக்கு என ஒரு கொள்கை, ஒரு லட்சியம் இல்லாமற்போனால் நமது வாழ்வு சிறக்காது. லட்சம் லட்சமாய் பணம் சேகரிக்க விரும்புவது தவறு அல்ல. உள்ளபடியே உழைப்பால் கிடைக்கும் செல்வமே உயர்வானது. நமது வாழ்க்கையில் உழைப்பால் கிடைப்பதையும் பட்சபாதமின்றி பிறருக்கும் கொடுத்து உண்பது அலட்சியம் செய்வதற்கு உரியது அல்ல. உள்ளது உள்ளபடியே பார்த்தால் இதையே லட்சியமாக உயர்ந்த மக்கள் சொல்லி வந்துள்ளார்கள்.

பயிற்சி – 51



பயிற்சி — 52

எதையும் செய்வதற்கு முன்பு ஆலோசனை செய்வது அவசியம். எந்த விஷயத்தையும் நன்றாய்த் தேர்ந்து, தெளிந்து அதற்குமேல் காரியங்கள் பலவற்றை முறையாகச் செய்ய முனைவது சுலபமாக வெற்றி காண வழிவகுக்கும். இந்தப் புஸ்தகத்தில் கண்டுள்ள விதிகளைப் படித்து உதாரணங்கள் பலவற்றையும் பன்முறை எழுதிப் பழகினால் அவற்றை நாளடைவில் எளிதாக எழுதலாம். நாளாவட்டத்தில் வேகமும் அதிகமாகும். அவற்றால் நல்ல பயன் ஏற்படும். அதற்கு நாள்தோறும் குறித்த நேரத்தில் பழக்கம் செய்யும் ஒரு வழக்கம் இருப்பது அவசியம். நல்ல தாளில் கூர்மையான பென்சிலினால் அவற்றை ஆரம்பத்தில் எழுதிப் பழகினால் பின்னர் நல்ல பேனாவால் எழுதிப் பழகலாம். காலை நேரம் பழக்கத்திற்கு சிறப்பாக அமையக் கூடும். ஜாதி வித்தியாச உணர்ச்சி இன்றி நாம் ஒருவரோடொருவர் பழகினால் பலவற்றையும் தெரிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கும். நமது வாழ்நாளில் எல்லாக் கலைகளையும் கற்க வழி இல்லை. எனவே கற்க எண்ணி ஆரம்பித்த இந்தக் கலையில் நல்ல தேர்ச்சி பெற ஊக்கமும் உழைப்புமே தேவை. உழைப்புக்கு இணை எதுவும் இல்லை.

பயிற்சி — 53

ஊட்டம், ஒட்டகம், மாறாட்டம், சட்டம், அர்த்தம்.
மந்திரி, பதவி, பந்தல், முத்திரை, படுக்கை.
கேந்திரம், வாடகை, வேடிக்கை, குந்தகம், கட்டுமானம்,
ஆண்டு. ஆண்டவன். கட்டளை, நுட்பம், நடனம்,
உண்டு. வருத்தம், போராட்டம், உத்தேசம், வந்தனம்.

பயிற்சி — 54





பயிற்சி – 55

''நமது இந்தியாவில் அதிலும் சிறப்பாகத் தமிழகத்தில் இன்றைய தினம் கூட்டுறவு வர்த்தகத் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மிகவும் அதிகம் என்று நினைக்கிறேன். எங்கே பார்த்தாலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அது மட்டுமல்ல. நியாய விலைக் கடைகள் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் ஜனங்கள் எல்லோருக்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவு ஸ்தாபனம் மூலம் வீடு கட்ட பொது மக்களுக்கு கடன் வழங்கப்படுகிறது. பொதுவாக இவை எல்லாம் ஒட்டு மொத்தமாகத் திறம்படப் பணியாற்றினால் தான் பொது மக்களுக்குப் பயனுண்டு. இவற்றால் அதிக நன்மை நாட்டுக்கு ஏற்பட வேண்டுமானால் பொது மக்களும் வேண்டிய மட்டும் இவற்றை நன்கு ஆதரித்து வரவேண்டுமென்பது அவசியமாகும். ஜனங்களுக்குப் பலவகையிலும் சேவை செய்து வருகிற ஸ்தாபனம் ஒன்று உண்டு என்றால் அது கூட்டுறவு ஸ்தாபனம்தான். இதனை எதிர்த்து யாரும் வெளிப்படையாக எதுவும் சொல்லாவிட்டாலும் சிலரது ராஜதந்திர நடவடிக்கை இவற்றுக்குக் குந்தகம் ஏற்படுத்தி வருகிறது.

வர்த்தக ரீதியில் இந்த ஸ்தாபனங்கள் நட்டம் அடையாதிருக்க ஊழல் குற்றச்சாட்டுக்கு இடம் அளிக்க வேண்டாம். உறுப்பினர்கள் தாம் பெற்ற கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும். அப்போது தான் அவற்றினால் தொடர்ந்து பயன் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். நாட்டு மக்களிடையே ஒட்டுறவை ஏற்படுத்தும் கூட்டுறவுச் சங்கங்களை பொது மக்களே ஆங்காங்கு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்கு அரசாங்கமும் உறுதுணையாக இருக்கும்'' என வர்த்தகர்கள் சபைக் கூட்டம் ஒன்றில் கரகோஷத்திடையே தமிழக கூட்டுறவுத் துறை மந்திரி பேசினார்.

பயிற்சி – 56



பயிற்சி – 57

சோளிங்கரில் முன்பு ஒரு ஜமீன்தார் இருந்தார். அவர் ஒரு பெரும் செல்வந்தர். அதோடு கல்வியாளர். அன்பு, இரக்கம் மிகுந்த கொடையாளர். அவர் சுமார் ஏழு ஆண்டுகளுக்கு முன்பு இங்கே ஒரு வைத்தியசாலையை ஸ்தாபித்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் ஆஸ்பத்திரி வேண்டாமென்று சிலர் எதிர்த்தார்கள். ஆனபோதிலும் அபிப்பிராய பேதங்களுக்கு இடம் கொடுக்காமல் பொதுமக்கள் அவரைப் பூர்ணமாக ஆதரித்தார்கள். அதனால் அவர் அரசாங்கத்தார் துணையோடு அதனை அன்று ஸ்தாபித்து விட்டார்.

அதற்குப் பிறகும் அவர் பொதுமக்கள் சுகாதாரம் கருதி அந்தத் தொகுதிக்குப் பல நன்மைகளைத் தொடர்ந்து செய்து வந்தார். கிராமப்புறத்தார் கல்வி பெற நகரத்தார் உயர்நிலைப் பள்ளிக்கு நிரந்தரமாகக் கட்டிடம் ஒன்றைக் கட்டித் தந்தார். அதனாலேயே அவர் கீர்த்தி அடைந்தார். தேசத்தார்கள் அனைவரும் அவரை நேசித்தார்கள். அவரும் ஏழை மக்களிடம் அன்பு காட்டினார். பொருளும் ஈந்தார். யாரையும் கோபித்தார், அவமதித்தார் என்ற பெயரே இல்லை. யார் பொருளையும் கை நீட்டித் தொடமாட்டார். பலதடவை சட்டசபை அங்கத்தினராக இருந்தார். அவரைப் போல யாரும் உலகில் இருக்க இயலாது என்று எண்ண வேண்டாம். இருக்க

விரும்பினால் இருக்கலாம். ''மாந்தர் உள்ளத்து அனையது உயர்வு'' என்றே பொய்யா மொழிப் புலவரும் சொன்னார்.

பயிற்சி – 58

நேர்நேராக, இன்ப துன்பம், நன்மை தீமை, அல்லும் பகலும், புறநானூறு, மேடு பள்ளம், உயர்வு தாழ்வு, அகமும் புறமும்.

வாழ்வு தாழ்வு, மண்ணும் விண்ணும், அனலும் புனலும், எலும்பும் தோலும்,

உயிரும் உடம்பும், விதியும் மதியும், கோணல் மாணலாக, ஆக்கமும் அழிவும்.

பயிற்சி – 59



பயிற்சி – 60

''தலைவர் அவர்களே, அல்லும் பகலும் தேசமக்கள் நன்மைக்கே ஜாதி வித்தியாச உணர்ச்சியின்றி தொண்டாற்றி வந்திருக்கும் நான் இன்றைக்கு உங்களிடமிருந்து விடைபெறும் சந்தர்ப்பத்தில் இருக்கிறேன்,'' என திருவாளர் மாரியப்பன் தெரிவித்தார். மேலும் மேலும் பொதுமக்களுக்கு தாம் தொடர்ந்து சேவை செய்யப் போவதாகவும் அறிவித்தார். அவர் தம் உரையில் குறிப்பிட்டதாவது:

''தொழிலாளர் வாழ்வு தாழ்வில் பங்கேற்று, தொழிலாளர்கள் போராட்டம் பலவற்றை முன்நின்று நடத்தி இருக்கிற எனது வாழ்வில் மேடு பள்ளம் பல உண்டு. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் என்னுடைய வாழ்க்கை ஒரு தொடர் கதை. தொடர் கதை என்றால் விரிவாக எழுதப்பட்டிருக்கும். சிறுகதை என்றால் சுருக்கமாக எழுதப்பட்டிருக்கும் என்று யாராவது எண்ணினால் அது தவறாகும். அதுமட்டுமல்ல. இவற்றின் அளவு வேறுபாடு மாத்திரம் அல்ல. வகையே வேறு. ஆலமரம், புளியமரம் போன்றவை ஒரு சாதி. கிளைகளின்றி ஒரே தண்டாக வளரும் தென்னை, பனை, கமுகு போன்ற மரங்கள் வேறு. இதைப் போல சிறுகதை வேறு. நெடுங் கதை வேறு. என்னுடைய வாழ்வு ஒரு நெடுங் கதை. அதில் ஒரு பகுதியே உங்களோடு நான் இந்தச் சட்டசபையில் இருந்த காலம். இந்தச் சட்டமன்றத்தில் இதுவரையில் நான் இருப்பதற்குக் கிடைத்த வாய்ப்பை ஒரு பெறும் பேறாகவே கருதுகிறேன்'' எனத் தெரிவித்தார்.

பயிற்சி – 61





பயிற்சி – 62

அகழ்வாராய்ச்சி, பால்வளம், பாலைவனம், அருவினை, பரமேசுவரன், கருவூலம், சுரங்கவழி, அலைவீச்சு. வாணவேடிக்கை, பணவீக்கம், பகல்வேஷம், அகவாழ்வு, அரசியல் வாழ்வு, அளவளாவி, போராட்ட வீரர், அணுவிசை, மொத்த வியாபாரம், ரொக்க வியாபாரம், நல்வழி, நல்வினை.

பயிற்சி – 63



பயிற்சி – 64

நாயனம், நயனம், கயமைத்தனம், காயத்திரி, அறச்செயல்
தற்செயல், தீரச்செயல், பாராயணம், பிராணாயாமம்,
மனயெழுச்சி,
செயலாளர், தயாளு, கயிலாசம், குயுக்தி, நாட்டுச் சாராயம்,
பட்டைச் சாராயம், கதாயுதம், தேஜோமயம், மாயமான்,
ஒட்டப் பந்தயம், மூடிவைக்க, அனுப்பிவைக்க,
தள்ளிவைக்க, அடிவைத்து.

பயிற்சி – 65

முறையிட்டு, இணையான, ஆணையிட, கடுமையான,
கையகப்படுத்த, கையூட்டு, சுவையூட்டும், முழுமையான,
கையாடி, வாயாடி, கட்டளையிட, நையாண்டி,
துளைய, தலையணி, கையகம், நகையாடி, தடையம்,
சிலேடையணி, வளையல், இறையோன், இடையொத்து.

பயிற்சி — 66

வானியல், அட்டூழியம், முதியவர், கசக்கிய,
ஒருங்கியல், நகரியம், நியதி, தமியன்,
ஓவியன், ஒட்டியாணம், பைத்தியம், காலியிடம்,
கொடியேற்றி, குடியேற்றம், வெளியேற்றம், குடியிருப்பு
இனியேனும், குறியிட்டு, புவியில், கடைசியாக,
அடியுரம், நன்றியுரை, அதிகாரியும், வெளியுறவு.

பயிற்சி — 67





பயிற்சி – 68



பயிற்சி – 69

சேனாதிபதி, கொண்டிருக்கும்பொழுது, தரமுடியாது, வாசிக்கும் பொருட்டு,

இமைப்பொழுதும், பார்க்க முடியாது, பார்க்க முடியும், பார்க்கிற பரியந்தம்,

பார்க்கும்பொருட்டுதான், யோசிக்கும் பொருட்டு, கேட்க முடியாது.

இறங்கும்பொழுது, பொழுதுபோக்கு, யோசிக்கிற பரியந்தம், கொண்டுவர விரும்புகிறேன், தரமுடியும், உமாபதி, லட்சாதிபதி, கொள்ள முடியாது.

பயிற்சி – 70



பயிற்சிகளுக்கான குறிவிளக்கம்



பயிற்சி – 71

பல நதிகளால் சூழப்பட்ட எங்கள் சோழநாட்டு கிராமங்களில் பலவிதமான பூம்பொழில்கள் இருக்கின்றன. பார்க்கும் கழனிகள் எல்லாம் பசுமையாக இருக்கும். ஆற்றின் கரையோரங்களில் இருக்கும் புல் தரைகளில் மாடுகளும் ஆடுகளும் மந்தை மந்தையாக மேய்வதும், மறிகளும் கன்றுகளும் துள்ளித் துள்ளிக் குதிப்பதும் கூர்ந்து நோக்க ஆனந்தம் அளிக்கும். வானில் பட்சிகள் கூட்டம் கூட்டமாகப் பறந்து செல்லும். குளங்களின் இரு மருங்கிலும் அமைந்து இருக்கும் படுகைகளில் ஏற்றம் இறைக்கும் விவசாயத் தொழிலாளர்களின் தெம்மாங்குப் பாடல் பூங்காற்றிலே மெல்ல மெல்ல தவழ்ந்து வரும். பெருமையாக, பொறாமையின்றி உழைக்கின்ற அந்த மக்கள் கூட்டத்தைப் பார்த்தாலே பசி தீரும். ஆறுகளும் கோவில்களும் சூழ்ந்த அந்தப் பகுதியிலுள்ள ஊர்கள் எல்லாமே பாடல் பெற்ற திவ்யக்ஷேத்திரங்களாகும். இந்த ஆண்டு அங்குள்ள ஆலயங்களுக்கு நாம் போய் வரலாம். நமது துன்பங்கள் அகலும்.

மொத்தமாக, நானூறு, ஐநூறு ரூபாய்க்கு மேல் செலவு ஆகாது. பலவிடங்களுக்கு அவ்வப்போது நாம் செல்வது நம் அறிவையும், உணர்வையும் முறையாகப் பண்படுத்திக் கொள்ள பெரிதும் பயன்படும்.

பயிற்சி – 72



பயிற்சி – 77





பயிற்சி—78

தமிழக முதலமைச்சர் ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்றை திருத்தணியில் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''மேல்நாடுகளுக்கு நான் சென்றிருக்கிறேன். அங்கு உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்கிற வேறுபாடு இல்லை. தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் என யாரும் அங்கே கொடுமைக்கு ஆளாக வில்லை. அங்கு கல்வி ஸ்தாபனங்கள், கலாசார ஸ்தாபனங்கள், செய்தி ஸ்தாபனங்கள் போன்ற பல்வேறு ஸ்தாபனங்கள் ஒன்றுக்கொன்று மனஸ்தாபமின்றி இணைந்து சிறப்பாக கண்ணும் கருத்துமாகப் பணி செய்கின்றன. மக்கள் எல்லோரும் ஒட்டுமொத்தமாக வசதியாக மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

அப்பொழுதெல்லாம் நம் நாட்டு ஏழைகளின் நினைவு என் மனதில் வர கண்ணீர் சிந்தி அழுது இருக்கிறேன். இதற்குக் காரணம் தான் என்ன? கல்வி என்பதுதான் எனக்குக் கிடைத்த விடை. கல்வி, தன்னம்பிக்கை ஆகியவற்றின் மூலமே நம்மிடத்தில் மறைந்திருக்கும் தெய்விக சக்தியை நாம் வெளிப்படுத்தலாம். அதிருஷ்டவசமாக உலகில் உயர்ந்த பெரியோர்கள் நம் நாட்டில் தோன்றியுள்ளார்கள். துரதிர்ஷ்டவசமாக அதை நாம் உணரவில்லை. உடன்பாட்டு முறையில் நமக்கு எதுவும் கற்பிக்கப்படுவது கிடையாது. நம் கைகளையும், கால்களையும் சரியாகப் பயன்படுத்தக் கூட நாம் கற்றுக்கொள்ள வில்லை. கல்வி என்பது ஒருவருடைய மூளையில் பல செய்திகளைத் திணிப்பது அன்று. கற்பது நமக்குப் பயன் அளிப்பதாய் இருப்பது அவசியம். ஒழுக்கம் அளிப்பது, ஆண்மை அளிப்பது, மனவலிமையைத் தருவது, புத்தியை விசாலிக்கச் செய்வது. தன்னம்பிக்கையுடன் இருக்கச் செய்வது ஆகிய இவற்றை அளிக்கும் கல்வியே நமக்குத் தேவை. நமது ஆத்மாவை மூடியிருக்கும் அறியாமைத் திரையை நீக்குதலே கற்றலின் பயனாகும்.

பயிற்சி—89



பயிற்சி—90

மொத்த ஜனத்தொகையை எடுத்துப் பார்த்தால் படித்தவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் பெருகி வருகின்றது எனத் தெரிந்து கொள்ளலாம். இது பெருமைக்குரியது தான் என்றாலும் படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருவது கவலைப்பட வேண்டிய ஒன்றாகும். தேசத்தில் வேலை வாய்ப்புப் பெருக குடிசைத் தொழில்கள் அதிகம் பெருகப் பெருகத்தான் ராஜ்யம் பூராவும் பரவிக் கிடக்கின்ற மக்களுக்கு எல்லாம் பிழைப்பு ஏற்படுமென அகில இந்திய கைத்தொழில் போர்டு சிபார்சு செய்துள்ளது. இது வெறும் குருட்டு நம்பிக்கை அல்ல. அனுபவசாத்தியமற்ற யோசனையும் அல்ல. அவர்களுடைய அபிப்பிராயத்திற்கிசைந்து அதில் அதிக நம்பிக்கையோடு மாநில அரசு செயல்பட்டால் நாட்டு மக்களிடையே வேலைவாய்ப்பு பெருகும் என்பதே பெரும்பாலோரது ஏகோபித்த அபிப்பிராயம். இதில் யாருக்கும் தப்பு அபிப்பிராயம் ஏற்பட இடமே இல்லை.

மத்திய அரசும் பெரும் தொழில்கள் ஆங்காங்கு ஏற்படத் திட்டமிட்டு உடனுக்குடன் அனுமதி வழங்க வேண்டும். இப்பேர்ப்பட்ட

சமயத்தில் தொழிலதிபர்கள் பல புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்த உடனடியாக விசேஷ ஊக்கம் செலுத்த வேண்டும். கண்ணிமைப் பொழுதில் எதையும் நடைமுறையில் செய்வதற்கு இல்லை. ஆயினும் போகிற போக்கில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க அரசாங்கம் அவசர உணர்ச்சியோடு நடவடிக்கை எடுத்துக் கொள்வது இன்றியமையாதது. மக்களினம் ஒன்றுபட்டு உழைக்க வாய்ப்பை உண்டாக்கித் தருவதே நமது தேசத்தின் வறுமையைப் போக்க, வளத்தைப் பெருக்க வழி ஏற்படுத்தும்.

பயிற்சி–91



பயிற்சி–92

''நமது பிரச்சினைகள் எல்லாவற்றிலும் மிக முக்கியமானது பொருளாதாரப் பிரச்சினைதான். அரசியல் அனுபவமிக்க தலைவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி இந்தப் பிரச்சினையை சமாளிக்க தீர்க்காலோசனை செய்யவேண்டும். நமது தேசத்தில் எதேச்சாதிகாரத்தை விரும்புகிறவர்கள் வேண்டுமானால் அனுபவ சாத்தியமற்ற

யோசனைகளைக் கூறலாம். அதிகார வர்க்கத்தினர் சர்வாதிகாரம் செய்கிறதாகப் புகார் கூறுகிறவர்கள் இன்றையதினம் பொதுஜன அபிப்பிராயத்தைக் கொஞ்சங்கூட உணரவில்லை. ஆனால் மக்களின் மனோபாவம் எப்படி இருக்கிறது என்பதை எங்களால் ஓரளவு உணர முடியும். ஆயினும் நாங்கள் சொல்வதையே எல்லோரும் அங்கீகரிக்க வேண்டுமென்று ஒரு போதும் வற்புறுத்தவில்லை. ஆதிக்கம் வேண்டாம் என்று தான் நாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஒழித்தோம்,'' என பாரதப் பிரதமர் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார்.

அவர் மேலும் சொன்னதாவது: ''ஒரு காரியத்தை கவனித்துக் கொண்டிருக்கும்போது பல காரியங்களில் கவனம் செலுத்த முடியாது. இந்த வருஷம் பெருத்த கஷ்ட நஷ்டங்களை எல்லாம் நாம் சமாளிக்க வேண்டியிருந்தது. துரதிருஷ்டவசமாக இயற்கையும் நம்மைச் சோதித்தது. அதனால் ஏற்பட்ட துன்பம் கொஞ்சநஞ்சமல்ல. ஒரு பக்கத்தில் பஞ்ச நிவாரண வேலைகளும், மற்றொரு பக்கத்தில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய வசதிகளும் மாநிலத்தின் பல்வேறு பாகங்களில் நடக்கின்றன. நம் நாட்டில் ஏராளமான மக்கள் சுகாதார வசதியின்றியும், கல்வி வசதியின்றியும், பொருளாதார வசதியின்றியும் தவிக்கிறார்கள். இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டு நாம் வாளா இருக்க முடியாது. பயனுள்ள வகையில் யார் என்ன யோசனை சொன்னாலும் அதற்கேற்றபடி நாங்கள் நடக்கத் தயார். தேசிய நலனில் அக்கறையுள்ள எல்லோரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டிய கால கட்டத்தில் நாம் இன்றைக்கு இருக்கிறோம்.''

பயிற்சி—93





பயிற்சி—94

''நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்றே எல்லாக் கட்சிகளும் பாடுபடுகின்றன. இன்றையதினம் ஆட்சியில் நாங்கள் இருக்கிறோம். வருகிற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றால் நீங்களும் இந்த இடத்திற்கு வரலாம். ஆகவே பொதுஜன அபிப்பிராயத்தின்படி ஆட்சி மாறக் கூடும். ஆனால் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஒரு போதும் மாறுவது இல்லை. ஆகையால் அவர்களிடையே கட்சி மனப்பான்மை இருக்கக்கூடாது என்றே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்,'' என இந்தியப் பிரதம மந்திரி ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார்.

அக்கூட்டத்திற்கு மாநில முதல் மந்திரியும், சென்னை கார்ப்பரேஷன் மேயரும் வந்திருந்தார்கள். அப்போது திட்டக் குழுத் தலைவர் இருபது அம்சத் திட்டத்தைப்பற்றி எடுத்துரைத்தார்.. அதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த ஆலோசனைக் குழு தனது யாதாஸ்தை சமர்ப்பித்துவிட்டது. தேசியப் பத்திரிகைகள் எல்லாம் இதற்கு அமோக ஆதரவு தந்துள்ளன. பொது ஜனங்கள் இதைப் பெரிதும் ஆதரிக்கின்றனர். எல்லா அரசியல் கட்சிகளும் பாராட்டி இருக்கின்றன. இதனால் தேசத்தில் பொருளாதார முன்னேற்றம் நாளடைவில் ஏற்படும் என்று சொல்லப்படுகிறது. மத்திய சர்க்கார் இதில் மிகுந்த அக்கறை காட்டுகின்றது. தற்போதுள்ள நிலைமையில் இதை அதிசீக்கிரம் காலதாமதமின்றி செயல்படுத்த நிதியாதாரம் அரசாங்கத்தினிடம்

இருக்கவேண்டும். இன்றையதினம் அதற்கு உதவி செய்ய உலக வங்கி முன் வந்துள்ளது.

மேலும் இந்தியப் பிரதமர் பேசும்போது, ''நம் நாட்டின் க்ஷேமத்தை எண்ணி நாம் உழைத்துக் கொண்டிருக்கும்போது உலகின் பல பாகங்களில் போர் முழக்கம் கேட்டுக்கொண்டிருக்கிறது. இதனால் நம் எதிர்கால நிலைமை எப்படி இருக்கும் என்று சொல்ல முடியாதுதான். ஆயினும் நாம் எல்லோரும் ஒருமனப்பட்டு ஒருங்கிணைந்து செயல்பட்டால் சாதிக்க முடியாத பிரச்சினை எதுவும் இராது'' எனத் தெரிவித்தார்.

பயிற்சி—99

''மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் இன்றைய தினம் நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்து இருக்கும் வரவு செலவுத் திட்டத்தை மனப்பூர்வமாக ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் பேசுகையில் மாநில அரசு பாசனத் திட்டம் சம்பந்தமாக எடுத்துள்ள நடவடிக்கை போதுமானதாக இல்லையென்று குற்றம் சாட்டினார். அவருக்கு ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நீர்ப்பாசன வசதியைப் பெருக்கத்தான் வரவு செலவுத் திட்டத்தில் நடப்பாண்டில் ரூபாய் இருநூறு கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்காக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு நன்றி பாராட்ட விரும்புகிறேன். அதேசமயத்தில் அவர் ஒன்று செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்திய சர்க்கார் இருபது அம்சத் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. நமது சர்க்காரும் அதற்கு ஆதரவு தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதை வெற்றிகரமாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. விவசாயத் துணைத் தொழில் சம்பந்தமாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். எதிர்க் கட்சியினர் எடுத்துச்சொன்ன மாதிரி நான் குற்றச்சாட்டாக எதையும் சொல்ல விரும்பவில்லை என்பதை முதலில் உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். அதோடு மனப்பூர்வமாகச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தில் விவசாய முன்னேற்றத் திட்டங்கள் முனைப்பாக செயல்படுத்தப்படுகின்றன. இந்த அரசாங்கம் விவசாய

அபிவிருத்தித் திட்டங்கள் என்கிற அடிப்படையில், கால்நடை வளர்ப்புத் திட்டங்கள், பொறுக்கு விதைப் பண்ணைத் திட்டங்கள், மின்சாரத் திட்டங்கள் எனப் பலவற்றை வகுத்து இருக்கிறது. இவற்றை எல்லாம் நாங்கள் முழுமனதோடு வரவேற்கிறோம்.

ஒன்றை இறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் காலாகாலத்தில் விவசாயிகளுக்கு கடன் உதவி அளிக்கிறது. நில அடைமான வங்கி கிராம மக்களுக்கு குறுகிய காலக் கடன், நீண்ட காலக் கடன் என பலவகையில் பண உதவி செய்கிறது. சட்டமன்ற எதிர்க்கட்சி அங்கத்தினர்களும் முழு மனதோடு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.''

பயிற்சி—100





இணைப்புகள்

12. பொருள் குறிப்பு அகராதி

(பக்கம் என்று குறித்த எண்கள் தவிர மற்றவை விதி எண்களைக் குறிக்கும்)

அடுக்குத் தொடர்: 222–223.

அபிவிருத்தி: 'பு' வெட்டப் பெறுதல், பக். 162.

அமைப்பு: 'ப்ப' வெட்டப் பெறுதல், பக். 162.

அம்சங்கள்: சுருக்கம், 284.

அரசாங்கம்: ர/றம் (கீழ்) வெட்டப் பெறுதல், பக். 168.

அரசு நிர்வாகச் சொற்கள்: இணைப்பு–1, பக். 183.

அல்லாதார்: சுருக்கம், 285.

அவர்கள்: ள்/ழ் கொக்கி சுருக்கத்தில், 178.

அழுத்தமான கோடுகள் (thick strokes) மேல் நோக்கி எழுதப் படுவதில்லை, 15.

அனுசரணையாக: சுருக்கம், 286.

அனுசரித்து: சுருக்கம், 286.

ஆக: எழுதும் விதம், 73, 118.

ஆங்கில மொழிச் சொற்கள்: இணைப்பு–8, பக். 192.

ஆண்டு: சுருக்கம், 287.

ஆயினும்: எழுதும் விதம், 169.

ஆய்த எழுத்து: ஹ எழுதுதல், 53.

ஆரம்ப உயிர்க்குறிகள் (Initially joined vowels) உயிர்க்குறிகள் பார்க்க.

ஆரம்பத்தில் பெரிய சுழி: இடது வாட்டமாக நேர்கோடுகளுக்கு எழுதப்படுதல், 105(1); வளைவின் உட்புறம் வளைவு கோடுகளுக்கு எழுதப்படுதல், 105(2); கொக்கியுள்ள மெய்க் குறிகளுக்கு முன் எழுதப்படுவ தில்லை, 106; முன்னால் உயிர் வந்தால் எழுதப் படுவதில்லை, 107; ஸ்வ/சுவ என்பதைக் குறிக்கும், 105.

ஆரம்பத்திலும், முடிவிலும் எழுதப்படும் சுழிகளைப் படித்தல், 100, 124.

ஆராய்ச்சி: 'ச்ச' வெட்டப் பெறுதல், பக். 163.

ஆறாம் வேற்றுமை உருபுக்குறி உடையது என்பதற்கும் எழுதப்படுதல், 75.

ஆன: எழுதும் விதம், 118.

ஆனது: முடிவில் பெரிய சுழி பார்க்க.

இடது, வலது வாட்டம் (Left and Right Motion): 89; த, வ, ஷ, ள்ள, 179, 184; வர்,

வல், தர், தல், *137*; இடது வாட்டம்: *89*; சிறிய சுழி, *89*, *90–3*, *96*; நீண்ட சுழி, *119*, *121*, *123*; பெரிய சுழி, *105(1)*, *109(3)*, *112*; ல் கொக்கி, *129*; வர், வல், தர், தல், *137*; ல் கொக்கி, *155*.

இடுகுறிகள் (Arbitrary) சுருக்கம் *319*.

இடைப்படும் உயிர்கள் (Intervening vowels), *35*, விளக்கப் படம் பக். *13*; பாடச் சுருக்கம், பக். *17*.

இடையே: சுருக்கம், *78*.

இணைச் சொற்கள்: சுருக்கம், *224*.

இயக்கம்: சுருக்கம், *288*.

இரட்டிப்பு முறை (Doubling principle) *205–217*, எழுதும் இடம்: கீழ்க் கோடுகள், *215*; படுக்கைக் கோடுகள், *217*: மேற்கோடுகள், *216*; 'ங்' மெய்க்குறி, *207*; நேர்கோட்டு மெய்க்குறிகள், *208*, *209*; பன்மை விகுதி *213*, *214*; பாடச் சுருக்கம் பக். *96–97*; பொது விதி, *205*; மெய்க் குறிகள், *210*, *211*; வளைவு கோட்டு மெய்க்குறிகள், *206* வேறுபாட்டுக் குறிகள், *212*.

இரண்டு கோடுகளுக்கிடையே உயிர்க் குறிகள் *35*, *36*.

இல்லாதார்: சுருக்கம், *285*.

இலக்கியம்: 'லம்' வெட்டப் பெறுதல், பக். *168*.

இலாக்கா: 'ல' வெட்டப் பெறுதல், பக். *168*.

இன்றி: எழுதும் விதம், *74*.

ஈருயிர்கள் (Diphthongs) *58–71*; பாடச் சுருக்கம் பக். *28*.

ஈருயிர்க்குறி: *62*, ஆய்/அய், ஓய்/ஒய், ஊய்/உய் *62(1)*; சேர்த்து எழுதப்படுதல், *63(2)*; *64*, 'இ' யோடு சேரும் உயிரொலி, *63*, எடுத்துக் காட்டு, *243*, ஏய்/எய், ஈய்/இய் *62(2)*.

ஈற்று உயிர்க் குறிகள்: உயிர்க் குறிகள் பார்க்க.

உடனே: சுருக்கம், *77*.

உடைய/உடையது: *75*.

உண்டு: சுருக்கம், *289*.

உத்/உத்த/உத்தி: முன் ஒட்டு, *250*.

உத்தியோகஸ்தர்: சுருக்கம், *290*

உயிரெழுத்துக்கள் (Vowels): *21*, *22*, பாடச் சுருக்கம், பக். *12*.

உயிர்க்குறிகள் (Vowel Signs) *23*, *27*, *33*; உபயோகம் *25*, எழுதும் விதம், *26*; ஒவ்வொரு கோட்டிற்கும் அருகில் மூன்று இடம்–*24*; பக். *7*; குறித் தொடரின் நிலையை (Position) முதலில் வரும் உயிரொலி நிர்ணயித்தல், *39*; குறில் நெடில் வேறுபாடு, *23*; படிக்கும் முறை, *30*; ஆரம்ப உயிர்க்குறிகள், *27–31*, அட்டவணை, பக். *10*;

எழுதாத இடம், *29*; குறில் நெடில் வேறுபாடு இல்லை, *28*; ச/ஸ சுழிக்கு முன், *91*; 'த' கொக்கிக்கு முன், *149*; மெய்களுக்கு முன்னால் வரும் உயிரொலிகளுக்கு எழுதப் படுதல், *32*; ஈற்று உயிர்க் குறிகள், *33, 34*; தனிக்குறிச் சொற்களோடு சேர்த்தல், *42*; பன்மை விகுதிகளோடு சேர்த்தல், *136*; வேற்றுமை உருபுகளோடு சேர்த்தல், *76*; குறுங்கோட்டு உயிர்க்குறி, *142*; ஈருயிர்கள், குறுக்கிடும் உயிர்கள்–மூவுயிர்கள், அவ்வவற்றின் தலைப்பில் பார்க்க.

உரிமை: சுருக்கம், *291*.

உள்ள/து: சுருக்கம், *292*.

எண்கள்: அடுத்து வரும் வார்த்தைகள், *220*, எழுதும் முறை, *218*; நூறும் அதற்கு மேற்பட்ட பேரெண்களும், *219*; பாடச் சுருக்கம், பக். *106–7*; இணைச் சொற்கள்–எதிர்பொருள் வார்த்தை, *224*; வேறுபாட்டுக் குறிகள், *263*

எழுத்து: ஒலிவடிவம், வரி வடிவம், *1*.

எழுதிப் பழகும் முறை, *231*.

எழுதுமிடம் (position): மூன்று நிலைகள், *38*; எழுதும் வரிக்கு மேல், *38(1)*; எழுதும் வரியினூடே, *38(3)*; எழுதும் வரியின் மேல், *38(2)*; எழுதும் நிலையை குறித்தொடரின் முதலில் வரும் மேற்கோடோ கீழ்க்கோடோ காட்டும், *39*; குறித்தொடரின் நிலையை முதலில் வரும் உயிரொலி நிர்ணயிக்கிறது, *38*; பாடச் சுருக்கம் பக். *17*; ஒட்டு களுடன் கூடிய குறித்தொடர், *249*, இரட்டிக்கப்பட்ட கோடு கள், *215–7*; ஈருயிர்கள், *59*; *62–4*; சுருக்கத் தொடர், *82*; படுக்கைக் கோடுகள், *40*; பாதியாக்கப்பட்ட கோடுகள், *197*.

என்ற/று: சுருக்கம், *84, 99, 114*.

என்றால்: சுருக்கம், *70*.

ஐ, ஔ: உயிர்நெடில், *58*.

ஐ ஈருயிர்க்குறி சேர்த்து எழுதப்படுதல், *60, 61*; முதலிடத்தில் எழுதப்படுதல், *59*, வேற்றுமை உருபுக்குறி எழுதப்படுதல், *241*.

ஔ: ஈருயிர்க்குறி மூன்றா மிடத்தில் எழுதப்படுதல், *59*

கடல்: சுருக்கம், *293*.

கடைசியில் உயிரொலிவருதல், *97, 122, 157*.

கட்சி: 'க' வெட்டப் பெறுதல், பக். *164*.

கணக்கு: சுருக்கம், *294*.

கமிட்டி: 'ட' வெட்டப் பெறுதல், பக். *162*.

கமிஷன்: 'ஷன்' (வலது) வெட்டப் பெறுதல், பக். *165*.

கம்பெனி: 'க' வெட்டப் பெறுதல், பக். 164.

கல்: பன்மை விகுதி 'கள்' என்பதையும் குறித்தல், 135.

கவர்ன்மெண்டு: 'க' வெட்டப் பெறுதல், பக். 165.

கவிதைகள்: 228.

கழகம்: 'கம்' வெட்டப் பெறுதல், பக். 164.

களஞ்சியம்: சுருக்கம், 295.

கார்ப்பரேஷன்: 'கர்' வெட்டப் பெறுதல், பக். 165.

கிழமைகள்: இணைப்பு–5, பக். 191.

கீழ்க்கோடுகள் (Down strokes), 12; எழுதும் நிலை, 39, 197; ர/ற, 44–46; ஹ, 49–51; க்ஷ, 56.

குழு: 'க' வெட்டப் பெறுதல், பக். 164.

குறுக்கிடும் உயிர்கள், 141; பாடச் சுருக்கம், பக். 64; வேறுபாட்டுக் குறிகள்–143.

குறுங்கோட்டு உயிர்க்குறி: 142.

கூடாது: சுருக்கம், 69.

கூட்டு மெய்கள்: பக். 108.

கை தட்டல்: 230.

கொக்கியுள்ள மெய்க்குறிகள் (Hooked consonants) 6.

கொள்கை: 'கை' வெட்டப் பெறுதல், பக். 165.

கொள்ள: குறித்தொடர், 144.

ச/ஸ சிறிய சுழி: ஆரம்ப உயிர்க் குறிகளோடு சேர்த்தல், 91; கொக்கியுள்ள மெய்க்குறி களுக்கு கொக்கிக்குள் எழுதப் படுதல், 92; கோணங்களின் வெளிப்புறமாக எழுதுதல், 90(2); கோணம் உண்டாக் காத நேர் கோடுகளுக்கு இடது வாட்டமாக எழுதுதல், 90(3); தனித்திருக்கும் போது இடது வாட்டம், 89; முடிவில் எழுதப்படுவதில்லை, 101; முடிவில் தொடர்ந்து 'ம்' வரும்போது எழுதும் முறை, 102; 'ல்' கொக்கியிட்ட நேர்கோடுகளுக்கும், ர்,ல் கொக்கியிட்ட வளைவு கோடு களுக்கும், 146; வளைவு கோடுகளின் உட்புறமாக எழுதுதல், 90(1); 'ஹ'வுக்கு முன் வந்தால் 'ஹ'வின் சுழியே, பெரியதாக எழுதப்படுதல், 93.

சட்டமன்றச் சொற்கள்: இணைப்பு–4, பக். 190.

சந்தி எழுத்துக்கள்: 86.

சந்திர: முன் ஒட்டு, 253.

சர்க்கார்: 'ச்ச' வெட்டப் பெறுதல், பக். 163.

சர்வ: சுருக்கம், 282.

சாசனம்: ச/ஸ் வெட்டப் பெறுதல், பக். 167.

சாட்சி: சுருக்கம், 296.

சாஸ்திரம்: சுருக்கம், 297.

சிறப்புச் சுருக்கங்கள்: பார்க்க சுருக்கம்.

சிறப்புப் பெயர்கள்: 43, இணைப்பு–7, பக். 192.

சிறிய அரைவட்டம் (semi-circle) 'வ'–234; ஆரம்பத்திலும் முடிவிலும் எழுதப்படுவ தில்லை, 236–7, முன் பின் வரும் உயிர், 235.

சிறிய அரைவட்டம் 'ய': பார்க்க சுருக்கப்பட்ட 'ய'.

சிறிய கொக்கி (Small hook): ஆரம்பத்தில் ர், ல் என்பதற்கு, 127–131, முடிவில் ன், வ், என்பதற்கு 153–5.

சிறிய சுழி ((Small circle): ஆரம்பத்திலும் நடுவிலும் ச/ஸ வுக்கும், முடிவில் 'ம்' க்கும் எழுதப்படுதல் 88–104.

சுய/ஸ்வய: முன் ஒட்டு, 246.

சுருக்கங்கள் (Contractions) அமைத்துக் கொள்ளும் முறை: ஆரம்ப உயிர்க்குறிகளை விலக்கல், 81; இடுகுறி, 319; இணைச் சொற்கள், 224; இன்றியமையாக் கோடுகளை வைத்துக் கொள்ளுதல், 80; எழுதும் நிலை, 82, 83; ஒரு வார்த்தை இரண்டு முறை அடுக்கி வருதல், 222–3; 'சம்' சுழியை உபயோகித்தல், 104; சிறப்புச் சுருக்கங்கள் 270–279, பக். 130–131; 280; பக். 139–151, 281–308, சாதாரண சொற்களை வெட்டி எழுதுதல், 315. தனிக்குறியின் அடியாக அமைத்துக் கொள்ளல், 277; தொடர் வார்த்தைகள், 229; நடுவில் வரும் மெய்க்குறிகளை விலக்கி எழுதுதல், 279; நடுவில் 'ந்'க்குப் பிறகு 'த' விலக்கப் பெறுதல் 272; முதல் வார்த்தையின் கடைசி மெய்க்குறி அடுத்த வார்த்தையின் ஆரம்ப மெய்க் குறியானால் ஒன்றை விலக்குதல், 271; மூலக்குறித் தொடரை முன்னோ பின்னோ வைத்துக் கொண்டு எழுதுதல், 280; வார்த்தைகளை அடுத்து வரும் எண்கள், 221; வெட்டும் முறையையொட்டி ஒன்றுக்கொன்று வெட்டி எழுதுதல், 312,314; வேற்றுமை உருபுகள் ஒன்றுக்கு மேல் வரும்போது, 227; ள்/ழ் கொக்கி, 178; 'ழ்' வரும்போது விலக்கப் பெறுதல், 275; னம்/னும் என்பதே ணம்/ணும் என்பதற்கும் எழுதப்படுதல் 278; 'ன்' கொக்கி 170, 276; 'ஸ்'க்குப் பிறகு 'த' விலக்கப் பெறுதல், 273; 'ஸ்த' நீண்ட சுழியை அடுத்து 'னம்' வரின் 'ன' விலக்கப் பெறுதல், 274.

சுருக்கப்பட்ட (Abbreviated) 'ய': 68, 238–9.

சுருக்கெழுத்து (Shorthand) பேசும்பொழுது எழுத்துக்கள் பெறும் ஒலி வடிவத்திற்குத் தக்கபடி அமைதல், 1; வடிவம் நேர்கோடு, வளைவுகோடு (கொக்கி, சுழி, புள்ளி)

கொண்டு அமைதல், 4; எழுதும் முறை, பார்க்க பேச்சை எடுக்கும் முறை.

சுழிகள் (Circles): சிறிய சுழி, 88–104; நீண்ட சுழி, 119–126; படிக்கும் முறை, 100; பெரிய சுழி, 105–118; ர், ல் கொக்கி களோடு, 145–7.

சேர்க்கைக் கோடுகள் (Joined strokes): முன்கோட்டின் இறுதியும், பின் கோட்டின் தொடக்கமும் இணையும்படி கையை எடுக்காமல் சேர்த்து எழுதுதல், 19; வளைவு கோட்டு மெய் இரட்டிக்கும்போது 20.

ச்ச, ர/ற (மேல்): இரண்டுக்கும் உள்ள வேறுபாடு, 18; 'ச்ச' வுக்கு ர், ல் கொக்கி இல்லை, 132.

டர் என்பதே 'ற்ற' என்பதையும் குறித்தல், 134.

டிபார்ட்மெண்டு: 'ட' வெட்டப் பெறுதல், பக். 163.

ட்ச வுக்கு 'க்ஷ' எழுதுதல், 55.

'ண்' என்பது நடுவில் எழுதப்படும் விதம், 162; 'ன்' கொக்கியால் குறிக்கப்படுதல், 163

'த்' கொக்கி, 148–152, ஆரம்ப உயிர்க் குறியோடு சேர்த்து எழுதுதல், 149, 150; ஆரம்பத்தில் நேர்கோடுகளுக்கு வலது வாட்டமாக பெரிய கொக்கி, 148; பாடச் சுருக்கம், பக். 67; வளைவு கோடுகளுக்குப் போடப்படுவ தில்லை, 152; வளைவு கோடு 'ல'வுக்கு மட்டும் எழுதப் படுதல், 152; வாகுள்ள இடங் களில் நடுவிலும் எழுதப் படுதல், 151.

தக்க/து: சுருக்கம், 71.

த: மாற்று உருவம், 180–183 த, வ, ஷ, ள்ள, மாற்று உருவங்கள், 179–184.

தலைவர்: சுருக்கம், 298.

தனிக்குறிகள் (Logograms), 41

தனிக்குறிச் சொற்கள் (Grammalogues) 41, அதனடியாக சுருக்கம் அமைத்துக் கொள்ளல், 277, ஈற்று உயிர்க்குறி சேர்த்தல், 42, மெய்குறிகளின் வரிசையில் தொகுப்பு, பக். 194–196, 'ம்' சுழி சேர்த்தல், 103.

தன்: முன் ஒட்டு, 245.

தன் சுய/ஸ்வய: முன் ஒட்டு, 247.

திட்டம்: 'டம்' வெட்டப் பெறுதல், பக். 163.

துறை: ர/ற (மேல்) வெட்டப் பெறுதல், பக். 169.

தேசம்: சுருக்கம், 308.

தொடர்ச் சொற்கள் (Compound Words); 37, ச/ஸ சுழி அப்படியே வைத்துக் கொள்ளப் படுதல், 95.

தொழில்: 'த' வெட்டப் பெறுதல், பக். 166.

நடவடிக்கை: 'ந' வெட்டப்

பெறுதல், 167.

நடுவில் பெரிய சுழி, க, ச, ட, த, ப, என்பவற்றின் இனமான ங், ஞ், ண், ந், ம் என்பனவற்றைக் குறித்தல், 108, கோணங் களின் வெளிப்புறமாக எழுதப் படுதல், 109 (2); கோணம் உண்டாக்காத நேர்கோடு களுக்கும் இடது வாட்டமாக எழுதப்படுதல், 109 (3); போடப் படாத இடங்கள், 111; வளைவு கோடுகளின் உட்புறமாக எழுதப்படுதல், 109 (1); 'ற' என்பதன் இனமான 'ன்' என்பதற்குப் போடப்படுவதில்லை, 110.

நல்ல: குறித் தொடர், 144.

நிறுத்தக் குறிகள் (Punctuations) 43.

நீண்ட சுழி: படிக்கும் முறை, 124; பன்மை விகுதி சேர்த்தல், 126; பாடச் சுருக்கம், பக். 53; முடிவில் 'ம்' சுழி சேர்த்தல், 125; 'ஸ்த' என்பதற்கு எழுதும் விதம், 119; சுழி அல்லது கொக்கியுள்ள மெய்க்குறிகள் வந்தால் எழுதப்படுவதில்லை. 120; நடுவில் வாகுள்ள இடங் களில் எழுகப்படும், 121; முடிவில் உயிரொலி வரும்போது எழுதப்படுவ தில்லை, 122.

ஸ்தர்: எழுதும் விதம், 123

நீதிமன்றச் சொற்கள்: இணைப்பு—3, பக். 188.

நெருக்கடி: 'நர்' வெட்டப் பெறுதல், பக். 168.

பகுதி: 'ப' வெட்டப் பெறுதல், பக். 161.

பங்கு: 'ப' வெட்டப் பெறுதல், பக். 161.

பஞ்சாயத்து: சுருக்கம், 283.

படி/பட/பட்ட: சுருக்கம், 71.

படிப்பு: 'ட' வெட்டப் பெறுதல், 163.

படுக்கைக் கோடுகள் (Horizontal Strokes) 14.

பட்சம்: சுருக்கம் 299.

பதி: பின் ஒட்டு, 255.

பத்திரம்: 'பம்' வெட்டப் பெறு தல், பக். 161.

பத்திரிகை: 'ப' வெட்டப் பெறுதல், பக். 160.

பயிற்சிகளுக்கான குறி விளக்கம், (Key) பக். 197–235.

பற்றி: பின் ஒட்டு, 257.

பன்மை விகுதி: 'கல்' எழுதுதல், 135, 265; 'க'வுக்கு 'ள்'. கொக்கி, 266; சிறுகோடு எழுதுதல், 126, 168, 214, 267; புறனடை, 269; 'ள்' கொக்கி எழுதுதல், 177, 213, 268.

பாங்கு: 'ப' வெட்டப் பெறுதல், பக். 162.

பாதியாக்கும் முறை (Halving Principle), 192–204;

எழுதும் இடம், 197, சுழி, கொக்கி சேர்த்தல், 195, பாடச் சுருக்கம், பக். 91–2; பாதிக் கோடும் முழுக்கோடும் சேர்த்து எழுதப் படாத இடம், 203; பாதியாக்கப் படாத மெய்க் குறிகள், 198–202; பாதியாக்கி அழுத்தி எழுதப்பெறும் மெய்க்குறிகள் 194; பொது விதி, 192.

பாராட்டு: 'ப' வெட்டப் பெறுதல், பக். 161.

பிரச்சினை: சுருக்கம், 300.

பிரவேசம்: சுருக்கம், 301.

பிரேரணை: சுருக்கம், 302.

பிழம்பு: சுருக்கம், 303.

பிறமொழிச் சொற்கள், 43.

பின்னம், 219.

புண்ணிய: முன் ஒட்டு, 251.

பூர்வமாக/ன: சுருக்கம், 304.

புறனடை: பொது, 320.

புஷ்ப/புஷ்பக: முன் ஒட்டு, 252.

பெரிய சுழி (Large Circle) ஆரம்பத்தில், நடுவில், முடிவில் பெரிய சுழி: பார்க்க பாடச் சுருக்கம், பக். 49.

பேச்சை எடுக்கும் முறை: கவிதைகள், 228; காதில் விழாத இடங்கள், 230; கை தட்டும் இடங்கள், 230; தொடர் வார்த்தைகள், 229; நகைச்சுவைப் பகுதி 226; பழக்கமில்லாச் சொற்கள், 227; முக்கியமான பகுதிகள், 225.

பேராசிரியர்: 'பர்' வெட்டப் பெறுதல், பக். 162.

போக்குவரத்து: 'ப' வெட்டப் பெறுதல், பக். 161.

போது/பொழுது: பின் ஒட்டு, 256.

மகா/மஹா: முன் ஒட்டு, 254.

மசோதா: 'ம' வெட்டப் பெறுதல், பக். 167.

மண்டபம்: சுருக்கம், 305.

மதிப்பிற்குரிய: சுருக்கம், 313.

மந்திரி: ர/ற (மேல்) வெட்டப் பெறுதல், பக். 168.

மனப்பான்மை: 'ம' வெட்டப் பெறுதல், பக். 167.

மாண்புமிகு: சுருக்கம், 313.

மாதங்கள்; இணைப்பு 6 பக். 191.

மாவட்டம்: 'மம்' வெட்டப் பெறுதல், பக். 167.

மாற்று உருவங்கள் (Alternative Forms) த, வ, ஷ, ள்ள, 179–184; பாடச் சுருக்கம், பக். 81; மெய்க்குறிகள், 10; ர/ற, ஹ, க்ஷ, 44–57; பாடச் சுருக்கம், பக். 21–22; மாற்று உருவங்கள் வர், வல், தர், தல், 137; பாடச் சுருக்கம், பக். 59.

மானியம்: 'மம்' வெட்டப் பெறுதல், பக். 167.

முக்கியத்துவம்: 'த்தம்' வெட்டப் பெறுதல், பக். 166.

முடியும்/முடியாது: பின் ஒட்டு, 260.

முடிவில் உயிரொலி வருகிற போது, 97, ன், வ், கொக்கி எழுதப்படுவதில்லை, 157.

முடிவில் பெரிய சுழி: தா/ஆனது என்பதற்கு, ம் சிறிய சுழி போலவே எழுதபபடுகிறது, 112; என்ற/று வந்தால் எழுதும் முறை, 114; ஐ, ஆய் சேர்ந்தால் எழுதும் முறை, 115; 'ம்' வந்தால் எழுதும் முறை, 113.

முதலெழுத்து: எழுத்தின் வகை, 2.

முயற்சி: 'ச்ச' வெட்டப் பெறுதல், பக். 164.

முறை: ர/ற (மேல்) வெட்டப் பெறுதல், பக். 169.

முன் ஒட்டுகளும், பின் ஒட்டு களும், 244–261; அமையும் வகை, 244; ஆரம்பத்தில், 245–254; பாடச் சுருக்கம், பக். 120; 121; முடிவில் 255–261.

முன்னேற்றம்: 'ற்றம்' வெட்டப் பெறுதல், பக். 163.

மூவுயிர்க் குறி (Triphones) 65, எடுத்துக்காட்டுகள், 242.

மெய்க்குறிகள், 4, அட்டவணை–1 பக். 4. நீளம், 16, பெயர்கள், 17, வகைகள், 11.

மெய்யெழுத்துக்கள் (Consonants), 3, பாடச் சுருக்கம், பக். 6, வ, ய, 233.

மெல்லிய கோடுகள், மேல்நோக்கியோ, கீழ் நோக்கியோ எழுதப்படுதல், 15.

மேற்கோடுகள் (Upstrokes); 13, பாதியாக்கப்பட்ட மேற்கோடு, 197.

மேன்மைதங்கிய: சுருக்கம், 313.

'ம்' சிறிய சுழி: ச/ஸ வைத் தொடர்ந்து வந்தால் எழுதப் படும் விதம், 102; தனிக் குறிச் சொற்கள், சுருக்கம் ஆகியவற்றோடு சேர்த்தல், 103, நடுவில் எழுதப்படுவ தில்லை, 101, நேர்கோடு களுக்குப் பின் 'வும்' வந்தால், 'வ்' கொக்கிக்குள் எழுதுதல், 167, வளைவு கோடுகளுக்குப் பின்'னும்' வந்தால் 'ன்' கொக்கிக்குள் எழுதுதல், 167, வேற்றுமை உருபுகளோடு சேர்த்தல், 98,

'ம்ப' மெய்க்குறி, 9, உயிரை முன்னதாகக் கொண்டு வந்தால் எழுதப்படும் 116 (1) கீழ்க் கோடுகளுக்குப் பிறகு வந்தாலும் எழுதப்படும், 116 (3); சுழிகளை முன்னதாகக் கொண்டு வந்தால் எழுதப் படும், 116 (2); நடுவில் பெரிய சுழி, 109, 117.

ர/ற: கீழ்க்கோடு, 44–6, மேற்கோடு, 45, 47–8, முடிவில் 'ன்' வந்தால் எழுதப் படுதல், 158.

ரயில்வே: ர/ற (கீழ்) வெட்டப்

பெறுதல், பக். 168.

ர் கொக்கி: ஆரம்பத்தில் நேர் கோடுகளுக்கு வலது வாட்டமாக சிறிய கொக்கி எழுதப் படுதல், 128; வளைவு கோடுகளுக்கு வளைவின் உட்புறம் எழுதப்படுதல், 130.

ர், ல் கொக்கிகள், 127–140; கொக்கியிடப் பெறாத மெய்க் குறிகள், 132; கொக்கியிடப் பெற்ற குறித் தொடர்களைப் படிக்கும் முறை, 133; பாடச் சுருக்கம், பக். 59.

ராணுவம்: ர/ற (மேல்) வெட்டப் பெறுதல், பக். 169.

ல: எழுதும் வாகு, 8, 94, 185, கீழ்நோக்கி எழுதப்படுதல், 188, 189, சுழியின் வாட்டமாக எழுதப் படுதல், 187; முடிவில் 'ன்' வரும்போது எழுதப்படும் விதம்; 159; மேல்நோக்கி எழுதப்படுதல், 186.

ல, ஷ, மேலும் கீழும், 185–191; பாடச் சுருக்கம், பக்.85.

ல் கொக்கி: ஆரம்பத்தில் நேர் கோடுகளுக்கு இடது வாட்டமாக சிறிய கொக்கி எழுதப் படுதல், 129; ஆரம்பத்தில் வளைவு கோடுகளுக்கு வளைவின் உட்புறம் பெரிய கொக்கி எழுதப்படுதல், 131.

வகுப்பு: 'வ' (இடது) வெட்டப் பெறுதல், பக். 166.

வங்கி: 'வ' (இடது) வெட்டப் பெறுதல், பக். 166.

வசதி: சுருக்கம், 306.

வடமொழிச் சொற்கள்: இணைப்பு–9, பக். 193.

வட்டம்: 'டம்' வெட்டப் பெறுதல், பக்.162.

வ: மாற்று உருவம், 180–183.

வருவாய்த் துறைச் சொற்கள்: இணைப்பு–2, பக். 187.

வரி: ர/ற (மேல்) வெட்டப் பெறுதல், பக். 169.

வலது வாட்டம்: 89, 'த' கொக்கி, 148; 'ர்' சிறிய கொக்கி நேர்கோடுகளின் ஆரம்பத்தில் எழுதப்படுதல், 128; வர், தர், வல், தல், 138; 'ன்' கொக்கி, 153.

வளர்ச்சி: 'ச்ச' வெட்டப் பெறுதல், பக். 164.

வாய்ந்த: சுருக்கம், 307.

வாரியம்: 'வம்' (இடது) வெட்டப் பெறுதல், பக். 166.

விச்வ/விசுவா/விசுவே: முன் ஒட்டு, 248.

விரிவெழுத்து (Longhand).

விரும்புகிறேன்/கிறார்கள்: பின் ஒட்டு, 261.

விலக்கு: 'வ' (இடது) வெட்டப் பெறுதல், பக். 166.

வினைச் சுருக்கம்: விளக்கம், 87, 316–8.

விஷயம்: 'ஷம்' (இடது) வெட்டப் பெறுதல் பக். 165.

வெட்டும் முறை: விளக்கம், 310, 311.

வேறுபாட்டுக் குறிகள்: 262–269; இரட்டிக்கும் முறை, 212; உடன்பாடு, எதிர்மறை, 263; உயிர்க்குறியால் வேறு படுத்தல், பக். 122; குறுக்கிடும் உயிர்கள், 143; மெய்க்குறியால் வேறு படுத்தல், பக். 124; விளக்கம், 262.

வேற்றுமொழிச் சொற்கள், 43, 227.

வேற்றுமைகள் (Declension of Nouns) அட்டவணை–3; பக். 29; உருபுக் குறிகளாடு 'ம்' சுழி சேர்க்கப்படுதல், 98; சிறப்புக் குறிகளோடு ஈற்று உயிர்க் குறி சேர்த்தல், 76, 77; சிறப்புக் குறிகள் விரிவாக்கம், 73–5, 78; பாடச் சுருக்கம், பக். 32; விளக்கம், 72.

வை: ஈருயிர்க்குறி, 66, 67, 240

'வ்' கொக்கி: நேர்கோடுகளுக்கு, 155; வளைவு கோடுகளுக்குக் கிடையாது, 156; நடுவில் 'த' என்பதற்கு எழுதப்படுதல், 165; வசதியில்லாத இடங்களில் எழுதப் படுவதில்லை, 161; வசதியுள்ள இடங்களில் எழுதப்படுதல், 160; முடிவில் உயிரொலி வந்தால் எழுதப் படுவதில்லை, 157.

ள்/ழ் கொக்கி, 171–8; ஆரம்பச் சேர்க்கையுடைய நேர்கோடுகளுக்கு ஆரம்பச் சேர்க்கையின் மாற்றுப்புறம், 174; ஆரம்பச் சேர்க்கை எதுவும் இல்லாத நேர்கோடுகளுக்கு கடைசியாக வரும் உயிர்க்குறியின் மாற்றுப்புறம், 173; உருபுகள் சேரும்போது கொக்கியை வைத்துக் கொள்ளல், 176; சுருக்கத்தில் 'அவர்கள்' என்பதற்கு, 178; நடுவில் எழுதப் படுவதில்லை, 175; பாடச் சுருக்கம், பக். 78, முடிவில் வளைவு கோடுகளுக்கு வளைவின் உட்புறம், 172.

ள்ள: எழுதும் விதம், 9; மாற்று உருவம், 184.

'ன்' கொக்கி: சுருக்கத்தில்: 'தான்', கொண்டு', என்பவற்றுக்கு எழுதப்படுதல், 170, 276; நடுவில் வசதியுள்ள இடங்களில் எழுதப்படும், 160; நேர் கோடுகளுக்கு, 153; நேர்கோடுகளுக்குப் பின், னம், னும் வருதல், 166; முடிவில் உயிரொலி வந்தால் எழுதப்படுவதில்லை, 157; வசதியில்லாத இடங்களில் எழுதப்படுவதில்லை, 161; வளைவு கோடுகளுக்கு 154.

ன்/ம் பரியந்தம்: பின் ஒட்டு 259.

ன்/ம் பொருட்டு: பின் ஒட்டு, 258.

ன்/வ், கொக்கிகள், 153–170, பாடச் சுருக்கம், பக். 72–73.

ஜில்லா: 'ஜ' வெட்டப் பெறுதல், பக். 164.

ஜோடி மெய்க்குறிகள் (Pairs of Consonants) 5.

ஸ்கர்: எழுதும் முறை, 147.

'ஷ' எழுதும் போக்கு, 8; மாற்று உருவம், 180–183; வலது வாட்டம் மேல்நோக்கி கீழ்நோக்கி எழுதப்படுதல், 191.

'ஷ்ட' குறி, 204.

ஹ': கீழ்க்கோடு, 49–51; தமிழ் ஒலிக்கேற்ப எழுதுதல், 54; மேற்கோடு, 52.

'க்ஷ' கீழ்க்கோடு, 56; தமிழ் ஒலி 'ட்ச'வுக்கு எழுதப் பெறுதல், 55; மேற்கோடு, 57.